**BILINGUAL FORTNIGHTLY**

# ஒரு பேப்பர்
## ORU PAPER

Paper - 03 Issue - 54 01 Friday September 2006 விற்பனைக்கல்ல

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




**OFF LICENCE & ON LICENCE**

- New Personal Licence Holder (NC-PLH) & Premises Supervisor (DPS) course
- உங்களுக்குரிய Personal Licence எடுக்க வேண்டிய சகல உதவிகள்.
- புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence, வேறும் வழி முறைகள். செய்து தரப்படும்.
- Running & Established Shops for sale/to buy anywhere in the UK
- Food-Hygiene, Health & Security, Shop owns

No Win No Fee Premises licence for Chicken shop, Florist, Petrol stations

www.ltta.co.uk

**No win No fee**

LTTA LTD
Licence Trade Training Academy

தொடர்புகளுக்கு Mr. Ravi
Head office, System House, 19 Pershore Road south. Birmingham B30 3EE
Tel : 07782 223 005

**ABBEY TRAINING. NET**

- OFF Licence/ Restaurant ... Personal Licence ...
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- ... OFF Licence / Restaurant Premises Licence ...
- LIFE IN THE UK - ...
- ... Course ...

தொடர்புகொள்ள Thavanessan
020 8640 9900 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425

**We provide following Legal Services:**
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration

**We hold Legal Aid Franchise in Immigration & Crime**

**SIVA BUSINESS TRAINING**
எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்
Citzenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For OFF Licence and On Licence)
National Certificate
for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (NDDPS)
- New Premises Licence
- Transfer of Licence
- Change of DPS
- Night Cafe Licence

Siva 020 8683 6544, 079 0480 6371
Challenger House 616, Mitcham Road, Croydon CR0 3AA

**MortgageLink** *The National Mortgage Network*

Deposit பிரச்சனையா?
குறைந்த Deposit 5% உடன் வீடு வாங்க வேண்டுமா?
உங்களுக்கு mortgage பெற்றுத்தருவதற்கு உரிய எமது கட்டணத்தில் 50% தள்ளுபடி (Broker Fee 50% off) குறுகிய காலத்திற்கு மட்டும்.
Credit Cardகளுக்கு அதிகவட்டி கட்டுகிறீர்களா? உங்களுக்கு சொந்தமாக வீடு இருந்தால் Secured Loan பெற்று கடனை அடைத்து பெரும் தொகை பணத்தை மீதப்படுத்துங்கள்.

Mobile: 07930 62 65 85
020 8946 5566
Nearest underground: Tooting Broadway - Northern Line
YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

**LONDON ACCIDENT CLAIM LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP

**Had an accident – Not your fault**
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட....
- தனிநபர் அனர்த்த நஷ்ட ஈடு
- புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புகளுக்கான பூரண நஷ்ட ஈட்டுத் தொகை
- வருமான இழப்புக்கள்
- வாகனப் பிரதியீடு • வாடகை வாகனம்

**NO WIN - NO FEE**
Tel / Fax: 020 8665 7667 Mob: 07950 953 514
Call Free: 0800 032 6798

**Landlords Insurance**
COVERSURE
INSURANCE SERVICE
Competitive rates for all tenant types includes HMOs, DSS, Council Let
Underwritten by a major insurer. Competitive, Quick and Expert advice
இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான வழி
Exclusive 15% discount for "Accredited" Landlord
தொலைபேசி
0870 4585 680
தொடர்பு கொள்ளுங்கள்
Authorised and Regulated by the Financial Services Authority No:307008

## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

## Properties and Financial Services Ltd.

- வியாபார வங்கிக்கடன்
- விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
- வாடகை வீடுகள்
- காப்புறுதி
- மோட்கேஜ் (Mortgages)

**100% Mortgage Specialist**

- **100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்**
- **வருமான அத்தாட்சி அவசியமில்லை**
- **முற்பணம் (Deposit) அவசியமில்லை**
- **ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்**
- **முத்திரை தீர்வு அவசியமில்லை**
- **உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்**



74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk





**POS TECH** POS TECH LTD
EPOS SOLUTION
020 8873 1710

+ TOUCH SCREEN
+ STOCK CONTROL
+ PROMOTIONS & OFFERS
+ SHELF LABELS
+ SPECIAL 'Z' REPORT
+ ACCOUNT CUSTOMERS
+ ACCESS FROM HOME
+ FREE 50,000 ITEM LIST
+ STAFF SECURITY
+ LINK WITH SAGE LINE 50



**RETAILS TILLS**
**RESTAURANTS KIT**
**NEWS ROUND**

TOUCH SCREEN TILL £1600
IBM PC BASE TILL £900

NISA OCS LINK/ C CARD LINK
PAY POINT/ PAYZONE LINKS

**020 8873 1710**



* FREE SUPPORT * FREE BARCODE PRINTER
* INTEREST FREE PAYMENTS OPTIONS
* FREE LASER PRINTER

* LIMITED OFFERS



Losing a loved one is a traumatic time

# INDIAN FUNERAL DIRECTORS

## இறுதிக்கிரியை மண்டபம்

Our comprehensive service includes:

Large Prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
All religious rites, ceremonies and wishes respected and administered
Modern, fully equipped washing & dressing facilities
Funeral Ceremony items provided.

Foremost Indian Funeral Directors in England Serving the Asian Community since 1984

**For a fast, efficient & professional service, contact:**
Bharat Shah, Sanjay Shah, Neeta Shah or Alka Shah on
Tel: 020 8952 5252
24 Hours Mobile: 0777 030 56 44
Call us at anytime for a complete package price

எம் சாஸ்திர சம்பிரதாயங்களுடன் இறுதிக் கிரியைகளை நடத்தி துயருறும் மனங்களுக்கு ஆறுதல் அளிப்பதே எமது நோக்கம்

44 South Parade, Mollision Way,
Edgware, Middlesex HA8 5QL



# BNM FINANCE



*உங்கள் சேமிப்புக்களை பெருக்குவதும் பாதுகாப்பதுமே எங்கள் குறிக்கோள்.*

Commerical Finance Upto 85% L.T.V
100% avialable with additional Security
BUY TO LET Mortgages
Secured Loans also Available now!



Credit Problems, Arrears, CCJ's Self Employed? We can help!

Call us
**020 8488 1614**






# Anderson's

## Letting | Sales | Mortgages

எளிவனையேனும் தனிவனை வேணும்!
மனநிறைவுடன் மனை அமைத்திட, விற்க,
வாடகைக்குப் பெற இலவச ஆலோசனைகட்கு நாடுங்கள்!!!

***Print Tone Amalan* - 07956 375 526**
***Future Homes Murali***

**Tel: 020 8503 5276**
Fax: 020 8552 2393
374 High Street North, Eastham, London E12 6PH
(Print Tone அலுவலகத்துக்குள்ளே)

## பாராளுமன்ற முன்றலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இலண்டன் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் சிங்கள அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவதற்காகவும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் 30.08.06 அன்று இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு முன்னால் கூடினர்.

காலை 11 மணியிலிருந்து மாலை 7 மணி வரை நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிங்கள அரசாங்கத்திற்கு எதிரான சுலோகங்களையும் இனவெறி அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்ளும்படி இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளைக் கோரும் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இளையவர்கள் சிங்கள் அரசின் கொடூரங்களை இந்நாட்டவர்களுக்கு எடுத்தச் சொல்வதிலும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

குறகிய கால அவகாசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மக்களின் ஒத்துழைப்புக் குறித்து ஏற்பாட்டாளர்கள் திருப்தியடைந்திருந்ததைக் காணமுடிந்தது.

## Jolly Stars 20 Cup





ஆகஸ்ட் 28ம் திகதி நடைபெற்ற Jolly Stars 20 Cup விளையாட்டுப் போட்டியின் பெறுபேறுகள்.

**Cricket**

முதலாவது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
இரண்டாவது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**Volley Ball**

முதலாவது Friends விளையாட்டுக் கழகம்

இரண்டாவது சுபன் விளையாட்டுக் கழகம்

**Net Ball – Open**

முதலாவது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

இரண்டாவது ஸ்ரான்லி கல்லூரி

**Net Ball** - 16 வயது வரை

முதலாவது ஸ்ரான்லி கல்லூரி

இரண்டாவது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



Net Ball Queen - தர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கிரிக்கெட்

Man of the match - சதீஸ் மத்திய கல்லூரி
Man of the tournament - சிறீகுமார் இந்துக் கல்லூரி

## முத்துமாரி அம்மன் தேர்









## இலெஸ்டரில் விசேட பூசையும் இரங்கல் கூட்டமும்





முல்லைத்தீவில் ஸ்ரீலங்கா அரச படைகளின் கோரத் தாண்டவத்தில் பலியான 61 சிறார்களுக்கும் அஞ்சலி செலுத்தியும், களத்தில் நிற்கும் போராளி களுக்கு ஆசி வேண்டியும் இலெஸ்டர் ஸ்ரீ முருகன் கோயிலில் 18.08.06 அன்று விசேட பூசை வழிபாடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவான இலெஸ்டர் வாழ் மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

சிவஸ்ரீ. கணேச சண்முகதாச குருக்கள் பூஜை வழிபாடடை நடத்தி இரங்கல் உரையாற்றினார்.

குழந்தைகளுக்கு அஞ்சலி செய்யும் வகையில் ஒன்பது தீபங்கள் ஏற்றப் பட்டன.

கோயிலின் நிர்வாகத் தலைவரும், தேசப் பற்றாளருமான திரு.துலங்க நாதன் மற்றும் தமிழ் பற்றாளர் திரு. கிருஷ்ணராஜா ஆகியோர் உரையாற்றி னர்.

கலந்து கொண்ட மக்களில் பலர் களத்தில் நிற்கும் போராளிகளுக்காக அர்சனை செய்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

MONEY IN MINUTES TO SRI LANKA




India, Usa, Canada, Australia
Transfers to over 120 Countries

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை.
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC · Commercial Bank · HNB · People's Bank · Seylan Bank Limited · Sampath Bank · Bank of Ceylon

Head Office : 125 -127 Bramley Road, Oakwood, London N14 4UT

Open 7 Days

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

# Success of our youngsters


Bavan


Krishna

*Oru Paper* is proud to publish the names of Tamil students who have excelled in the public examinations held this year and the results of which were released recently. The following list is not exhaustive but when we approached some parents they were reluctant to provide information. We respect their decision but one that baffles us. We are engaged in this exercise only to highlight the achievements of our youngsters and to encourage others also to do well. We will be very happy to receive information on the achievements of our youngsters, whether academic or otherwise and to include them in our future issues. Congratulations to all those Tamil students who have excelled themselves in the examinations.

| | |
|---|---|
| **GCE 'A' Level** | |
| Bavan Sasikantharajah | - 3 A grades |
| Kasthuri Sarvananthan | - 3 A grades |
| **GCSE** | |
| Krishna Nathan | - 8 A* and 2 A grades |
| Piranavan Thayaparan | - 8 A* and 2 A grades |
| Eason Anantharajah | - 12 A* grades |

# புதிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பணியாளர்.

2004, 2005, 2006 யூன்வரை உள்ள காலப்பகுதியில் புதிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து வந்த 427,000 பேருக்கு வேலை அனுமதி வழங்கப்படடும், கட்டிடப் பகுதியில் பணிபுரிபவர்களையும் சேர்த்தால் மொத்தத்தில் 6 இலட்சம் பேர் வந்துள்ளார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அறிக்கைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, புதிதாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கபோகும் பல்கேரிய றூமேனியா ஆகிய நாடுகளிலிரந்து வருவோருக்கு வேலைவழங்கும் விடயத்தில் அரசு முன் எச்சரிகையாக எதுவுமே சொல்லவில்லை. ஆனால் வேலை அனுமதி சம்பந்தமாக ஊடகங்கள் ஆதாரமில்லாத பலவற்றைக் கூறுகின்றன. தலையங்கங்களைப் பார்த்தாலே தலை சுற்றுகிறது. வேலையில்லாத் திட்டாட்டம் கூடப்போகிறது. பிரித்தானியர் சம்பளம் அரைவாசியாகப் போகிறது. புதிய பிள்ளைகளின் வரவால் பாடசாலைகள் தாக்குப் பிடிக்கமாட்டாத நிலை உருவாகப்போகுது. இப்படி பலவகையான தலையங்கங்கள்.

ஆனாலும் நடுநிலை நாளேடுகள் உண்மையை எழுதுகின்றன. ஒரு செய்தி றூமேனியர் இங்கு எயிட்ஸ் பரப்பப் போகிறார்கள் என்பது. ஆனால் அங்கு .7 ஏழு வீதத்தினரே எயிட்ஸ்சால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த விகிதம் இங்குள்ளதிலும் சற்றுக் குறைவான விகிதம். அடுத்த செய்தி வந்தவர்கள் குறைந்த சம்பளத்தில் வேலைசெய்வதால் இங்கு வேலைசெய்பவர்கள் சம்பளம் வீழ்ச்சி காணப்போகுது. சென்ற மே மாதத்திலும் ஜ?ன் மாதம் இவர்கள் கூடுதலாய் வேலைசெய்யும் கட்டிடப் பகுதியில் இங்குளள்வர் வருவாய் .1 வீதத்தால் கூடியுள்ளதாம். பாடசாலைகள் வைத்தியசாலைகள் முறையே கூடுதல் பிள்ளைகளை நோயாளிகளைச் சமாளிக்கமுடியாத நிலை தோன்றும் என்று கூறல். 8 விதமான இங்குள்ள இம்மக்கள் 10 வீதத்தால் தேசிய வருவாயைக் கூட்டுகிறார்களாம். அவர்கள் கட்டும் வரியால் வட்டிவீதத்தை ..5 வீதத்தால் குறைக்க முடிகிறதாம். றூமேனியர் பல்கெரியர் விடயத்தில் என்ன நடக்கப்போதென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

*- மாசிலாமணி*

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**செப்ரெம்பர் 3 ஞாயிறு:** வெண்புறா நிறுவனம் நடாத்தும் 'நர்த்தன மாலை' தாயகப் பாடலுக்கான நடனப் போட்டி நிகழ்ச்சி. இடம்: The Beck Theatre, Grange Road, Hayes, Middlesex, UB3 2VX தொலைபேசி: 020 8672 4100

**செப்ரெம்பர் 16 சனி:** மாலை 6.30 மணிக்கு காயத்திரி ராஜசேகரன் அவர்களின் நடன நிகழ்ச்சி. இடம்: St. Andrews church of England high school, Warrington Road, Croydon, CR0 4BH அனுமதி - £15 & £25

**செப்ரெம்பர் 17 ஞாயிறு:** மாலை 6.30 மணிக்கு காயத்திரி ராஜசேகரன் அவர்களின் நடன நிகழ்ச்சி. இடம்: Winston Churchill Hall, Manor Farm Site, Pinn Way, Ruislip, Middlesex, HA4 7QL ஆதரவு - Manitha Neyam Trust அனுமதி - £10.

# செய்தித் துணுக்குகள்

உடற் பருமன் உள்ள பெண்களுக்கு கற்கமாவற்கான சிகிச்சை இலவசமாக வழங்குவதை நிறுத்தும்படி சுகாதாரப் பகுதியினருக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அப்படியானவர்கள் அச் சிகிச்சையால் பாதிப்புக்குள்ளாகிறார்களாம்.

• • •

பிரித்தானியரின் வங்கிக் கணக்கு விபரங்கள் நைஜீரியாவில் 20 பவுணுக்கு குறைவான விலையில் விற்கப்படுகிறதாம். இதனால் கணனி விற்பவர்கள் தங்கள் கணக்குளை நீக்குவது மட்டும் போதாது பிரதான நாடாவையே எடுத்துவிட்டு விற்கும்படி ஆலோசனை வழங்கப்படுகிறார்கள்.

• • •

பிரித்தானியாவின் உள்நாட்டமைச்சர் ஜோன் றீட் ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்களை உள்நாட்டமைச்சுக்கு அழைத்து பயங்கரவாதம் சம்பந்தமான விளக்கவுரையும் கலந்துரையாடலும் ஆகஸ்ட் நடுப்பகுதியில் நிகழ்த்தி உள்ளார்.

• • •

புளோறிடாவை 50 மைல் வேகத்தில் 10 மணி நேரம் தாக்கிய ஏனஸ்ரோ என்னும் புயற்காற்று அங்கு ஒரு அவசரகாலச் சூழலையே உருவாக்கி விட்டது. அதன் தாக்கம் மறுமுனையில் உள்ள கியூபாவையும் தாக்கக் கூடுமாம்.

• • •

பாலைவனத்தில் வெள்ளம் காரணமாக 100க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளார்கள். இது விசித்திரமான செய்திதான் ஆனால் ராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் அண்மையில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன்பும் அங்கு இப்படி ஒரு வெள்ளம் ஏற்பட்டதற்கான பதிவு உள்ளதாம்.

• • •

வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் கொண்டுபோன கதையாக மேலதிக 3 கோள்களை உள்ளடக்க இருந்த விஞ்ஞானிகள் கடந்த 75 ஆண்டுகளாகக் கோளாக இருந்த புளூட்டோவை தரம் இறக்கி விட்டார்கள். இனி கோள்களின் எண்ணிக்கை எட்டுத்தான்.

• • •

பாகிஸ்தான் அரசு பாலுசிஸ்தானின் விடுதலை அமைப்பின் முன்னோடிகளில் ஒருவரான நவாப் அக்பர் பக்ரி என்பரை தந்திரமாக கொன்று அம் மாகாணத்தில் பதட்ட நிலையை உருவாக்கி உள்ளது.

விடுதலைப் போரில், தலைவர்களைக் கொல்லும் திட்டம் வகுத்த சூத்திரதாரி வேறு யாருமல்ல தற்போதைய பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவரான செசாட் அஸ்லாம் செளத்திரிதான்.

• • •

மல்யுத்தப் போட்டி பார்த்த 47 பேர், அவர்கள் ஏறி நின்ற கொங்கிறீற் நீர் கொள்கலம் நொருங்கியதால் அதே கொள்கலனின் கொங்கிறிற் கற்களுள் நசிபட்டு இறந்தள்ளார்கள். இதுவும் துர்அதிஷ்டவசமாக ராஜஸ்தானில் தான் நடந்துள்ளது.

• • •

தனது 116வது வயதில் ஈகுவாடரில் இறந்த மேரியா எஸ்தர் டி கேபோவிலா என்பவர்தான் உலகிலேயே கூடிய காலம் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவருக்கும் போட்டி உண்டு. இவருக்கு 11 மாதங்களின் பின் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் எலிசபெத் போல்ட்டன் என்பவர். இன்னும் ஒரு ஆண்டு வாழ்தாலே இவர் சாதனையாளராகி விடுவார்.

• • •

அந்த 42 வயதுப் பெண்ணோ கடைசிநிலை மார்புப் புற்று நோயால் வருந்துபவர். அறப்பணிக்கு நிதி சேகரிப்பதற்காக சன்பிரான்சிக்கோவிலிருந்து நியுயோக்கிற்கு சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் திருமதி றொம்லின்கன் இதுவரை 1 மில்லியன் டொலர்களுக்கு மேல் சேகரித்து விட்டார். இவ்வாரத்துடன் அவர் 4200 மைல் பயணமும் முடியும் அற நிதியும் பெருகும்.

• • •


யாழிலிருந்து ஐசிஆர்சி கப்பல் மூலம் வெளியேறிய ஒரு தொகுதி வெளிநாட்டுத் தமிழர்கள்.

பல் டாக்டர் டி.வீ.பழனிவேல் FDSRCS (ENGLAND)

அழகிய புன்னகைக்கும் இனிய பேச்சுக்கும் உணவினை உண்பதற்கும் அவசியமான உங்கள் பற்களுக்கு நோவு அற்ற முறையில் தகுந்த சிகிச்சை அளிப்பது எனது பல்டாக்டர் தொழிலின் ஆதாரமான பணி என்பதை நான் நன்கு அறிவேன்.

- டாக்டர் டி.வீ.பழனிவேல்



கிளிப் Orthodontics Cosmetic Dental
முரசு சிகிச்சை பல்வலி நிற்பாட்டல்
உட்பட எல்லாவிதமான சிகிச்சைகளும்

புதிய முகவரி: Eastham
290 High Street North
(Manor Park - Eastham)
London E12 6SA

Tel: 0208 552 1626

Byron Avenue அண்மையில்
6 Kumar இற்கு எதிர்ப்பக்கம்

## தமிழர் ஆதரவுக் கழகம்

முல்லைத்தீவிலுள்ள செஞ்சோலை வளாகம் மீது இலங்கை அரசப் படையினர் விமானக் குண்டுகளைப் பொழிந்து படுகொலையைச் செய்ததை பிரித்தானியாவிலுள்ள வெண்புறா போன்ற தர்ம ஸ்தாபனங்கள் கண்டனக் கூட்டங்களையும், அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், பிரித்தானியாவில் தமிழர் ஆதரவுக் கழகம் (Tamil Support Foundation) என்று இயங்கி வரும் தர்ம ஸ்தாபனம், இதுவரை ஒருவிதக் கண்டனத்தையோ, கண்டனத்துக்கு ஆதரவையோ வழங்காதிருப்பதன் மர்மம் என்னவோ?

பிரித்தானியாவிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மறு அமைப்பாக இயங்கிவரும் இக்கழகம் இதுவரை என்னென்ன ஆதரவு செய்தார்கள் என்று மக்களுக்கு ஒரு அறிக்கை விட்டால் என்ன?

— *செல்வா*

## மூதூர் படுகொலை

மூதூரில் பிரஞ்சு தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேரை கொன்றது சிறிலங்கா இராணுவம் தான் என கண்காணிப்பு குழு கூறியுள்ளது. இது விடயமாக தன்னை சந்திக்க வந்த மகிந்தவிடம் பிரித்தானிய பிரதமர் ரோனி பிளேயர் ஏதாவது வினாவுவாரா? அல்லது மூடி மறைக்க வழிவகை சொல்லிக் கொடுப்பாரோ? ஆருக்குத் தெரியும்.

— *சத்தியன்*

## கடந்தது நடந்தது

வை.ரி.லிங்கம் ஷோ கே.எஸ். பாலச்சந்திரன் எழுதி வந்த நகைச்சுவையான அனுபவத் தொடரை ஏன் நிறுத்தி விட்டீர்கள். நல்லதை வரவிடமாட்டீர்களா? அது போல் 'ஒரு காலடி' யை தொடர்ந்து பிரசுரியுங்கள்.

— *நக்கீரன்*

## கடையிலை இல்லை

எப்பப் போய் கடையிலை கேட்டாலும் ஒரு பேப்பர் முடிஞ்சுது எண்டு தான் கடைகாரர் சொல்லியினம். எனக்கு ஒரு உண்மை தெரியோணும். கடைக்காரர் பொய் சொல்லியனமோ அல்லது ஒரு பேப்பருக்கு இவ்வளவு வாசகர்களிடத்தில் அபிமானம் இருக்குதோ அல்லது வேறேது பயன்பாட்டுக்கு அள்ளி கொண்டு போறாங்களோ?

— *சிவபரன்*

## நப்பாசையா?

பாகிஸ்தானின் புதிய தூதுவர் சௌத்திரி இலங்கையில் பதவி ஏற்பதன் நோக்கம், பாகிஸ்தானில் நரிவேலை பார்த்து தலைவர் நவாப்பைக் கொன்றது போல் ஈழத்திலும் யாரையாவது கொல்லலாம் என்ற நப்பாசையிலா? கவிஞர் வயிரமுத்து கூறியதுபோல் அவர்களின் நிழலைக் கூட இந்தக் கயவனால் பிடிக்க முடியாது.

— *லட்சுமணப் பெருமாள்.*

## இந்தியா சற்றுக் கூடுதலாய் சிந்திக்காதா?

எந்த விடயத்திலும் வெற்றிடம் விட்டால் அதில் யாரோ நுழையத் தான் செய்வார்கள். விலாங்காக இருந்தது போதும். யதார்த்தத்தை உணர்ந்து வெளியே வாருங்கள். வெளிப்படையாக எதிரி வரும் பாதையை அடையுங்கள். அல்லது உங்களை சுத்திப்போட்டு நீங்கள் வரத் தயங்கி விட்ட வெற்றிடத்துள் பாகிஸ்தான் நுழைந்துவிடும். பின் விரட்டுவது கடினம்.

— *கேதீஸ்*

## சுய உருவம்

வள்ளிபுனத்தில் பயிற்சி முகாமென்று நினைத்து தவறுதலாக பள்ளிப் பிள்ளைகளைக் கொல்லும் சாத்தியம் பல காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம். அது நடந்த பின் இது வேண்டுமென்றே திட்டமிட்டு நடாத்தப்பட்ட சதி என்பதை இலங்கை அரசு தனது அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தி தங்கள் சுய உருவத்தை காட்டுவதுதான் எமக்கு சாதகமாக அமைகிறது. வளர்க மகிந்தரின் அதிவேக சிந்தனை.

— *கஜன்*

## வெடிபானம்

யாரவன் கண்டுபிடித்தான் இந்த திரவவெடிகுண்டை. கண்ணைமூடிக் கொண்டு விடுதலைப் புலிகளை தடைசெய்ய கை உயர்த்தியவர்கள் இப்போ இலண்டன் வந்து திரவவெடி ஆய்வுசெய்கிறார்கள். விடுதலைப் புலிகள் விடயத்திலும் முறையான ஆய்வை எப்போ செய்வார்கள்? அவர்களும் புதிதாக ஏதாவது கண்டுபிடித்த பின்பா?

— *கண்ணன்*

## இது என்ன சூரன் போரா?

சூரன் போர் என்றால் ஒவ்வொரு தடவையும் சூரன் ஒவ்வொரு வடிவில் வருவான். இப்போ இலங்கை அரசின் இனப்படுகொலைகளும், காடையர் மூலம் ஆரம்பமாகி தமிழருள் விலாசம் மாறிப் பிறந்த அடிவருடிகள் மூலம் தொடர்ந்து பின் ஒட்டுப்படையாகி இப்போ ராணுவமே நேரடியாகச் செய்யும் நிலைக்கு வந்துவிட்டது. அப்போ இதுதான் கடைசிக் கட்டமோ?

— *தூயவன்*

## இந்தியாவின் வீரம்

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புக் காரணமாக தென் ஆபிரிக்க அணி விளையாட்டு வீரர்களின் பாதகாப்புக் கருதி போட்டியில் இருந்து விலகியது. ஆனால் இந்திய அணி அச்சூழலிலும் போட்டியிலிருந்து விலகாது உறுதியுடன் நின்றார்கள். எனக்கு இதில் ஒரே ஒரு சந்தேகந்தான் உண்டு. எங்கே எந்தச் சூழலில் தங்கள் வீரத்தைக் காட்டவேண்டும் என்று புரியாத நிலையிலா அவர்கள் உள்ளார்கள்?

— *விஜயன்*

## உப்புத் தின்றவன்

உப்புத் தின்றவன் சத்தி எடுப்பான் அதுபோல் தப்புச் செய்தவன் நிலை என்னவென்பதை புஷ்பராசாவின் நேர்மையற்ற செயல், பாவம் அவர் செத்த பின்புகூட விமர்சனம் என்ற பெயரில் அவரைக் கல்லறையில்கூட அமைதியாக உறங்க விடுவதாய் இல்லை. அவர் இறந்து விட்டார். ஆகையால் அவர்விடயத்தில் எழுதுபவர்கள் சற்று அடக்கி வாசிப்பது நாகரிகம்.

— *காந்தன்*

## சரத் பொன்சேகா

இலங்கை ராணுவத்திற்கு தலைமை தாங்க ஆள் கிடைக்கவில்லையா? இப்போது தலவராக இருக்கும் பொன்சேகா விடும் அறிக்கைகளைப் பார்த்தால் அவர் ஒரு சித்த சுவாதீனம் உள்ளவர் போல் தெரியவில்லை. குண்டு வெடிப்பின் பின் உளநிபுணரின் அத்தாட்சிப் பத்திரம் பெறாமலே அவரை வேலைக்கு சேர்த்து விட்டடார்கள் போல் உள்ளது.

— *ரகு*

## பொய் சொன்னாரே

அரசியலில் பொய் சொல்வதை யாரும் பெரிது ப?த்துவது இல்லை. இதில் பாதகச் செயல் எதுவென்றால் நேரடிச் சம்பந்தமில்லாத தமிழ் நாட்டின் பிராமண ஊடகங்கள் காலம் காலமாக இலங்கை தமிழர் விடயத்தில் முக்கிய செய்திகளுக்கு கொடுக்கும் இடத்தை உதிரிகளுக்கு கொடுத்து உண்மையின் தாக்கத்தை குறைப்பது. அதனிலும் கொடுமை எம்மக்ளிடையே உள்ள சில உதவாக்கறைகள் இனவாத அரசுக்கு வக்காலத்து வாங்குவது. எல்லோரும் உண்மை எதுவென்று உணரும் காலம் வெகு விரைவில் வரும்.

— *சுதன்*

# றோயல் மெயிலில் வந்த கடிதம் ...

*அன்பு நண்பன் பவாவிற்கு! வணக்கம்!*

சென்ற மடலில் செஞ்சோலைப் பூக்களைப் பறித்ததை எண்ணி மனம் வருந்தியிருந்தாய், பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் தமிழருக்கு ஒரு துன்பம் போக அதைவிட கூடுதலான துன்பங்களைச் சுமக்கும் காலமாக கடந்த சில மாதங்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஈழத்தில் வானத்தால் வந்து அப்பாவி மக்களைக் கொல்லுகின்றான், புலம்பெயர் நிலங்களில் துரோகத்தால் ஆதரவாளர்களைக் கைதுசெய்கின்றான். இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது ஏன் எமக்கு மட்டும் இப்படி என்று எண்ணத் தோன்றுகின்றது. இரண்டு வருடங்களுக்கொரு முறை எம்மினம் அதிகப்படியான அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. எந்த விதமான தாக்குதல்களும் இல்லாத காலத்தில் கூட சுனாமி என்னும் பேரலை வந்து எம்முறவுகளை கொன்றழித்தது. முன்பெல்லாம் ஒவ்வொரு தாக்குதல்களும் ஒன்றை விட ஒன்று மெச்சக் கூடியதாக இருக்கும். பூநகரி தாக்குதல், கிளிநொச்சித் தாக்குதல், முல்லைத்தீவுத் தாக்குதல், ஆனையிறவு தாக்குதல் என்று ஒன்றை விட ஒன்று அதிக படியான வெற்றிகளைக் குவித்து எம்மை வெற்றியின் உச்சத்தில் நின்று கூத்தாட வைத்தது. இனியொரு தாக்குதல் நடக்குமாயின் அது இவை எல்லாவற்றையும்விட அதிக வெற்றியீட்டித் தரக் கூடிய ஒரு நிகழ்வாகவே அமையும். எனவே மனம் சோராது உன் கடமைகளைச் செய் மச்சான்.

இங்கு இரங்கல் கூட்டங்களும், கண்டனக் கூட்டங்களும் என லண்டன் தமிழ் மக்கள் வாரவாரம் நடத்திக் கொண்டிருக்கீனம். இஞ்ச இப்ப நிறைய (கவுன்சிலர்மார்) அரசியல்வாதியள் வந்திட்டீனம், ஒருவர் ஒன்று செய்தால் மற்றவர் உடனே இன்னொண்டு செய்வார். எப்படியோ எங்கட பிரச்சினை உலகுக்குத் தெரிந்தால் சரியெண்டு சனங்களும் மாறி மாறி கூட்டங்களுக்குப் போகுது. இவையள் எங்கட நாட்டுக்கு ஆதரவு திரட்டீனமோ? இல்லை தங்கட அடுத்த பதவிக்கு ஆதரவு திரட்டீனமோ? என்று எனக்கு விளங்கவில்லை மச்சான்.

வேற என்னடாப்பா? இங்க பெரிசாய்ச் சொல்ல ஒண்டும் புதுசா இல்ல. ஆ மறந்திட்டன் போன கிழமை இங்கை ஒரு தேர்த் திருவிழா நடந்தது. அங்க உந்த காங்குமார் கொஞ்சப்பேர் வந்து வாலாட்டீச்சினம், அரையில் நிக்காத ரவுசரும், அரை குறையாய் வழித்த தலையுடனும் அங்குமிங்கும் காலை இழுத்து இழுத்து நடந்து திரிஞ்சீனம். அப்ப அதால வந்த ஒரு பெரியவர் வந்து என்னைக் கேட்டார் தம்பி உந்தப் பெடியளுக்கு கறுப்பு யூலை நிகழ்வில சனங்கள் சரியாய்த்தான் அடிச்சுப் போட்டுதுகள் என்று கவலையுடன் கூறினார். ஏன் பெரியவர் அப்படிச் சொல்லுறீங்கள் என கேட்டன், இல்லை மோனை இப்பவும் உதுகள் காலை இழுத்து இழுத்து நடக்குதுகள் அதுதான் அடிச்ச நோ இன்னும் மாறேல்லைப் போல பாவங்கள் என்றார். அப்பு அது அடிச்ச நோவில்லை, அதுதான் இப்பத்த ஸ்ரைல் என்றான் பக்கத்தில் நிண்ட நண்பன். இப்பிடி ஒரு ஸ்ரைல் காங்குகளுக்கு இருக்கிறது நல்லது போல கிடக்கு அவை அடிவாங்கின நோவில நடந்தாலும் மற்றவையள் ஸ்ரைல் எண்டு நினைப்பீனம். அப்ப அவேன்ர மானம் காத்துல பறக்காதுதானே! அப்படியே கதைச்சுக் கொண்டு அங்கால போனால் ஒரு பத்து பதினைஞ்சு பேர் வேட்டியை மடிச்சு கட்டிக் கொண்டு ஒரு காருக்குப் பக்கத்தில நிண்டீச்சினம், நைசா காருக்குள்ள கண்ணை விட்டன் அதுக்குள்ள கிரிக்கட் பற்றுகளும், விக்கற் தடிகளும் கிடந்தது. என்ன தேர்த் திருவிழாவில கிரிக்கற்றும் நடக்கப் போகுதோ என்று கேட்டன். தம்பி நாங்கள் கிரிக்கட் அடிக்க வரேல்ல, உந்த உதவாக்கறைகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க நிக்கிறம், ஆனால் பொலிசுக்காரங்கள் அவங்களைச் சுத்தி நிக்கிறாங்கள் எப்ப பொலிஸ் வெளியேறுதோ அப்ப பாரும் விளையாட்டை என்றார் ஒருவர். உதுக்குள்ள நிண்டால் உனக்கு கடிதம் எழுத கையிருக்குமோ தெரியாது? என்ற எண்ணத்தில நான் வெளிக்கிட்டு வந்திட்டன் மச்சான்.

போன முறை நானெழுதின கடிதத்தைப் பார்த்து யாரோ நாவூறு பாத்திட்டாங்களடாப்பா, கோடை காலத்தில லண்டனில நடக்கிறவைகளை எழுதினானெல்லே அதைப் பார்த்து யாரோ மனம் நொந்திருக்கிறாங்கள் மச்சான். லண்டனில இப்ப ஒரே மழை, அதுவும் யாரோ வானத்தில நிண்டு அள்ளி ஊத்துறமாதிரி மழை கொட்டுதடாப்பா? மனம் எரிஞ்சது நீயாய் இருக்காது என்று எனக்குத்தெரியும் ஆனாலும்.... கடிதத்தை படிச்சு முடிச்சதும் வெளியில் வைக்காத பக்குவமாய் மடிச்சுவை. வேற என்ன மச்சான் வேலைக்கு நேரமாகுது நான் வெளிக்கிடப் போறன். குட்பாய்.

*அன்புடன் நண்பன் சிவா*



# SRI KALIKAMBAL ASTROLOGICAL CENTRE

## ஸ்ரீ காளிகாம்பாள் ஜோதிட நிலையம்



**(HEREDITARY: 42 YEARS IN SERVICES)**

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் Pandit Ashok Kumar Shasthry அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாக கணித்து வழங்குவார்.

**REPUTED ASTROLOGER FROM INDIA**
**PANDIT ASHOK KUMAR SHASTHRY**

**Specialist in Astrology, Palmistry, Numerology & Gemmology.**

Through face reading, Palm reading, Horoscope, Date of birth & also Numerology -- You can know about your PAST, PRESENT & FUTURE IN: Education, Good Job/Business, Promotion, Family matters, Love, Marriage & Children, Marriage matching, Personal Matters, Husband -- Wife relationship, Health (Natural-Herbal medicine), Choice of stones/Colours, Lottery money matters, Peace of mind, immigrations/Visas, Abroad, Court Problems, Sexual Problems, Cinema Star etc. Witch craft will be cleared by performing prayers Lakshmi Poojas & Devi Upasanas. Also protection from Enemies.

**NOTE: ALL MATTERS ARE KEPT CONFIDENTLY!!**

இவர்களை ஒருமுறை சந்தியுங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்திய கோளாறு, பில்லிசூனியம், மந்திரம் ஏவல், செய்வினை, ஜனவசிகம், செய்வினையால் பாதிப்படைந்தவர்க்கு பரிகாரம் வழங்கப்படும். அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். சகலவிதமான வசிகம் செய்து வழங்கப்படும். தாயத்துக்கள் சக்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும்.

Consulting Venue: **Wembley Food & Wine,**
**546 High Road, Wembley, HA02AA**
**(Opposite: Wembley Central Tube Station)**

**Mob: 07932 536 584 / 07932 735 359**

**e-mail:manbha2001@yahoo.com**

*Opening Hours:* **9.00a.m - 9.00p.m (7 days a week)**

*Spoken languages:* **Tamil, Hindi, English, Kannada & Telugu**

Pandit. Ashok Kumar Shasthry

**KINDLY VISIT ONCE, KNOW THYSELF!**

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, SEPTEMBER 01, 2006, ISSUE 54

## அச்சுறுத்தும் முயற்சி!

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வாங்க முனைந்தார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு கனேடியத் தமிழர்கள் உட்பட சில தமிழர்கள் கடந்த வாரம் அமெரிக்காவில் கைதாகியுள்ளமையை மேற்குலக செய்தி ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டு வருகின்றன. அமெரிக்க - கனேடிய அரச பாதுகாப்பு பிரிவுகளின் கூட்டு நடவடிக்கையால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடும் இச் செய்தி ஊடகங்கள் மேற்குறித்த செய்தியை முந்தியடித்துக் கொண்டு முழு உலகத்துக்கும் தெரியப்படுத்தியதிலிருந்து அதன் அரசியல் முக்கியத்துவத்தை உணர முடியும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு பயங்கரவாதத்துக்கு எதிரான போர், செப்ரெம்பர் 11 க்கு பிந்திய நிலமை எனக் காரணங் காட்டினாலும், இவை உண்மையில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போருக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தரும் ஆதரவை தடுத்து நிறுத்த எடுக்கும் முயற்சியாகவே தெரிகிறது. வெளிப்படையாக அடையாளங் காணப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு அவர்களின் செயற்பாட்டை முடக்குவதோடு மற்றயவர்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த இந்த அரசுகள் முயற்சிக்கின்றன.

பயங்கரவாதத்தை ஒடுக்கும்போர்வையில்தம்மீதும்நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற பீதியில் ஒதுங்கியிருக்கப் போகிறார்களா? அல்லது தாம் வாழும் நாடுகளில் வாழ்வுரிமை கொண்டவர்கள் என்ற அடிப்படையில் தமது அரசியல் உரிமைகளை பாவித்து செயற்படப் போகிறார்களா? என்பதை தீர்மானிக்கும் நிலைக்கு எமது மக்கள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த விடயத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தாம் வாழும் நாடுகளின் தேசிய நீரோட்டத்தில் இணைந்து செயற்படுபவர்கள் தம்மை வேறுபடுத்தியபடி விலகியோடி விடமுடியாது. வெறுமனே பதவிகளை தக்க வைப்பதற்காக நழுவல் போக்கை கடைப்பிடிப்பதை விடுத்து, தமிழ் மக்களின் நிலைப்பாட்டை ஒரே குரலில் தத்தம் அரசுகளுக்கு வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

பிரித்தானிய தமிழ் கவுன்சிலர்கள் அமைப்பின் முன்மாதிரியை பின்பற்றி வெகுசன போராட்டங்கள் மற்றைய நாடுகளில் குறிப்பாக கனடாவிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றைய இன அரசியல் பிரதிநிதிகளையும் இத்தகைய போராட்டங்களில் கலந்து கொள்ளுமாறு நாம் வலியுறுத்த வேண்டும்.

ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தை நாம் ஆதரித்து நிற்பதை எந்த சக்தியும் தடுத்து விட முடியாது என்பதை நாம் கூட்டாக வெளிப்படுத்த வேண்டும்.

## ஒரு பேப்பர் . . . . . . . . . .

*வணக்கம் !*

*வேனிற்காலம் விடைபெறக் காத்திருக்கிறது. வார இறுதியில் கொண்டாட்டங்கள் அதிகமாக இருந்தாலும் தாயகத்து நிலமையினால் மனதில் குதூகலம் இல்லை. இந்த மனநிலையிலும் ஒரு மகிழ்வான செய்தி.*

*இந்த பதிப்பிலிருந்து **ஒரு பேப்பர்** பிரான்சிலும் வெளியிடப்படுகிறது. Gard Du Nordலிருந்து எட்டி நடந்து La Chapelleக்கு சென்றால் சுவையான கொத்து ரொட்டி மட்டுமல்ல இனி **ஒரு பேப்பர்** ரையும் எடுத்து வரலாம். அங்கு மட்டுமல்ல பிரான்சில் தமிழர் வாழும் மற்றைய பகுதிகளிலும் **ஒரு பேப்பர்** ஐ பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பகுதிகளில் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.*

*வாசித்துப் போட்டு ஒரு காரியம் செய்ய வேண்டும். அதுதான் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப வேண்டும். சரி, பிழை, குறை, நிறை எதுவாயிருந்தாலும் துணிந்து எழுதுங்கள். உங்கள் பேப்பரைப் பற்றி நீங்கள் சொல்லாமல் வேறு யார் சொல்வது?*

*உங்கள் கருத்துக்களே **ஒரு பேப்பர்** ஐ அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பது மனதில் இருக்கட்டும்.*

*செஞ்சோலை வளாகத்திலே பள்ளிப் பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டதையிட்டு **ஒரு பேப்பர்** வெளியிட்ட பிரசுரங்கள் தனித்து கனடாவில் மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருந்தன. இனி இவ்விதம் பிரசுரங்கள் வெளியிடப்படும் போது மற்றய நாடுகளிலும் பெறக் கூடியதாக ஏற்பாடு செய்கிறோம்.*

*கே.எஸ். பாலச்சந்திரன் எழுதும் 'கடந்தது நடந்தது' தொடர் நின்று விடவில்லை. ' வேலைப்பழு காரணமாக கடந்த சில பேப்பரில் அவரால் எழுத முடியவில்லை. மீள அடுத்த பேப்பரிலிருந்து வெளிவரும் (என்ன அண்ணை.. ரைட் தானே).*

*சிறுகதைகளை அனுப்பி வைப்பவர்களின் கவனத்திற்கு...*

*உங்களது ஆக்கம் இரண்டரை பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். தமிழ் எழுத்துருவினை உபயோகித்து ரைப் செய்து அனுப்பினால் விரும்பத்தக்கது.*

*பிரான்சில் **ஒரு பேப்பர்** ருக்கு நல்ல வரவேற்பு இருப்பதாக எமக்குத் தெரிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. **ஒரு பேப்பர்** ரில் பல பிரதிகளை லாச்சப்பலில் இருக்கும் கடைகளில் போடுவம் என்று கைகளில் ஒரு ஆயிரம் **ஒரு பேப்பர்** களை எடுத்துக் கொண்டு வீதியிலிறங்கினோம். கடைகளுக்கு போடுவதற்கு முன்னாலேயே கணிசமான பேப்பர்களின் கையிருப்புக் குறைந்து விட்டது. அண்ணை எனக்கு ஒரு பேப்பர் தாங்கோ, தம்பி எனக்கு ஒரு பேப்பர் தாங்கோ என்று சனம் எமது விநியோகத்தரை சுற்றி வளைச்சுப் போட்டுதாம். பாவம் அவரும் சனக் கூட்டத்துக்குள்ளே சிக்கி நொந்து நூலாகி நாடு திரும்பியிருக்கிறார்.*

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.*

*நன்றி.*

*- **ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Humanitarian Disaster?

We, the Tamil Diaspora are witnessing another impending man made Tsunami in our homeland. Every one seems to mention the same two words when they discuss the current situation in the Northeast of Sri Lanka: Humanitarian Disaster! Apart from President Rajapakse and his team of supporters and the Sri Lankan Military, of course.

As far as the Sri Lankan Government is concerned: There is no hunger in the Northeast of Sri Lanka. No baby has died of malnutrition; no child is walking around with an empty belly. There is no lack of flour, and from Jaffna to Ampara rice is available. The talk about a "humanitarian disaster" is exaggerated. The international relief and aid organizations are trying in despair to cry "wolf," to alert the world and enlist them in the cause to save the much weakened Tigers. There is no war at all, just a terrorist problem. Give us a free hand and we'll sort it out, they further say.

Every one else, from Indian diplomats to Non Governmental organisations, are convinced of the disaster awaiting the Northeast.

But then how long and how many times these two words have been used to describe the Tamil people's struggle for self determination without any analysis or reason?

The use of the term "humanitarian disaster" is actually proof of the dehumanization of the Tamils. There's no flour? Humanitarian disaster! If there is flour then there's no disaster?

There's an assumption that all that Tamils need is a daily serving of food so they won't be considered disaster victims. Is it enough that they have water and food in their troughs to conclude that their situation is fine?

But human beings, including the Tamils, have a few other basic needs as well.

The real humanitarian disaster in the Northeast began a long time ago, and it is not hunger. Those who regard these people as human beings know this very well. It is true that the dimensions of the disaster are worsening, but that's been taking place over years, and the food index is not the only measure.

The cessation of the flow of funding and non governmental organisations' activities since the start of Eelam War IV might threaten to depress the economic situation of the Northeast even further, but the thought that if they only have enough food, their needs will be satisfied and our conscience can be clear, is outrageous.

But even if they have bags of flour and rice, the living conditions of the Tamils are chilling. They live in a prison. Their daily routine includes humiliation that is no less terrible than malnutrition. Anyone who has to beg for permission to leave his village, to spend hours crowded in line at a checkpoint just to reach his destination, anyone whose home is brutally invaded in the middle of the night by the occupation army, whose time and life is considered valueless, and whose basic human dignity has been trampled into dust, cannot find any consolation in the fact that flour and rice is available.

Those who think that all it takes is providing a quota of flour to be free of any responsibility for the fate of the people they occupy, are suffering from a serious case of moral blindness.

Does the fact that a Tamil youth is not hungry in any way blunt the fact that s/he cannot dream, cannot aspire to a career, an orderly education or simple pleasures of life? Does the fact that her belly is not completely empty cover up for the miserable present and the hopeless future?

Blaming the LTTE and the GOSL by the international community does not remove a speck of the responsibility it has for the fate of the North-eastern imprisoned residents. Sri Lankan forces which forbid Tamils from free movement - a violation of signed agreements - and prevents the provision of supplies, has never left the Northeast, not even for a moment. Their oppression and occupation are only made possible by the funding of these international players.

Thus the international community has to take responsibility in finding a just solution to the North-eastern people.

> Those who think that all it takes is providing a quota of flour to be free of any responsibility for the fate of the people they occupy, are suffering from a serious case of moral blindness.

In the meantime the current episode of just another humanitarian disaster has to be avoided at all cost.

The world and people of conscience in Sri Lanka do not need to wait for the first child to die of hunger to raise the hue and cry. Enough Tamil children have been killed by the Sri Lankan bombers and by the systematic destruction of health services and Tamil economy.

The responsibility is not with the international relief agencies supplying food, but from making the Government of Sri Lanka not blocking these supplies into the Northeast.

But GOSL conscience and actions in recent years operates only according to one index, the index of protest from the international community. If this community remains quiet, everything can be covered up. Thus the real responsibility lies on the shoulders of these powerful nations.

At the same time we, the Diaspora are not optimistic regarding this index of protest by the international community.

Those who have been silent until now will remain enveloped in their silence. Those whose conscience doesn't torture them and whose sleep is uninterrupted by GOSL's behaviour in the Northeast will continue resting in peace. There is no "humanitarian disaster." GOSL will find a solution to the food crisis, and the stores in Jaffna won't lack for flour.

But those who regard the Tamils as only requiring basic food should remember that even in the zoos, where the animals presumably don't lack for a thing, people are often shocked by the conditions of their imprisonment.

# புலம்பெயர் தமிழ் மக்களும் பயங்கரவாதமும்.

**இளந்திரையன்**
*(ஒரு பேப்பருக்காக)*

பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு பல நூற்றாண்டுகளாக இலங்கையில் தனக்கென ஆட்சியதிகாரத்துடன் கூடிய நிலப்பரப்பையும் எல்லை வரையறைகளையும் கொண்டு வாழ்ந்த தமிழினம் இன்று நெறி பிறழ்ந்து போய் விட்டதா? பண்பாடற்ற நாகரீகமற்ற வன்முறையாளர்களாக மாறி விட்டனரா? ஐரோப்பிய வட அமெரிக்க ஆட்சியாளர்களினதும் அவர்களைத் தாங்கி முண்டு கொடுக்கும் பத்திரிகைகளின் பிரச்சாரத்தையும் கணக்கிலெடுக்கும் போது அவ்வாறு தான் எண்ணத் தோன்றுகின்றது.

மேற்குலக அரசாங்கங்களின் அளவு கோல் என்றுமே ஒரே அளவுடன் இருந்ததில்லை. தமக்கு ஆதரவான கணக்குகளில் பக்கம் சார்ந்தும் தமக்கு எதிரான நிலைகளில் வன்மையான எதிர்ப்புணர்வுடனும் அளவு கோல் சாய்ந்தே இருக்கின்றது. இது ஒன்றும் ஆச்சரியமானதோ அல்லது அதிசயிக்கத் தக்கதோ அல்ல. மேற்குலகின் அரசியல் சரித்திரத்தைக் கூர்ந்து கவனித்து வரும் எவரும் இதை உணர்ந்து கொள்ளலாம்.

தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடி 27 வருடங்கள் சிறையில் வாடிய நெல்சன் மண்டேலா முதலில் இவர்களுக்குப் பயங்கரவாதியாகவே தான் தோன்றினார். அதே போல பலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடிய யாசிர் அரபாத் ஒரு முழுப் பயங்கரவாதியாகவே இவர்களால் பார்க்கப்பட்டார். ஆனால் அதே அரபாத் சமாதானத்துக்கான நோபல் பரிசினை வென்றது என்ன மாயமோ இவர்களுக்குத் தான் தெரியும்.

தன் மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தலைமை ஏற்று எடுத்துச் செல்லும் ஒருவரோ அல்லது இயக்கமோ என்றுமே பயங்கரவாதிகள் அல்ல. அவர்கள் தேச விடுதலையாளர்கள். இஸ்ரேலியர்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட ஏசு நாதர் ஒரு மகானாக இறை குமாரனாக உயர்த்தப்படும் போதும் இந்திய மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட காந்தி மஹாத்மாவாகப் போற்றப்படும் போதும் ஆயுதப் போராட்டத்தை விரும்பி முன்னெடுத்த சுபாஸ் சந்திரபோஸ், யாசீர் அரபாத் போன்றோர் உயர்ந்த தலைவர்களாகப் போற்றப்படும் போதும் விடுதலைப் புலிகளோ அதன் தலைவர் பிரபாகரனோ எப்படிப் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்பட முடியும்.

பயங்கரவாதம் எனப்படுவது அரசியல் காரணங்களுக்காக அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் மகா யுத்தத்தில் ஜப்பான் சரணடைந்த பின்னரும் அணுகுண்டுகளை வீசி அமெரிக்கா இலட்சக்கணக்கான அப்பாவி ஜப்பானிய மக்களைக் கொன்று குவித்ததைப் போல நச்சு வாயுக் கூடங்களில் ஆயிரக்கணக்கான யூத மக்களை ஹிட்லரின் நாஜிக்கள் கொன்று குவித்ததைப் போல தற்போது நடந்து முடிந்த 34 நாட்கள் இடம் பெற்ற லெபனான் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவி லெபனானியர்களை இஸ்ரவேல் விமானங்கள் குண்டு வீசிக் கொன்றதைப் போல செஞ்சோலைச் சிறார்கள் 61 பேரை சிங்கள இனவெறி பிடித்த விமானப் படை குண்டு வீசிக் கொன்றதைப் போல அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதே பயங்கரவாதம்.

சிங்கள இனவாத அரசின் வெறி பிடித்த இராணுவத்துடன் போராடுவதோ அவர்களைக் கொன்று குவிப்பதோ பயங்கர வாதம் அல்ல. இலங்கையில் தன் மக்களைக் காப்பதற்கான போராட்டத்தில் ஈடு படும் ஒரு இயக்கத்தை தமிழ் மக்களால் போற்றப்படும் ஒரு இயக்கத்தை தங்கள் தங்கள் நாடுகளில் ஆபத்தை உருவாக்குபவர்கள் போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கித் தடை செய்வதும் மக்களுக்கு பிழையான கருத்துகளை வழங்குவதும் எந்த வகை நியாயத்தில் சேருகின்றது என்பதை இவர்கள் இங்குள்ள தமிழ் மக்களுக்கு விளங்கப் படுத்த வேண்டும்.

கடுமையான உழைப்பாளிகளாகவும் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுக்கால கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு இனத்தை இவ்வாறு எடுத்தேன் கவிழ்த்தேன் தோரணையில் விமர்சிக்கவும் விசாரணைக்குட்படுத்தவுமான உரிமையை இந்தப் பத்திரிகைகளுக்கும் காவல்த் துறைக்கும் யார் கொடுத்தார்கள்.

ஒரு சில தனி நபர்களின் நடவடிக்கைகளை வைத்து ஒரு இனத்தின் ஒழுக்கங்களையும் நேர்மையையும் விமர்சிக்கும் அளவு கோல்தான் என்ன? 3 இலட்சம் தமிழ் மக்கள் வாழும் கனடாவிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாழும் ஐரோப்பா வரை இதே அளவு கோல் பாவிக்கப் படுவதன் மர்மம் தான் என்ன?

கடும் உழைபாளிகளான வரி செலுத்தும் தமிழ் மக்கள் தங்கள் கடமையைப் போலவே தங்கள் உரிமையையும் புரிந்து கொள்ளாத மெத்தனத்தை இவர்கள் சாதகமாகப் பயன் படுத்துகின்றார்களா? தமிழ் மக்களை பிரதிநிதப் படுத்தும் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதி இல்லாமை எமக்குப் பாதகமா?

ஒரு சில அப்பாவிகளைக் கைது செய்வதும் பெரும் பயங்கரவாதிகளாக பரபரப்புச் செய்திகளை வெளியிடுவதும் இவர்களின் பத்திரிகை விற்பனையை உயர்த்த உதவும் என்று எண்ணுகின்றார்களா? அல்லது உள்ள படியே தமிழ் மக்கள் அனைவரையும் இவர்கள் பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றார்களா?

தமிழ் மக்கள் அமைதியை விரும்பும் சட்டம் ஒழுங்கை அப்பழுக்கில்லாது கடைப் பிடிக்கும் உயர் நாகரீகமும் பண்பாடும் கொண்டவர்கள் என்பதை இந்த அரசாங்கங்களும் அவர்களின் அடிப்பொடி வாலுகளான பத்திரிகைகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளவும் உயர்ந்த வாழ்க்கை வசதிகளைப் பெற்றுக் கொள்ளவும் அடைக்கலம் தந்து ஆதரவளித்த நாடுகளுக்கு மனசறிந்து துரோகம் செய்ய அஞ்சும் நேர்மையும் நெறி முறைகளும் கொண்டவர்கள் தமிழ் மக்கள். அதே நேரம் தங்கள் சொந்த மண்ணில் உயிரையும் உடமைகளையும் இழந்து வாடும் தம் சொந்தங்களுக்கு உதவ முன்னிற்கும் ஈரமும் கொண்டவர்கள் என்பதையும் இவை இரண்டுக்கும் உள்ள நேர்கோட்டுத் தொடர்பினையும் சிக்கலில்லா தெளிவான வகையில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதுவே இன்று மேற்குலக அரசுகளுக்கும் அங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் இடையில் உள்ள உறவு செழிப்பாக இருக்க உதவும். புரிந்து கொள்வார்களா?

EDITORIAL: EELAMNATION

# Arumugam Thondaman forced to become a political beggar

Arumugam Thondaman the leader of the Ceylon Workers Congress (CWC) who has just joined the Rajapakse Government with his compatriot, Chandrasekharan as Ministers, has stated that he has been compelled to do so to protect the people they lead. Let us take the reasons at their face value. Born into a life of luxury, far removed from that of the oppressed workers that he represents, and the wealth inherited from his grandfather Saumiyamoorthy Thondaman who bestrode the Sri Lankan political arena for nearly fifty years, Arumugam did not inherit Saumiyamoorthy's political acumen, astuteness and his propensity for survival. Arumugam besides inheriting the leadership of the CWC has also inherited his grandfather's trait for political jockeying.

The CWC as the name suggests is both a political party and a trade union. Arumugam is both a political leader and a trade union leader for a large section of Tamil plantation workers of Indian origin. He is a trade union leader as well as the employer of the numerous workers working in his estates that he owns, a contradiction that he also inherited from his grandfather.

Arumugam has adduced two important reasons for joining the Rajapakse government which merit serious attention. We may not agree with the solutions but we certainly consider these reasons to be very serious. Let us examine them. He has stated to the media: "Joining the government as ministers will protect the Indian Origin Tamils in a rapidly communalising (a Sri Lankan euphemism for racism) and worsening security situation in Sri Lanka". Coming from a leader of a political party in a state claiming to be democratic and pluralistic, it is a very serious indictment on its government. In very simple terms what Thondaman is saying is that he fears that the Sri Lankan state could unleash its terrorism against his people at any time and wants greater political clout and insurance to be able to protect them if at all.

It would be recalled that the plantation workers of Indian origin were also at the receiving end of especially the pogroms of 1977, 1979 and 1981 organised by the state against the Tamils. Following the 1977 pogrom, Fr. Tissa Balasuriya, a Sinhalese progressive and a human rights fighter wrote: "During the last two weeks of August 1977 many in Sri Lanka lived agonizing days and nights of looting, arson and lawlessness. Gangs have inflicted horrifying injuries and even resorted to manslaughter. All this is apparently due to racial animosities. .........Tens of thousands of innocent plantation workers were worst affected by the communal disturbances of August1977". (in Our crisis of National unity, in Race relations in Sri Lanka)

Immediately after the 1981 anti Tamil pogrom, Saumiyamoorthy stated: ".... the very fact that even plantation workers, innocent of any political crimes have been singled out for murder and mayhem, has created a feeling among the people that the thousands of hooligans covertly enjoy the patronage of powerful personalities". So that Arumugam's fears are not imagined.

Arumugam has further stated: "Indian Origin Tamil youth face problems when bombs go off. They get harassed by the police". In other words Tamil youths of Indian origin are a convenient scapegoat to be held collectively responsible and victimised for any acts of violence.

The much respected British journalist, David Selbourne in his article describing the plight of the plantation workers ,captioned " Sinhalese Lions and Tamil Tigers of Sri Lanka" in the The Illustrated Weekly of India, Bombay , of 17 October 1982, wrote: " the police and the army –as many as thousand at a time have invaded, some landing in helicopters, others driving their armoured cars ("it was like ploughing") across the new crops-harass the settlements, searching for tigers and beating up suspects.....the former plantation coolie....was tied, struck in the face with fists, and hung upside down from the roof beams, face bleeding, for hours.........."

Further, in general terms Arumugam has stated to the media: "Our community faces problems in getting identity cards. These problems can be sorted out if the CWC becomes part of the government. We can influence the government." What this apparently means is that even to transact a legitimate administrative business with government authorities the Tamil plantation worker must have the political patronage of the state.

The aspirations of those tens of thousands of Indian Tamils who fled the wrath of Sinhala chauvinists and settled in the LTTE controlled areas of the Vanni is another matter and does not fall within the scope of this column.

Arumugam's position is unenviable in that he and his people are prisoners within an enclave surrounded by hostile and fascist forces in a permanent state of intimidation.

*தமிழ்வாழ*
*உழைப்போர்க்கு*
*துணையாக இருப்பாய்!*
*தமிழையார்*
*எதிர்த்தாலும்*
*எழுவாய் நீ நெருப்பாய்!*

# Prof. Uyangoda's 'Gradualist' Fallacy



Vasantha Raja
ORUPAPER

Professor Jayadeva Uyangoda's recent interview with Rediff News has highlighted the well-known contradiction presently facing the peace process in Sri Lanka: the vast gap in the respective visions of the Liberation Tigers and the government of Sri Lanka.

He thinks that the way to bridge this gap is via a series of interim set-ups. [Note the similarity to EPDP leader Douglas Devananda's 'three-stage' solution.]

Prof. Uyangoda rightly sees that a final settlement requires an *equality-based democratic reconstruction of the entire post-colonial state structure*. But, he says, the 'Sinhala political class' is not quite ready for this. Therefore, he thinks that the peace process should aim for an interim settlement, rather than a 'big bang' solution.

But he acknowledges that there is a problem. The Tigers' proposals for an interim administration (ISGA) are maximalist while the government wants to offer a minimalist degree of regional autonomy.

There is a vast gap between these two visions. In order to bridge this gap, he believes the peace process should be guided "through a series of interim managements". Presumably, he expects both sides to compromise and settle for something in-between – an asymmetrical devolution of power to north/east region, which the Tamils call 'Thamil Eelam'

Let's be realistic and reflect on what that 'solution' could look like.

*As long as the Central government remains Sinhala-dominated*, the LTTE can legitimately stick to its existing self-rule achievements – above all the '*Tamil army*'. Most Tamils see it as the only defence they have against a Sinhala military.

In the absence of a convincingly comprehensive settlement, the Tigers are bound to resist any effort to disarm them.

Since the professor wants to take up the issues related to the final settlement last, all interim managements may have to live with the reality of the LTTE's armed forces – for, only an equality-based final settlement could design a mutually satisfactory formula to absorb the LTTE forces into a national defence system.

(Remember, both India's – and later President Premadasa's – peace efforts collapsed at the point of trying to disarm the Tigers.)

The Sinhala establishment is unlikely to agree to any interim set-up that legitimizes the LTTE's armed forces. As has been the case throughout, any such move would be seen as a stepping stone to a separate state. Therefore, negotiating an interim settlement will be doomed from the start.

Contrary to what Uyangoda says, *a radically transformed equality based all-island model would, in my view, be more appealing to the Sinhala political class than any asymmetrical regional autonomy that leaves the Tiger forces intact.*

## The root cause

A comprehensive model would tackle the root cause of the problem – the lopsidedness of the post-colonial state. It nullifies all the apprehensions that 'interim administrations' would cause.

I do not believe that negotiations on 'interim administrations' are going to eventually bridge the gap of visions. The adversaries' socially-determined visions are backed by military power. *Both sides will want to make sure that no interim settlement would upset the balance of forces.*

And any breathing space they find would be used to strengthen the forces by accumulating assets and positioning their respective forces more effectively.

What is important is to undermine the 'will to fight' on both sides. This can effectively be done if the government agrees on a mutually palatable final settlement that tackles the root cause of the problem, the post-colonial state.

Therefore, I suggest that even if it becomes practical to restart talks where they stopped last, it is more important to launch an island-wide media campaign to enlighten all communities of an easily-comprehensible image of a final settlement.

This should be done with a view to set up *parallel talks on the final settlement* at the earliest possible time. This means: talks on regional autonomy should seamlessly lead to core issues related to the final settlement.

Prof. Uyangoda realizes that the root cause of Sri Lanka's ethnic conflict lies in the post-colonial state structure. But he prefers the *gradualist* approach, wanting to avoid the central issue for the time being. In other words, the main culprit in this matter should be allowed to remain in place for an indefinite period, until the adversaries gain the appropriate wisdom.

I think this is a big mistake. It is a recipe to allow both sides to use 'peace talks' as part of their respective military strategies to try and tilt the military balance in their own favour.

What is needed, rather, is to penetrate the *mass consciousness* with a seductively democratic *image* of a 'Big Bang solution' – to use the professor's expression. That is the way to break this vicious circle. If 'our political class is not ready for true democracy' – or in Leon Trotsky's terms, if our 'national bourgeoisie is incapable of carrying out the democratic revolution' – then it is up to the mass movements on both sides to make sure the change does happen.

The widest possible media campaign to do just that would undermine one crucial aspect of all military calculations on both sides - *the will to fight*. Only a mutually appealing image of a comprehensive settlement would make the people wake up to the realities of a futile war. That will mark the beginning of the *end* of people's backing for a cruel war along ethnic lines.

Prof. Uyangoda said, '… protracted ethnic conflict always requires a protracted peace process…' and therefore, 'the peace process should [aim] for an interim settlement.' His gradualist formula, in my view, is tantamount to an unwitting contribution to an unending war involving more deaths and more misery.

*v.raja@btinternet.com*

# Feeding Mars in Jaffna

The Sri Lankan Army in Jaffna has been supplied solely by air and sea for more than two decades now. However, this is the first time these supply facilities have been threatened directly by the LTTE.

This has given rise to a logistical quandary that the SLA was little prepared for until the fall of the Elephant Pass garrison in year 2000. The problem has to be viewed in the context of the fact that the territorial gains the Tigers have made inside the peninsula have given them a singular logistical advantage that they never enjoyed before (from the inception of the Tamil insurgency that is) and provided them a launching pad for directly threatening the SLA's supply facilities in Jaffna.

The central military question in Jaffna, therefore, revolves round the SLA's logistical quandary and its offensive capability to neutralise the threat posed by the LTTE to the army's supply facilities in the peninsula.

> However, it is still not clear how long it might take to translate this high morale among SLA troops into decisive offensive action.

GOSL sources assert that morale is now high among the SLA soldiers fighting the Tigers in Jaffna following the infusion of modern weaponry and the encouragement provided by the JVP during its tour of the battle zones of the peninsula.

However, it is still not clear how long it might take to translate this high morale among SLA troops into decisive offensive action.

The following facts will stand out very sharply in any description of the current military situation in the Jaffna peninsula even if it were to be based solely on the pronouncements of the GOSL press reports.

1. The SLA's only viable supply points in the Jaffna peninsula proper (excluding the Sri Lanka naval facilities in the island of Karainagar) are under artillery attack by the Tigers.

2. The SLA still lacks the offensive capability and initiative (which it lost in late December 1999) to retake areas that provide the Tigers the vantage points to threaten the two vital supply points with artillery and, in the future, with mortars and massed troops and special forces.

The direct and real threat to the SLA's supply points and the determination of the Sri Lankan government to 'correct' the army's apparent lack of decisive offensive capability in the peninsula today with more arms point to a logistical quandary.

The SLA says new weaponry, including multi barrel rocket launchers, has been infused into the SLA's arsenal in Jaffna since 2000.

The scale of weapons purchases during the ceasefire by the government makes it clear that the SLA in Jaffna had received, among other things, more area weapons. These are the main components of the revamped military's strength in Jaffna at the moment.

A brief history of the demands made by the SLA for more powerful area weapons shows that it has, over the years, become increasingly dependent on high volumes of fire support.

The infusion of new area weapons such as multi barrel rocket launchers has certainly raised the volume of this fire support further. The LTTE currently holds a large area inside the peninsula which the army has to necessarily 'soften' with high volumes of artillery and rocket fire in the hope of deterring the Tigers from achieving a decisive concentration of forces to renew their advance into Jaffna.

In short, the ammunition depletion rate in Jaffna is unprecedented and bound to rise inexorably with each minor probing action or manoeuvring thrust by the LTTE. Or in other words, the supply of ammunition and related war material has to be stepped up in proportion to the degree of direct threat posed by the Tigers to Jaffna's only supply facilities.

Unwittingly but inevitably, the Sri Lankan government has created the conditions for an unprecedented demand for artillery shells, mortars and rockets precisely at the juncture where the SLA's life lines to Jaffna are being threatened by the Tigers.

But then it is argued that the SLA's supply problems in the peninsula are not unmanageable because food and related provisions for the army can be obtained in the peninsula itself. But this is possible only if sufficient

*(continued on page 9)*



Divorce
Children
Domestic Violence
Injunctions
Work Permits
EEC Applications
Visa Extensions
Marriage Applications
Asylum
Possessions
Disrepair
Homelessness
Landlord and Tenant
Evictions

"சட்டம் ஓர் இருட்டறை – அதில் வக்கீலின் வாதம் ஓர் விளக்கு"
அந்த விளக்கில் நீங்கள் ஒளி காண வேண்டுமா?
ஆம்! அப்படியானால் அழையுங்கள்....

Sathies Patkunanathan
020 7604 3572
Fax: 020 7328 9232
DX No. 37710 Kilburn
Email: solicitors@palis.co.uk web: www.palis.co.uk

PALIS SOLICITORS
Family, Immigration & Housing Specialists

Community Legal Service · Family Law · Investor in People · Lexcel · SFLA

# Fishing in troubled Lanka

Tushar Charan
CENTRAL CHRONICLE

It has been reported that the target of the Colombo suicide bomber on a three-wheeler was the Pakistani high commissioner in Sri Lanka, Bashir Wali Mohammed, who escaped unhurt; altogether seven persons, including three security personnel guarding the high commissioner's convoy, were killed on Aug 14. Reports also suggest that the attack was almost certainly the work of the Liberation Tigers of Tamil Elam (LTTE) who are angry with Pakistan for having supplied offensive weapons to Sri Lanka army engaged in a long battle with Tamil rebels in the island. The Tigers' ire was directed towards the diplomat because he personally played a leading role in the transfer of Pak arms to Colombo. The Sri Lankan defense spokesman, Keheliya Rambukwella, confirmed this when he admitted that the Pakistani envoy had arranged the arms for his country's 'war' against LTTE. He added, while addressing a press conference, that Pakistan was 'working closely with our defense authorities' in the war against 'terror'. The minister was annoyed with reports that had published the 'shopping list' sent to Pakistan for supply of arms.

While the acts of terror by the LTTE cannot be condoned, the Colombo bombing incident has brought to focus the growing ties between the armies of Pakistan and Sri Lanka with its implications for India, particularly in light of the fact that Pak army's ISI has already succeeded in establishing safe bases in Nepal and Bangladesh. That the August 14 attack was the first time that a Pakistani diplomat had been made the target in Sri Lanka is a development of note.

However, it can be surmised that the ISI is now concentrating on Sri Lanka in order to 'encircle' India and give force to its nefarious games aimed at destabilising India by arming and helping various insurgent groups. The ISI seems to be able to direct its operation against India out of Nepal and Bangladesh with complete ease.

It may be mentioned here that Pakistan is trying to send as its envoy to India (after the end of present envoy's tenure in New Delhi in a few weeks time) one of its career diplomats who had played a crucial role in consolidating an ISI and anti-India network in Nepal. His name had figured in the conspiracy that led to the hijack of an Indian Airlines plane in December 1999, leading to the release of three top Pakistani terrorist leaders. This particular diplomat is rabidly anti-Indian as is his brother who earned 'fame' about a year ago when his 'girlfriend' had alleged that she was physicaly assaulted by the Pakistani diplomat then posted in New York, Bashir Wali Mohammed was posted in Colombo in June 2004 and is returning home after completing his tour of duty in Sri Lanka. Presumably he has completed the task or tasks assigned to him. Arms supply was perhaps only a part of the task; the bigger Pakistani game plan was obviously to work for enlarging the ISI network in Sri Lanka for use as much against the Tamil Tigers as against India. The Pakistani colonel is a former director of the Pakistani intelligence bureau. In the early 1990s he had headed the Pakistani intelligence operations in Colombo. It is not often that such an out and out intelligence man is sent to head the diplomatic mission in a 'friendly' country.

## The first Muslim regiment in Sri Lanka

During his Colombo stint as the head of the mission he was more active in promoting not only military ties between Sri Lanka and Pakistan but also bringing the intelligence in the two countries closer. One offshoot of this diligence by the Pakistani spymaster has been the radicalisation of sections of Muslims in Sri Lanka. Pakistan is believed to have assured Sri Lanka all help in raising the first Muslim regiment in Sri Lanka. That it will create further divisions among the non-Buddhist minorities in Sri Lanka suits very well Islamabad's strategy of creating dissensions in neighbouring countries.

When India turned down a Lankan request for specific arms supply, Pakistan, ever looking for opportunities to embarrass or create trouble for India, immediately saw an opening and rushed $150 million worth of weapons that included a fleet of battle tanks with heavy guns and air defence system. For almost five years Pakistan has been supplying weapons and equipment suited for counter-insurgency operations against the Tamil rebels in the north and east of the island. Some of the deadly Pakistani cargo reaches there as 'gift'.

There are reports that the Pakistanis have been transferring their 'expertise' to the Sri Lankan army in air-mounted operations that they use against the so-called 'miscreants' in their own country like the Baloch nationalists. Sri Lanka used the Pakistani model in recent 'successful' strikes against Tamil rebels on ground as well as their navy. One of these 'successes' saw an orphanage being strafed by the Sri Lankan air force, resulting in the killing of 61 girls. Of course, Colombo says the target was not an orphanage but an LTTE-run 'training' centre for young children.

In the long years of Tamil insurgency there were hardly any reports of a rift between Muslims and the LTTE. But after Pakistan stepped in with 'help', this rift started becoming serious. About two months back, Anton Balasingham of the LTTE had warned Pakistan against arming Muslim fundamentalists in Trincomalee and Batticaloa. He had openly accused Islamabad of arming groups like 'Jihad'.

The gulf between Muslims and other minorities in eastern and northern Sri Lanka has been increasing rapidly. Muslims were 'expelled' from Jaffna and now they are said to be fleeing from Muthur. The LTTE had captured 40 Muslim youth who were allegedly members of the 'Jihad'. Lack of communal harmony is not exactly a new phenomenon in Sri Lanka. Many analysts have said that Tamil extremists were created by Sinhala-Buddhist fundamentalism. It is no secret that in Sri Lanka Buddhist monks, whose job makes it mandatory on them to be pacifist, are not exactly doves who are willing to accept a peaceful coexistence with the Tamil minority. Tamils in Sri Lanka responded to the combined effect of Buddhist chauvinism, state discrimination and army atrocities in the form of extremism of the fiercest kind. Suicide squads were almost an LTTE monopoly till the other day.

The 2002 'truce' between the government and the LTTE has made prospects of peace appear bright after years of strife. But with Pakistan keen to stoke communal fires in the island the return to happy days in the emerald islands does look close.

# Feeding Mars in Jaffna

(continued from page 8)

arable land is held by the SLA under conditions in which farmers can cultivate and produce sufficient surplus for the consumption of the troops. Further, we all know that farming has ceased to be a viable economic activity in the peninsula at least a decade ago.

However, even if food can be obtained locally it won't be the solution to the SLA's logistical quandary in Jaffna today because of the fundamental fact that subsistence accounts only for eight to twelve percent of all supplies a modern army needs. (Supplying War: Logistics from Wallenstein to Patton - Martin Van Creveld p.233)

Therefore, the question would still be about the ability of the SLA to feed the tremendous depletion rate of all non-subsistence supplies, including ammunition, in the context of vulnerable supply lines.

Thus the only solution to this problem would have been to amass military supplies in the Palaly base complex.

This is exactly what the SLA has done since the start of the peace talks.

This is a catch 22 situation.

This stockpiled war material could become a burden firstly when internal lines of supply are destabilised and secondly when the SLA's supply facilities in the peninsula stand exposed to more direct assaults.

But even if the dangers inherent to massing up supplies in a place like Jaffna are clearly foreseen, the SLA cannot completely and prudently avoid them now.

Stockpiling supplies in a place that can be reached only by air and sea is generally considered unwise when the defender's airlift capability and supply ships are limited and more so when the place has one minor harbour and one airstrip, both of which can be hit by enemy fire.

The more an army masses up military supplies in such a place, the greater the burden on its contingency planning because at the end of the day if one has not been successful in stopping the enemy's advance closer to one's strategic positions then it would be virtually impossible to include the stockpiled material in any withdrawal plan, as these would far exceed the logistical capability one may muster in a crisis.

Therefore the Sri Lankan government's decision to defend Jaffna to the last man is quite correct logistically just as much as it is justifiable politically and strategically.

But this, however, might precisely be what the LTTE expects the SLA to do in Jaffna.

• B O O K R E L E A S E •

TAMIL CIVILIZATION
The Untold History
A University of Jaffna Publication.




(732 pages ),
Price:£25.00 P&P £4.00 within UK

**Note: This is a Limited Edition –**

To reserve your copy please contact the following address:
48 Blakes Avenue,
New Malden,
Surrey KT3 6RF.
chmohan@aol.com

Author: V. Navaratnam, attorney-at-law and former Member of Parliament has had several books published. This latest book, culminating 25 years of research on the topic, was released in March 2006 in Toronto, Canada for worldwide distribution.



OXFORD COLLEGE
5 Morden Court Parade,
London Road, Morden,
Surrey SM4 5HJ
Tel: 020 8687 2484
Mob: 07886 907 793
email: info@theoxfordcollege.com

அலுவலக வேலைவாய்ப்புக்கான
இலவச கணனி மற்றும்
ஆங்கில பயிற்சி வகுப்புகள்

உங்கள் தகுதியைப் பொறுத்து பகுதி நேர, முழுநேர வேலை வாய்ப்புப் பெறும் சந்தர்ப்பங்களும் உள்ளன

ஆரம்பம்

Skills for life
இலவச ஆங்கில வகுப்புகளும்
குடியுரிமைக்கான (Citizenship)
ஆங்கில வகுப்புக்களும்,
சிறுவர்களுக்கான Tuition
வகுப்புகளும் நடத்தப்படும்

City and guilds இன் கணனிநெறி IT Level I, II & III மற்றும் ESOL சான்றிதழ்கள் பயிற்சியின் இறுதியில் வழங்கப்படும்
18-54 வயதுக்குட்பட்ட ஆண், பெண், இருசாராரும் தமது தொழில் வாய்ப்பை அதிகரித்துக் கொள்ளலாம்.
லண்டனில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் அலுவலகப் பயிற்சிகளும் ஒழுங்கு செய்து தருகிறோம்
Londonல் எங்கிருந்தாலும் வகுப்புக்களுக்கு வருவதற்கான பிரயாணக் கட்டணம் மற்றும் பிள்ளை பராமரிப்புக் கட்டணம் வழங்கப்படும்

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - சாரங்கி
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பாலா

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - அனு - கிரி

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# பிரெஞ்சு தமிழர்களிற்கு ஒரு பேப்பர் ரின் பொண்யூர் (வணக்கம்)

இலவசமாய் ஒரு பேப்பர் படிப்போம்.

பிரான்ஸ் வாழ் தமிழருக்கு தமிழ்ப் பத்திரிகைகளின் வரவு ஒன்றும் புதிது அல்ல. எண்பதுகளில் ஐரோப்பா எங்கும் ஈழத் தமிழன் அதிகளவில் அடியெடுத்து வைத்த காலம் முதலே பிரான்சில் தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. பிரான்சுக்கு வந்த தமிழர்கள், தமது வேலைப் பழு, மொழிப் பிரச்சனை, வந்த கடன், வீட்டு பிரச்சனைகள் என்று பல பிரச்னைகளுக்கு மத்தியிலும் சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை ஆரம்பத்தில் கையெழுத்து பிரதிகளாகவும் பின்னர் அச்சடித்தும் வெளிகொணர்ந்தனர். அதில் பல காலப் போக்கில் காணாமல் போயும் சில இன்று வரை வெளிவந்த படியும், இன்னும் சில புதிதாய் பிறப்பெடுத்து கொண்டும் இருக்கின்றன. இதற்கெல்லாம் பிரெஞ்சுத் தமிழர்களின் வாசிப்பு மீதான ஆர்வமே காரணம். உங்கள் வாசிப்பு ஆர்வத்தை கண்டு பிடித்து இதுவரை வெளிந்த பத்திரிகைகளோடு பத்தோடு பதினொன்றாக இந்த ஒரு பேப்பர் ரையும் உங்கள் கைகளில் வைக்கிறோம். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பிரபலமான பிராந்திய பத்திரிகையான ஈழநாட்டை புலத்தில் முதலில் வெளியிட்ட பெருமையும், அதே பத்திரிகையின் அலுவலகத்தையே கொளுத்திய பெருமையையும் கூட பிரெஞ்சு தமிழராகிய எங்களையே சாரும்.

அதுமட்டுமா? ஐரோப்பாவிலேயே முதல் பத்திரிகை, முதல் வானொலி முதல் தொலைக்காட்சி, முதல் புத்தகக் கடை, முதல் கோயில்(?), முதல் கொத்துரொட்டிக் கடை, முதல் சாமத்திய வீடு என்று எல்லா 'முதல்' பெருமையும் பிரஞ்சுத் தமிழர்களுக்கே உரியது. பிரெஞ்சு தமிழரின் வாசிப்புத் தாகத்திற்காய் முதன் முதலில் புத்தகங்கள், சஞ்சிகைகள் விற்கவென தனியாக தமிழாலயம் என்று ஒரு புத்தக கடையையும் தொடங்கியவர்கள். இன்று லாசப்பலில் புத்தகங்கள் மட்டுமே விற்கும் கடைகள் சுமார் 5 இருக்கின்றது அடுத்ததாக சிறு சஞ்சிகைகள் மற்றும் இலக்கியங்கள் என்று முதன் முதலில் வெளியிட்ட பெருமையும் பிரெஞ்சு தமிழரையே சாரும். தமிழ்ப் படங்களை இறக்கி அன்வர் (anvers) மற்றும் ஒபவில்லியே (auber villiers) திரையரங்குகளில் திரையிட்டு விசிலடித்து மகிழ்ந்தது மட்டுமல்ல தென்னிந்தியாவில் இருந்து நடிக நடிகையர்களை அழைத்தும் குஸ்புவைக் கூப்பிட்டு ஆடவிட்டு மேடையில் வைத்து தங்க சங்கிலிகள் போட்டு மகிழ்ந்து எங்கள் கலை தாகத்தையும், குஸ்பு மோகத்தையும் தீர்த்துக் கொண்டோம்.

அதற்கு மேலாக மார்கடே பொசினியர் (marcadte possonniers) மற்றும் லா சப்பல் (la chapella) பகுதிகளில் ஒரு சிறு கடை என்று தொடங்கிய எங்கள் வணிகம் இன்று அந்த பகுதிகள் முழுவதையுமே வாங்கி பெரிய அளவில் விரிந்து அந்த பகுதிகளில் கால் வைத்தாலே ஏதோ எங்கள் ஊர் சந்தைப் பகுதிக்கு போனது போன்ற ஒரு உணர்வை வரவழைக்கும் அளவிற்கு எம்மவரின் கடின உழைப்பு சாட்சியமாகி நிற்கிறது. விட்டால் கார் டி நோர்த் (gare du nord) ரெயில் நிலையத்தையே வாங்கி, பிரித்து கடைகள் கட்டி வீடியோ கடையும், பலசரக்கு கடையும் போட்டு, அங்கு வைத்தே 'செல்வி'யை வாடகைக்கு விடவும் தொடங்கி விடுவோம். ஆனால் பிராஞ்சு வாழ் பெருங்குடி மக்களெல்லாம் போக்கு வரத்திற்கு சிரமப்படுவார்கள் என்ற மகா நல்ல நோக்கில் விட்டு வைத்திருக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஊரில் இருந்து கிளம்பி வந்ததுமே கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்கிற ஔவையாரின் வரிகளை அருள் வாக்காக ஏற்று கோயில் கட்ட ஆரம்பித்தோம். ஆனால் இங்கு பிரெஞ்சு அரசின் சட்டம் அனுமதியளிக்காததால். சிறு அறைகளிலும், மண்டபங்களையும் வாடகைக்கு எடுத்தும், விலைக்கு வாங்கியும் கோவிலாக்கி எங்கள் மதம் மற்றும் சம்பிரதாயங்களையும் மறந்து போகாமல் கட்டிகாத்த பெருமையும் எம்மை சாரும். மற்றைய நாடுகள் போல கோயில் கட்டும் அனுமதி மட்டும் அரசாங்கம் தந்திருந்தால் ஐரோப்பாவில் உள்ள மற்றைய கோயில்கள் எல்லாம் பிச்சை வாங்கும் அளவிற்கு. பாரீஸ் 10 பகுதியையே விலைக்கு வாங்கி நல்லூர் முருகன் கோயிலை விட நாலு மடங்கு பெரிதாகவும் மாவிட்டபுரம் கோபுரத்தை விட வான்முட்டும் கோபுரத்துடன் ஒரு கோயிலை கட்டியிருப்போம். இதெல்லாம் கிடைக்காமையால், தெருவெல்லாம் மறித்து தேங்காய் அடித்து பிள்ளையாருக்கு தேர் இழுத்து அந்த குறையைப் போக்கிக் கொள்கிறோம்.

இப்படியெல்லாம் அருமை பெருமையான பிரெஞ்சு தமிழர்களிடம் இந்த ஒரு பேப்பர் ரை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம். இங்கு தமிழை வளர்க்கிறோம் என்று தமிழை தத்தெடுத்து வளர்ப்பது எமது நோக்கம் அல்ல. அது எங்கள் தேவையுமல்ல. காரணம் தமிழ் ஒன்றும் தாவரமல்ல தண்ணீர் ஊற்றி வளர்ப்பதற்கு. அது ஆயிரமாயிரம் விழுதுகள் விட்ட ஆலமரம் அதனடியில் தங்கி போகும் வழிப் போக்கரே நாங்கள். எனவே உங்கள் வேலையிடங்களில் இருந்து களைத்தும், உணவு விடுதிகளில் உள்ளே வெக்கையில் வேலை செய்து அவிந்து போயும் வெளியே வந்து உங்கள் வியர்வைத் துளிகளை வழித்தெறிந்து விட்டு கடைசி மெட்றோவை அல்லது R.E.Rறை பிடிப்பதற்காய் ஓடி படி வழியே அவசரமாய் இறங்கி அந்த வண்டி மணியடித்துக்கதவுமூடுவதற்குள் சினிமா கதாநாயகனாக மாறி அந்தரத்தில் எழும்பி வண்டிக்குள் பாய்ந்து எதிரே நின்றவரின் மீது மோதி அவரைப் பார்த்து அசடு வழிய பார்தோம் (மன்னிக்கவும்) என்று சொல்லி விட்டு ஒரு இடத்தை பிடித்து அமர்ந்து உங்கள் காற்சட்டை பின் பொக்கற்றினுள் சுருட்டி வைத்திருக்கும் ஒரு பேப்பர் ரையெடுத்து படித்து விட்டு உங்கள் வேலைக் களைப்பை மறந்து 'அட சும்மா சொல்ல கூடாது எழுத்துப் பிழை இருந்தாலும் படிக்க கூடிய மாதிரி அடிக்கிறாங்கள்' என்று உண்மையாக உங்களின் மனதில் தோன்றும் நினைவே எங்கள் நிறைவாகும். அதுமட்டுமல்ல ஒரு பேப்பர் ரை படித்து முடிந்ததும் அப்படியே குப்பை தொட்டியினுள் எறிய வேண்டாம் காரணம் அதற்கு பின்னரும் அதன் பயன்கள் அதிகம் இருக்கின்றது. ஒரு பேப்பர் அகலமாகவும் அதிக பக்கங்களில் வெளிவருவதாலும் உங்கள் வீட்டில் அவித்த மா அரிக்கும் போதும், மற்றும் பொரித்த மீன் எண்ணை ஊறுவதற்காகவும் மற்றும் உங்கள் வீட்டில் குழந்தைகள் கப்பல், பிளேன் செய்து விளையாடவும் பயன்படும். இன்னும் பல பயன்பாடுகளை உங்கள் கற்பனைகளுக்கேற்ப கண்டுபிடிக்கலாம். எனவே பிரெஞ்சு தமிழர்கள் ஒசியாய் ஒரு பேப்பர் ரை வாசிக்க வழிவகைகள் செய்ய ஆர்வமுள்ளவர்கள் ஒரு பேப்பர் அலுவலகத்துடன் மேலதிக விபரங்களுக்காய் தொலைபேசி மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது பிரான்ஸ் தொடர்பாளர் சிறீ (நீஸ்) 06 11 14 94 70 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

# தமிழ்க் கடல்

அருணகிரி தமிழ்க் கடல். அதிலும் அவரை ஓசைமுனி என்பார் பாம்பன் சுவாமிகள். தமிழிலுள்ள ஓசைகளெல்லாம் அத்துப்படியானவர். அவர் சொல்லித் தத்துவம் கேட்பது நமக்கெல்லாம் இனிமை. இந்தப் பாடலும் ஒரு தத்துவப் பாடலே! இந்தப் பாடலில் இரண்டு உண்மைகளைக் கூறியுள்ளரார் அருணகிரி. உணர வேண்டிய உண்மைகள்.

ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானாகரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே

இந்த உலகாய பொருட்கள் எதையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றிற்கு இரண்டு பண்புகள் உண்டு. நன்மை ஒன்று. தீமை மற்றொன்று. கரும்புச் சாற்றிலிருந்து வெல்லமும் எடுக்கலாம். சாராயமும் காய்ச்சலாம். அது பயன்படுத்துகின்றவர்களின் தன்மையைப் பொருத்தது. மிகவும் நல்லது என்ற பொருளிலும் கூட ஏதேனும் தீமை இருக்கும். மிகவும் இனிமையானதாக கருதப்படும் அமுதம் சாவாமருந்து. அதை அருந்துதல் இன்பம். ஆனால் எத்தனை காலத்திற்குத்தான் இளமையாக சாகாமல் இருப்பது. கண்டிப்பாக அலுப்புத் தட்டிவிடும். அப்படியெல்லாம் எந்தத் தீமையையும் தராத ஒரு அமுதம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

அப்படிப் பட்ட அமுதமும் உண்டு. அயில்வேல் அரசனே அந்த அமுதம். அயில் என்றால் கூர்மை. கூர்மையான வேலையுடைய முருகனே இன்பத்தை மட்டுமே தரக்கூடிய அமுதம். அதுவும் எப்படி? சற்று விளக்கமாகப் பார்ப்போம். கூரில்லாதவன் என்று யாரைச் சொல்வோம்? அறிவில் சற்று மந்தமாக இருப்பவர்களை கூரில்லாதவன் என்பது வழக்கம். கூர்மை என்பது அறிவின் பண்பு. வேல் ஞானத்தின் வடிவம் என்பது நாம் அறிந்ததே! ஞானம் கூர்மையாக இருக்க வேண்டும். அறிவு பெருகப் பெருக ஆராய்ந்து தெளியும் பண்பு பெருகும். நாம் அவசரப்பட்டு முடிவெடுப்பதெல்லாம் அறிவீனத்தினால்தானே! ஆக முற்றும் உணர்ந்தவர் தீயவராக இருக்க முடியாது. அப்படி அனைத்தையும் அறியும் அறிவு முருகனிடத்தில் அடங்கும். ஆகையால் ஞானாகரனே என்று அடுத்த சொல்லைப் போடுகிறார்.

இப்பொழுது படியுங்கள். 'ஆனா அமுதே! அயில் வேல் அரசே! ஞானாகரனே! புரிந்திருக்கும் என நினைக்கிறேன். 'இறைவனே! நீ தீதில்லா அமுது. எப்படித் தெரியுமா? அனைவரையும் அடக்கும் ஞானம் உன்னிடத்தில் அடங்கும். அதனை உருவகமாக கையில் வேலாகத் தாங்கிய இறைவனே!

> கரும்புச் சாற்றிலிருந்து வெல்லமும் எடுக்கலாம். சாராயமும் காய்ச்சலாம். அது பயன்படுத்துகின்றவர்களின் தன்மையைப் பொருத்தது.

இப்படியெல்லாம் அழைத்து விட்டு, நவிலத் தகுமோ என்கிறார். அதாவது சொல்ல முடியுமா என்று கேட்கிறார். எதைச் சொல்ல முடியுமா என்று அருணகிரி தயங்குகிறார்! இறைவனிடத்தில் நேரடி உபதேசம் பெற்ற அவருக்கே சொல்லி விட முடியாத விஷயம் ஒன்று இருக்கிறதா? என்ன அது? அடுத்த இரண்டு வரிகளைப் பாருங்கள். 'யான் ஆகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே' இதைத்தான் அவரால் விளக்கிச் சொல்ல முடியவில்லை. அறிவு அடக்கத்தைக் கொடுக்கும் என்று முன்பே அறிந்தோம். அந்த அடக்கம் இறைவனின் கருணையால் வருவது. அதன் விளைவு என்ன? அந்த விளைவைத்தான் அருணகிரியால் சொல்ல முடியவில்லை. கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர் என்பார்கள். அதாவது. இறைவனை உணர்ந்தவர்கள் அவரைப் பற்றி முழுமையாகச் சொன்னதில்லையாம். அப்படிச் சொன்னவர்கள் உணர்ந்ததில்லையாம். அருணகிரி உணர்ந்தவர். ஆயினும் நமக்காக, நாம் புரிந்து கொள்ளத்தக்க வகையில் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தவர் இங்கே வந்து தடுக்கி விட்டார்.

> பெரிய மகான்களின் கருத்து பல சமயங்களில் நமக்குப் புரிவதில்லை. புரியாததால் நாமும் ஏற்றுக் கொள்வதில்லை.

இறைவன் கருணையின் விளைவு என்ன தெரியுமா? நான் என்ற அகந்தையை விழுங்கி விட்டு, அனைத்துப் பரிமாணங்களிலும் அன்பு என்ற அமைதி ஒழுக இருக்கும் தன்மை. அதை எப்படி விளக்குவது என்று அவருக்குத் தெரியவில்லை. மேலே சொன்னது புரிந்தது போல இருக்கும். ஆனால் முழுவதும் புரியாது. ஏனென்றால் சொற்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட சொல்லொணா நிலையது. பரவசம் என்று சொல்லலாம். ஆனால் பரவசம் எப்படி இருக்குமென்று யாரேனும் சொல்ல முடியுமா? வெல்லம் இனிப்பாக இருக்கும் என்று சொல்லலாம். எப்படி இனிப்பாக இருக்குமென்று யாரால் சொல்ல முடியும்? சுவைத்துப் பார்த்து உணர்ந்தவர்களிடம் வெல்லம் இனிக்குமென்று சொன்னால் புரிந்து கொள்வார்கள். முருகப் பெருமானின் அருட்பெருங் கருணையின் விளைவு இனிக்கும் என்று இதுவரை சொல்லி வந்த அருணகிரிநாதர் எப்படி இனிக்குமென்று சொல்ல முடியாத நிலை இதுதான். ஆகையால்தான் 'பெரிய மகான்களின் கருத்து பல சமயங்களில் நமக்குப் புரிவதில்லை. புரியாததால் நாமும் ஏற்றுக் கொள்வதில்லை.

பக்தியுடன், - *கோ.இராகவன்*

# பட்டணத்தில் பாண் வாங்கிய கதை

கரிகாலன்
(ஒரு பேப்பருக்காக)

பட்டணத்திற்குப் போய் சேட் வாங்கலாம், சாறி வாங்கலாம், ஐஸ்கிரீம் வாங்கலாம், கேக் வாங்கலாம். ஆனால் பாண் வாங்குவதற்கு யாராவது பட்டணம் போவார்களா? பக்கத்துப் பரஞ்சோதி கடையில் வாங்குவது சுலபமல்லவா?

ஆனால் அமெரிக்க புலனாய்வுத் துறை சொல்கின்றது 8 தமிழர்கள் பட்டணத்தில் பாண் வாங்க முயற்சித்தார்கள் என்று.

FBI எனப்படும் அமெரிக்க புலனாய்வுத் துறையானது 8 தமிழர்களைக் கைது செய்துள்ளது. புலிகளுக்கு ஆயுதம் வாங்க முயற்சித்தார்கள் என்றும், அமெரிக்க அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கி புலிகளுக்கெதிரான தடையை நீக்க முயன்றார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இங்கு இரண்டு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. தடைசெய்யுப்பட்ட அமைப்பிற்காக ஆயுதம் வாங்க முயற்சித்தமை.

2. புலிகள் மீதான தடையை நீக்குவதற்காக அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்க முயன்றமை.

இரண்டையும் தனித் தனியாக நோக்குவோம்.

புலிகள் வாங்க முயற்சித்ததாகச் சொல்லப்படுபவை AK47 ரக துப்பாக்கிகள் மற்றும் தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் SA18 ரக ஏவக்கணைகள்.

AK47 துப்பாக்கிகள், SA18 ஏவகணைகள் இரண்டினதும் தாய் சோவியத் யூனியன். வளர்ப்புத் தாய்கள் பல. இவற்றுள் முக்கியமானது சீனா. சிறீலங்காவுக்கு சீனத்தயாரிப்பு ஆயுதங்கள் பெருமளவில் கடனாகவும், உதவியாகவும் நன்கொடையாகவும் வழங்கப்பட்டன. வழங்கப்பட்டு வருகின்றன.

புலிகள் இயக்கம் ஆரம்பமான பொழுது அவர்களிடம் இருந்தது ஒரேயொரு கைத் துப்பாக்கியும், மிகச் சில உறுப்பினர்களும், மிகப் பெரிய நம்பிக்கையும் மட்டுமே! இன்று 30 வருடங்களின் பின் பல்லாயிரம் உறுப்பினர்கள் பல்லாயிரம் துப்பாக்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள், ஏவுகணைகள் என்று ஒரு பலமான இராணுவமாக அவர்கள் நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

இன்று புலிகளிடமுள்ள பெரும்பாலான ஆயுதங்கள் சிறீலங்கா அரச படைகளிடமிருந்து கைப்பற்றப்பட்டவை.

90களின் இறுதியிலும் 2000,2001இலும் நடந்த சமர்களில் சிறீலங்கா படையினரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயதங்கள் ஏராளம். ரைபிள்கள் ((Rifles) இயந்திரத் துப்பாக்கிகள் (Machine Guns) முதல், கவச வாகனங்கள் (Tanks), பீரங்கிகள் (Artilleries) வரை பல புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயதங்களை சிறீலங்கா படையினருக் கெதிராக புலிகள் பயன்படுத்திவருகின்றனர்.

சிறீலங்காப் படையினரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ரைபிள்கள் பெரும்பாலும் T81 ரகம் அதாவது AK47 இன் சகோதரங்கள் அதாவது AK47ஐ நகலெடுத்து சீனாவில் தயாரிக்கப்பட்டவை. இவ்வகைத் துப்பாக்கிகள் புலிகளிடம் தேவைக்கு மிக அதிகமாகவே உள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

எனவே இவ்வாறு தேவைக்கு மிக அதிகமாக ரைபிள்களை வைத்திருக்கும் புலிகள் அமைப்பு அமெரிக்காவிலிருந்து AK47 வாங்க முயற்சித்தது என்னும் கதை... நம்பக் கூடியதாக இருக்கின்றதா?

அதைவிட வேறொன்று.. 'புலிகள் தாய்லாந்தில் ஆயுதம் வாங்கினார்கள், கிழக்கு ஐரோப்பாவில் ஆயுதம் வாங்கினார்கள், ஆபிரிக்காவில் ஆயுதம் வாங்கினார்கள்' என்றெல்லாம் ஊடகங்களில் செய்திகள் வருவது வழக்கம். புலிகள் அங்கெல்லாம் ஆயதம் வாங்கினார்களோ இல்லையோ ஆனால் அங்கெல்லாம் பலவகை ஆயுதங்கள் கறுப்புச் சந்தையில் மிக மலிவாக வாங்க முடியும் என்பது உண்மை. சோமாலியா, கொங்கோ, மொசாம்பிக், போன்ற நாடுகளில் US$30 - US$ 125க்கு ஒரு AK47 வாங்க முடியும். அதாவது ஒரு AK47 இன் விலை £17 - £70. இவ்வாறு தமக்கு மிக அருகிலேயே ஆயதங்களை மிக மலிவாக வாங்க முடியும்போது யாராவது அமெரிக்கா சென்று $1000 க்கு ஒரு AK47 வாங்குவார்களா?...



## 3 வருடங்களின் முன்பு நடந்த ஒரு சம்பவம்

பிரித்தானியாவில் வசித்த 69 வயதான ஹேமந்ட் லக்ஹனி என்றொரு ஆயுத விற்பனை முகவரை அணுகிய FBI முகவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகள் என்று தங்களை அறிமுகப்படுத்தி தங்களுக்கு தோளில் வைத்து இயக்கும் தரையிலிருந்து விமானங்களைத் தாக்கப் பயன்படும் SA18 ரக ஏவுகணை ஒன்று உடனடியாக அமெரிக்காவில் தேவை என்று தெரிவித்தனர். இதற்கான விலை $ 85,000 (£50,000) என்று பேசித் தீர்மானிக்கப்பட்டது.

லக்ஹனி இதற்கான வேலைகளில் இறங்கினார். FBI, பிரிட்டிஸ் புலனாய்வுத் துறை, ரஸ்ய புலனாய்வுத் துறை என்பன இணைந்து லக்ஹனியின் நடவடிக்கைகளை மிகத் துல்லியமாக அவதானித்துக் கொண்டிருந்தன. லக்ஹனி எத்தனை தரம் தும்மினார் என்பது கூட அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

லக்ஹனிதான் வழக்கமாக ஆயுதங்கள் வாங்கும் ரஸ்யாவிலுள்ள ஒரு ஆயுதத் தொழிற்சாலையுடன் தொடர்பு கொண்டு தனக்கு SA 18 ரக ஏவுகணை ஒன்றை அமெரிக்காவில் குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார். உடனடியாக ஏவுகணை ஒன்று அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மருத்துவ உபகரணம் என்று சொல்லப்பட்டு ஒரு மரப் பெட்டியில் பொதி செய்யப்பட்ட SA18 ரக ஏவுகணை ஒன்று உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் ரஸ்யாவின் இரகசிய முகவர்களால் ஏவகணையினுள்ளிருந்த வெடிமருந்து ஏற்கனவே அகற்றப்பட்டு விட்டது.

லக்ஹனி லண்டனிலிருந்து 2003 ஒகஸ்ட் 10ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நியூயோர்க் பயணமானார். ஏவுகணை ரஸ்யாவிலிருந்து 2003 ஒகஸ்ட் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை நியூஜேர்சியிலுள்ள நியூஆர்க் என்ற துறையை சென்றடைந்தது. மருத்துவ உபகரணம் என்ற செல்லப்பட்டு பல்ரிமோரிலுள்ள ஒரு களஞ்சியத்தில் ஏவுகணை வைக்கப்பட்டது.

அன்று மாலையே களஞ்சியத்திலிருந்து ஏவுகணை பொதி செய்யப்பட்ட மரப்பெட்டியை எடுத்துக் கொண்டு செல்லும் போது லக்ஹனி கைது செய்யப்பட்டார்.



சட்ட விரோத ஆயுதக் கடத்தல் தொடர்பாக லக்ஹனி மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் 69 வயதான அவருக்கு 47 வருடகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த ஆயுதக் கடத்தல் நபரைப் பிடிப்பதற்கு அமெரிக்க, பிரிட்டிஸ் மற்றும் ரஸ்ய நாட்டுப் புலனாய்வுத் துறைகள் 5 மாதங்களைச் செலவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இந்தச் செய்தி 2003 ஒகஸ்ட் 13ம் திகதி உலகெங்கும் முக்கியம் வாய்ந்த செய்தியாக அடிபட்டது. இந்தச் செய்தி ஆயுத முகவர் கைது செய்யப்பட்டதை மட்டும் சொல்லவில்லை, FBI எப்படியெல்லாம் வலை விரிப்பார்கள் என்பதையும் சொல்கின்றது. இந்தச் செய்தியையும் இது போன்ற பல செய்திகளையும் புலிகள் நிச்சயம் அறிவார்கள். இவ்வாறான வலைப் பின்னல்களை அறிந்து கொண்டே வலையில் சிக்க புலிகள் முட்டாள்கள் அல்ல.

## இன்னுமொரு முக்கிய விடயம்

கடந்த 5 மாதங்களுக்குள் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு மேற்கொண்டது. பெருமளவிலான விமானத் தாக்குதல்களை சிறீலங்கா விமானப் படையினர் நடத்தினர். ஆயினும் புலிகள் விமானங்களுக்கு எதிராக எந்த விதமான தாக்குதலையும் நடத்தவில்லை. இது பலருக்கு ஆச்சரியகரமாகவும், புதிராகவும் இருக்கின்றது. 90களின் ஆரம்பத்திலேயே விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்திய புலிகள் ஏன் இப்பொழுது பயன்படுத்தவில்லை? என்பது இராணுவ ஆய்வாளர்களுக்கும் இலங்கை அரசுக்கும் பெரும் புதிராகவேயுள்ளது.

ஆனால் எல்லோரும் நம்புகின்றார்கள் புலிகளிடம் ஏதோ சிறந்த ரக ஏவுகணைகள் உள்ளன என்று. புலிகள் ஒரு தரம் பயன்படுத்தினால் அந்த ஏவுகணை எந்த ரகம் என்று கண்டுபிடித்து விடலாம் என்பது இராணுவ ஆய்வாளர்களின் ஆசை. எந்த ரகம் என்று கண்டுபிடித்து விட்டால் அதற்கு மாற்று மருந்தைத் தேடலாம் என்பது சிறீலங்கா அரசின் ஆதங்கம்.

புலிகளிடம் எத்தனை ஆயுதங்கள், என்ன ஆயுதங்கள், என்ன வகை ஏவுகணைகள் உள்ளன என்பது FBIக்குக் கூடத் தெரியவில்லை என்பதையே இந்த எண்மர் கைது நாடகம் காட்டுகின்றது. தெரிந்திருந்தால் முட்டாள்தனமாக AK47உம் SA18 உம் வாங்க வந்தார்கள் என்று கதை விட்டிருக்கமாட்டார்கள்.

அடுத்ததாக, இலஞ்சம் கொடுத்து புலிகள் மீதான தடையை நீக்க முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டு.

அமெரிக்காவில் இலஞ்சம் கொடுத்து இப்படியான காரியங்களைச் செய்ய முடியும் என்று FBI நம்புகின்றதா?

அமெரிக்காவில் புலிகள் மீதான தடை அரசியல் ரீதியிலானது. பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை இன்னமும் வரையறை செய்யாத நிலையில் அமெரிக்கா புலிகளை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைத்துள்ளது. உண்மையில் இதைப் பற்றி புலிகள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார்களோ அதைத் தொடர்ந்து செய்த வண்ணமேயுள்ளனர்.

அமெரிக்கத் தடையை நீக்க வேண்டுமென்று புலிகள் ஒருபோதும் முயற்சிக்கவில்லை. அமெரிக்காவிடம் நல்ல பிள்ளையாகப் பெயர் எடுக்க வேண்டுமென்று நினைத்தால் புலிகள் மிக இலகுவாக எடுத்து விடுவார்கள்.

ஆனால் அவர்கள் தமது இனத்துக்கு நல்லவர்களாக இருக்க விரும்புகின்றார்கள். தமது இனத்துக்கு நல்லவராக இருக்கின்றார்கள். யார் என்ன சொன்னாலும் அவர்கள் கவலைப்படுவதில்லை. இலஞ்சம் கொடுத்து அதுவும் அமெரிக்காவிடம் நல்ல பிள்ளையாக பெயர் எடுப்பதற்கு புலிகள் மட்டுமல்ல எந்தவொரு தமிழனும் ஆசைப்பட்டது மில்லை ஆசைப்படப் போவதுமில்லை.

## இறுதியாக ஒன்று

சிறிலங்கா அரச படைகள் செஞ்சோலை வளாகம் மீது குண்டுவீசி 61 குழந்தைகளைக் கொன்றதைக் கண்டித்தும், சிறீலங்கா அரச பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தியும் அமெரிக்காவின் வாஷிங்டன், நியுயோர்க் உட்பட பத்து முக்கிய நகரங்களில் கடந்த வெள்ளிக் கிழமை (18.08.2006) அன்று பல இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை தமிழ் மக்கள் விநியோகித்தனர். இதன் நோக்கம் அமெரிக்க மக்களிடையே எமது மக்கள் படும் அவலங்களையும் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் கொடுரத்தையும் எடுத்துச் சொல்வதே.

இதுவரை காலமும் மேற்குலக அரசுகளிடமும், நிறுவனங்களிடமும் சிறீலங்கா அரச பயங்கர வாதத்தின் கொடுரத்தை முறையிட்ட தமிழ் மக்கள் மேற்குலக மக்களை நேரில் அணுகியது இதுவே முதல் முறை.

அடுத்த நாள் சனிக்கிழமை (19.08.2006) இந்த எட்டுத் தமிழர்களும் (அனேகமாக அப்பாவித் தமிழர்கள்) கைது செய்யப்பட்டனர்.

FBI கதை சொல்வதிலும் நிபுணர்கள் என்று தான் நாம் நினைக்க வேண்டியுள்ளது.

வெற்றிக்கும் தோல்விக்கும்
இடையே - மனம்
வீழாது எழுகின்ற பலங்
காண வேண்டும்!
சுற்றத்தின் சுகங் காண
வேண்டும் - முழுச்
சுதந்திரத்தோடு நாம்
இளைப்பாற வேண்டும்!

ஒரு பேப்பர
ORU PAPER

## ஓராண்டு நினைவஞ்சலி



தமிழ்ப் பேரறிஞர் அமரர் க.சிவராமலிங்கம்பிள்ளை

மண்ணில் 16/09/1925

விண்ணில் 25/08/2005

ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்
வாழும் மனிதர்க்கு - நீயோ

மாண்டு போனதாலே சாகாவரம்
பெற்றாய் நற்றமிழ் வாழும் வரை

அஞ்சலி: யாழ் இந்து மைந்தர்கள்
தகவல்: பதஞ்சலி நவேந்திரன்




## Dance Teacher Required



**TECA** *(Tamil Educational and Cultural Association-London)* runs Fine arts classes for Asian Children in Croydon and other surrounding areas. TECA is looking for an experienced Bharatha Natyam dance teacher. The position will be on contract basis initially for 2 years. Working hours 35 hrs per week (Weekends and 4 other days) Selection will be based on the following requirements:

***Have offered Bharathanatyam as a main subject in a recognised university or equivalent Master's degree preferred but not essential. Have at least 3 years teaching experience. Able to prepare students up to Diploma Grade and should be able to prepare students for their Arangaterm. Able to conduct workshops for experienced students and Junior teachers. Good knowledge in Folk Dance and Kavadiyattam. Dance Style should be compatible with KalaiKaviri /Kalachethra Style. Able to speak and communicate in Tamil Language and in English.***





**Salary between (£10,000-£15000) depending on qualification and experience. Closing Date: 08/09/2006. Please apply to the following email address enclosing your CV by email or by post. email: info@tamiled.co.uk**

**TECA**
72 Warlingham Road
Thorton heath, Surrey CR7 7DE



# VISION

***Residential Sales, Lettings, Mortgages and Business Transfer***



***CASH BUYERS***

An investment property on Tooting High Street. Currently trading as Travel Agency. Asking Price £70,000. Rent £9,000.00PA . Call for details

வியாபார நிறுவனம்
விற்கவோ வாங்கவோ
நம்பிக்கைக்கும்
நாணயத்திற்குமான ஒரே
நிறுவனம்!!!

Special offer Rate of 0.5% for sales. Landlords call for special rates

***FOR SALE :***

2 bed room split level flat in Croydon. This property will be an ideal first time buy or investment property. Asking Price £162,950.00. Call for details

***FOR SALE :***

Dry Cleaners in Mitcham, Surrey. Asking Price : £30,000. Call for details

.........More Businesses for sale and properties to let/sell available........
Call let us know what you want

**020 8772 7992**

We urgently need properties and business for clients looking to buy/rent in the london area, if you are thinking of taking the plunge v...

Call us today for a free no obligation sales or lettings valuation.

**Why use us ?**

Rest assured you will get a quick Sale or Let
Extensive advertising both local & internet
Aim to get you the best market price
Safeguarding your interest always
Offer a personal and honest service
Nice and friendly people to deal with.

890 Garratt Lane, London SW17 0NB
Tel: 020 8772 7991/2, Fax: 020 8772 7993

# தோள் கொடுக்கும் தமிழகம்!

















ஈழத் தமிழர் எங்கள் துயர் கண்டு குமுறிக் கொண்டிருக்கின்ற தமிழக உறவுகளின் உணர்வும் ஆதரவும் புலம்பெயர்ந்த எங்களுக்குப் பெரும் ஆறுதலைத் தந்து கொண்டிருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் அடிமைத் தளைகளுக்குள் சிக்கிக் கிடந்த நாங்கள் எங்கள் உரிமைகளுக்காகக் கெஞ்சினோம், இரந்தோம், சத்தியாக்கிரகம் செய்தோம். அவற்றிற்கெல்லாம் அடிதான் பதிலாகக் கிடைத்தது. 'அடிக்கு அடிதான் மருந்து' என்றுணர்ந்து விடுதலைப் போராட்ட வித்தினை நாட்டினோம். அந்தச் செடிக்கு நீரூற்றி உரம்போட்டு பெருவிருட்சமாக வளர்த்து விட்டீர்கள்.

தமிழினத்தின் ஒற்றுமை கண்டு அஞ்சிய சக்திகள் திட்டம் போட்டும் சட்டம் போட்டும் எங்களைப் பிரித்து விடச் சூழ்ச்சிகள் செய்தார்கள்.

தமிழின உணர்வென்னும் நெருப்பை புலிகள் மீதான தடை என்னும் சாம்பல் கொண்டு மூட எத்தனித்தார்கள். முல்லைத் தீவிலே இளங் குருத்துக்களின் கோரக் கொலைச் சம்பவத்தினால் அந்தச் சாம்பற் படை துடைத்தெறியப்பட்டு தமிழுணர்வெனும் நெருப்பு பிரகாசமாய் கொழுந்து விட்டெரியத் தொடங்கியுள்ளது.

அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஈழத் தமிழர்களுக்கான குரல்கள் இன்று ஒட்டுமொத்தத் தமிழகத்தின் குரலாக மாறிடில்லியிலேயே அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், திரைப்படத்துறை சார்ந்தவர்கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் என்று வயது, தொழில் தகமை வேறுபாடின்றி தமிழகமே கொந்தளித்துச் சிங்களப் பயங்கரவாதத்திற்கெதிரான தன்னுடைய எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், கொடும்பாவி எரிப்புக்கள் என்ற செய்திகளே காதுகளை எட்டிக்கொண்டிருக்கின்றன. ஈழத் தமிழர்களுக்கு ஒரு அவலம் நடந்தால் தட்டிக் கேட்பதற்கு ஆறு கோடித் தமிழர்கள் நாங்கள் இருக்கின்றோம் என்ற எச்சரிக்கை சிங்களத்தின் காதுகளில் நாராசமாய்ப் புகுந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தைக் கடந்து டெல்லியில் கூட சிங்கள அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது. டெல்லியில் எழுப்பப்பட்ட

'ஈழத் தமிழர்கள் அனாதை அல்ல, எங்கள் இரத்தம், எங்கள் இரத்தம்'

'ஈழத்தமிழர் சிந்தும் இரத்தம் எங்கள் இரத்தம், எங்கள் இரத்தம்'

என்ற கொட்டொலிகள் கேட்டு நெஞ்சுருகிப் போயிருக்கிறோம்.

எல்லோருமே கைவிட்ட அநாதைகள் நாங்கள் என்று புலம்பிக் கொண்டிருந்த ஈழத்தமிழர்கள் புது ரத்தம் பாய்ச்சப்பட்டதைப் போல் உணர்கிறோம். நன்றி சொல்ல வார்த்தைகளின்றி இதயத்தால் போற்றிக் கொண்டிருக்கிறோம்.

**கடல் கடந்து வாழ்ந்தாலும் தமிழகமும் ஈழமும் தொப்புள் கொடி அறுந்து போகாத தாயும் சேயும் போன்றவர்களே என்ற உண்மையை உலகத்திறகுச் சொல்லியிருக்கிறது.**

காவிரிப் பிரச்சினையில் வெவ்வேறு கோணங்களில் செயற்படும் தமிழகக் கட்சிகள் கூட, ஈழப் படுகொலைகளைக் கண்டித்து சட்ட சபையிலே ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியதானது கடல் கடந்து வாழ்ந்தாலும் தமிழகமும் ஈழமும் தொப்புள் கொடி அறுந்து போகாத தாயும் சேயும் போன்றவர்களே என்ற உண்மையை உலகத்திற்குச் சொல்லியிருக்கிறது.

தமிழகத் தமிழர்களையும் ஈழத் தமிழர்களையும் பிரித்து விட வேண்டுமென்று திட்டமிட்டுக் காய்களை நகர்த்தி தம் கனவு நனவாகி வருகிறதென ஆனந்தக் கூத்தாடத் தலைப்பட்ட சிங்கள அரசையும் வல்லமை மிக்க வேறு பல சக்திகளையும் தங்கள் கனவு பகற்கனவாகப் போகிறதோ என்று ஏங்க வைத்திருக்கிறீர்கள். கடல் எங்களைப் பிரித்தாலும் கருங்காலி போல உறுதியான எங்கள் பிணைப்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நொந்து போன ஈழத் தமிழருக்கு ஒத்தடம் தருகிறீர்கள். கன்றின் கதறல் கேட்ட பசுவாய்த் துடிக்கிறீர்கள்.

தமிழகத்தில் உங்கள் எழுச்சி சிங்கள அரசிற்கும் அதன் கூலிப் படைகளுக்கும் எவ்வளவு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதற்கு யாழ்ப்பாணத்தில் சிங்களப் படைகளின் வெறியாட்டமே சான்று. தமிழ் மக்களின் மனங்களிலே என்றும் நிறைந்திருக்கின்ற மறைந்த முதலமைச்சர் M.G ராமச்சந்திரனின் உருவச் சிலைகளுக்கு தார் பூசியும் அடித்துடைத்தும் தங்கள் ஆற்றாமையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எம் அன்பான தமிழகச் சகோதரர்களே,

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறோம். புலம்பெயர் தேசங்களிலே இந்த நாடுகளின் அரசாங்கங்களை அசைக்கக் கூடிய ஆள்பலமும் அரசியல் பலமும் இல்லாத நிலையில் எங்கள் போராட்டங்களால் எதிர் பார்த்த அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறோம்.

ஆனால் ஆள்பலம் மட்டுமன்றி மத்திய அரசையே ஆட்டிப் படைக்கக் கூடிய அரசியல் பலமும் கொண்டிருக்கின்ற நீங்கள் தான் பூவாய்ப்.. பிஞ்சாய்.. காயாய்.. கனியாய்க் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்ற எங்கள் சகோதரர்களை எமகாதக அரசாங்கத்திடம் இருந்து காப்பாற்ற முடியும். செய்வீர்களா என்று கேட்க மாட்டோம். செய்வீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

*- மணிவாசகன்*

**Croydon Tutorial College**
*A Centre of Academic Excellence*
30 - 32 Southend, Croydon Surrey, CR0 1DN
Tel: 020 8688 5777 Tel / Fax: 020 8688 5776

*Enrol now for* **GCSE, GCE AS & A2 Examinations**
**Full time** *or* **Evening classes**

*For June / November 2007 / 2008*

Coaching by experienced tutors and official examination centre for all UK's leading Exam boards

***Press Fast Forward to reach your potential***

**Also at present, we are running the following evening and weekend classes**

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Mathematics (pure, mechanics, statistics)
- English
- ICT
- Accounts

**GCSE Revision Classes**

- English
- Mathematics
- Physics
- Biology
- Chemistry
- ICT / Computing
- French / German
- Spanish

admin@croydontutorialcollege.co.uk
www.croydontutorialcollege.co.uk

# கனடாவில் துளிர்விடும் கருணாயிசம்.

நாம் தீவகத்தைச் சேர்ந்தவர்கள் என்கின்ற வகையிலும், தாயகப் பற்றை ஆழமாக நேசிப்பவர்கள் என்கின்ற வகையிலும் பிரதேசவாதம் என்கின்ற தோற்றம் தெரியாமல், தீவக அமைப்புக்களின் சம்மேளனம் என்கின்ற பெயரில் ஓர் அமைப்பு தொடக்கப்படுவதை தடுத்து நிறுத்தும் நோக்கோடும், தீவக மக்களிடத்தே பிரதேசவாதத்தின் தாக்கத்தை தெளிவுபடுத்தி அதிலிருந்து அவர்கள் விடுபடுதலின் குறிக்கோளோடும் கீழ்வரும் கட்டுரையை எழுதுகின்றோம்?

சுதந்திரப் போரை மழுங்கடிக்கச் செய்யும் சகல உத்திகளையும் கையாண்டு பார்த்து கடைசியாக பிரதேசவாதத்தை நம்பி சிறிலங்கா அரசு களமிறங்கியிருக்கின்றது. அரச பயங்கரவாதத்தின் ஒரு முனையாகவே இப்போ கனடாவில் பிரதேசவாதத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக தீவக சங்கங்களின் அமைப்பு உதயமாகின்றது. இதன் பின்னணியில் அரசின் ஊடுருவல் இருப்பதை காணலாம். அவர்களின் முயற்சி வெற்றிபெறின் அவர்களின் திட்டம் தூரநோக்கில் சாத்தியப்படும் வாய்பிருக்கின்றது. அதனூடாக எமது விடுதலைப் பயணம் பாதிப்படையுமா? என்றால் பாதிப் படையும் என்பதே உண்மை. அதற்கு எடுத்துக் காட்டாக தேசியத் தலைவர் அவர்களின் வாய்வழி வந்த சொல்லே போதுமானது. 'கருணாவின் பிரதேசவாதத்தின் பின்னான 41நாட்களும் ஈழவிடுதலைப் போராட்டத்தின் கறுப்பு நாட்களாகவே கருதுகின்றேன். அம்மக்களையும், எனது போராளிகளையும் எந்த வகையில் பாதுகாப்பாக மீட்கலாம் என ஒவ்வொரு நாட்களும் சிந்திப்பேன் என்கின்றார்.'

ஈழப் போராட்டத்தில் எவ்வளவோ நெருக்குவாரங்களைச் சந்தித்த தேசியத் தலைவர் கருணாவின் பிரதேச வாதத்தின் தாக்கத்தை இவ்வாறு கூறுவதென்பதனால் அதன் தாக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதன் தாக்கம் தெரிந்தே இலங்கையரசு இன்று கனடாவில் தாயகத்திற்கு ஆதரவு தரும் தீவகத்தை பிரதேசவாதம் கொண்டு பிரிப்பதற்கு முயற்சி செய்கின்றது. அதற்கு ஒரு சில எம்முறவுகளே தெரியாமலும், தெரிந்தும் துணை போவதென்பது மிகவும் வேதனைப் படும் விடயமாகும். தீவக மக்களின் ஒன்றுபட்ட, ஒற்றுமையான முடிவாலேயே சிங்கள அரசின் பிரதேசவாத நோயை தீவக மக்களிடத்தே பரவாமல் செய்யலாம்.

### *சிங்கள அரசு செய்த பிரித்தாளும் முயற்சிகளும் அவர்கள் கண்ட பலனும்*

சிங்கள அரசானது எவ்வெவ்வகையில் தமிழரை பிரித்தாளும் வகையிலும் ஈழப்போரை மழுங்கடிக்கச் செய்யும் நோக்கிலும் மேற்கொண்ட சில நடவடிக்கைகளைப் பார்ப்போம். அதனூடாகவும் நாம் அவர்களின் சூழ்ச்சி வலையை அறிந்துகொள்ளலாம்.

உதாரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழருக்கான இட ஒதுக்கீடு என்கின்ற வெற்று வேட்டுடன் ஆட்சிக்கு வந்து தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களை தம்பக்கம் சாய்த்து, அதன்பின் தமிழர்களுக்கு செய்ய வேண்டிய தேவைகளை செய்யாது நட்டாற்றில் விட்டு அதன்மூலம் தமிழர்களுக்குள்ளே ஒற்றுமையின்மையையும், இரு தலைவர்களையும் உருவாக்க முற்பட்டார். ஆனால் அவரின் குறிக்கோளில் இருதலைவர்கள் உருவாகி சுதந்திரப் போருக்கான தலைவராக தேசியத் தலைவரும், சுகம் அனுபவிக்கும் தலைவராக கொழும்பில் அமிர்தலிங்கமும் ஆனார்களே ஒழிய தமிழர்கள் ஒற்றுமை குலையவில்லை.

அதன்பின் ஆட்சியில் ஏறிய பிரேமதாச பாடசாலைகளுக்கான மதிய உணவு என்கின்ற உணவுத்திட்டம், பாடசாலை சீருடைத்திட்டம் என்னும் ஏழைகளின் கையிருப்பையும், வயிற்றின் தாக்கத்தையும் கையில் வைத்துக் கொண்டு அதன் மூலம் ஆட்சியைப்படித்தார். அவர் மறைந்தபின்னும் அவர் செய்த கொடுமைகளை உயர்மட்டத் தமிழர்கள் (கொழும்பில் அரச உத்தியோகத்தில் சுகமாக வாழ்ந்தவர்கள்) பிரேமதாச நல்லது செய்தார் எனக் கூறுவதை இப்போது கூட பார்க்கக் கூடியதாக இருக்கின்றது அல்லவா? பிரேமதாசவின் தூரநோக்கு வறுமையின் பிடியிலும், சாதியக் கொடுமைகளிலும் இருக்கும் மக்களே புலிகளிலும், அவர்களுக்கு ஆதரவு தருவதென்றும், அம்மக்களை புலிகளிடம் இருந்து பிரிப்பதற்கான சூழ்ச்சியே அது. பாணுக்கும், பாடசாலை சீருடைக்குமா? எமது சுதந்திரத்தை இழக்கும் தன்மானம் கெட்டவர்கள் தமிழர்கள். அவரின் திட்டமும் தமிழர்களின் ஒற்றுமையால் சிதைந்து போனது.

அடுத்து வந்த சந்திரிகா, குண்டுச் சத்தங்களின்றி அமைதியை விரும்பிய மக்களை போரின் கொடுமைகளால் நலிவுற்றிருந்த வேளையில், ஒட்டுமொத்த தமிழர்களையும் குறிவைத்து சமாதானம் என்கின்ற புதிய குண்டோடு ஆட்சிக்கு வந்தார். ஒரு தமிழனுமே யாழ் நகரில் இல்லாது இடம்பெயரச்செய்து, தமிழன் சொத்தழித்து, தமிழன் சுகமழித்து, அவன் சொந்தங்களை அழித்து தமிழர்களை புலிகளிடமிருந்து பிரிப்பதற்கான போராகவும், சமாதானத்திற்கான போராகவும் காட்டிக் கொண்டும், பேச்சுவார்த்தையை புலிகள் குழப்பியதால் தான் தாம் போரை நடாத்த வேண்டிய தேவை ஏற்பட்டதென்றும் கூறினார். அதையே உயர் மட்டத் தமிழர்கள் தமது பிரச்சாரமாகவும் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் நடந்தது என்ன? விடுதலையை விரைவு படுத்திய அரச தலைவராகவும், சுதந்திரப்போருக்கான புதிய அத்தியாயம் எழுதி வைத்தவராகவும் சிங்களத் தரப்பே உண்மையை உணரக் கூடிய வகையில் ஆட்சியதிகாரத்திலிருந்து விலத்தப்பட்டார். (விலகிக் கொண்டார் என்பதிலும் விலத்தப்பட்டார் என்பதே உண்மை.)

அடுத்து வந்த ரணிலோ ஒருபடி மேலேபோய் புலிகளுக்குள்ளே பிளவை ஏற்படுத்துவதன் மூலம்தான் ஈழப்போராட்டத்தை சிதைக்கலாம் என்கின்ற புதிய கோண சிந்தனையோடு பிரதேச வாதத்தை கையிலெடுத்து வடக்கு - கிழக்கு என்கின்ற மாகாண பிரதேசம் கூட இல்லாது மட்டக்களப்பு பிரதேசவாதமாக காட்டிக் கொண்டு கருணா என்கின்ற கறுத்தாடுடன் சேர்ந்து 41 நாட்கள் ஈழவரலாற்றில் என்ன நடக்குமோ என்கின்ற பயத்தை உண்டுபண்ணி வைத்திருந்தார்கள். ஆனால் தலைவனின் முடிவுகள் சரியானதாகவே இருக்கும் என்பதை தெளிவாக கருணாவின் ஓட்டத்திற்குப்பின் உலகத்தமிழினமே புரிந்துகொண்டது. ஆனால் பிரதேசவாதம் என்கின்ற புதிய சிங்கள உத்தி சற்று தாக்கத்தை ஏற்படுத்தியதாகவே அனைவராலும் உணரப்படுகின்றது. அதையே இப்போ மகிந்தாவும் கையிலெடுத்திருக்கின்றார்.

ஏன் இத்தனை விளக்கங்கள் என பார்க்கின்றீர்களா? அரச பயங்கரவாதத்தின் கைகள் இப்போ கனடாவிலும் நீண்டு கொண்டு இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்தவே. காரணம் தீவகம் என்கின்ற பிரதேசவாதத்தை கனடாவில் தோற்றுவித்து தாயகப் போரில், சுதந்திரத்தில் பற்றுதல் உள்ளவர்களை அதிலிருந்து தூர விலத்தி விடுவதற்காகவே தற்சமயம் தீவக அமைப்புக்களின் சம்மேளனம் என்கின்ற அமைப்பு உதயமாவதாகத் தெரிகின்றது. இவற்றை கருத்தில் கொண்டே தற்சமயம் இலங்கை அரசு, தமது ஊடுருவலை தீவகத்தைச் சேர்ந்தவர்களில் ஒருசிலரின் ஊடாக பிரதேச வாதம் என்கின்ற நோயை தோற்றுவிப்பதற்காக ஆரம்பித்துள்ளது. அரசின் பிரதேசவாதப் பாயை தீவகத் தமிழர்கள் இடத்தே விரித்திருக்கின்றது. அவ்விடயம் தெரியாமலும், அவ்வாறு இருப்பது தமது பலமாகவும் கருதி பல அப்பாவித் தமிழர்கள் அவர்களின் சொல் கேட்டு அதன் பின் போவதானது தீவுப்பகுதி மக்களின் ஒற்றுமையைச் சிதைப்பதிலும், சுதந்திரப் போரின் வீச்சைக் குறைப்பதிலும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மகிந்தாவின் இந்த உத்தி பலிப்பதற்கு புலம்பெயர் வாழ் தீவக மக்களும் சரி பிற மாவட்ட மக்களும் சரி துணை போகக் கூடாதென்பதே எம் நோக்கமாகும். தீவக மக்கள் மேற்படி அமைப்பிற்கு துணை போய் பிரதேசவாதம் இங்கும் முளைவிட்டால் கனடாவிலும் பல கருணாக்களை உருவாக்கிய பெருமையை தீவக மக்களும், பிரதேசவாதம் கனடாவில் சரியான நேரத்தில், சரியான கோணத்தில் தொடக்கப் பட்டு விட்டது என்கின்ற வெற்றியை மகிந்தாவும் பெற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள்.

ஆகவே எமது தீவகம் வாழ் உறவுகளே! தெளிவாகவிருங்கள். அரசின் கைக்கூலிகளுக்கு துணை போகும் புல்லுருவிகளை இனம் கண்டு மக்கள் மத்தியிலிருந்து துரத்தியடியுங்கள்.

*- தீவக மைந்தர்கள்*

## A Condolence Message on the Death of Mr S Thanapalan



Born
09-08-1943

Entered Glory
15-08-2006

We have received with much sadness the news of the passing away of Mr S Thanapalan, our much loved Principal of St John's College. We offer our deepest condolences to his wife Prema and the children, the staff and students of St John's College, St John's Parish and the wider community in Jaffna.

Mr Thanapalan gave his whole life in service of the college, the parish and the community around St John's. He was associated with the school for over fifty years as student, teacher and Principal. He was an efficient and dedicated educationist and a friendly and humble servant of God. His love for the school was limitless.

He will be remembered by many generations of Johnians for the excellent standards maintained in discipline, sports and studies, and for the development of the College building, playground and Campus in general. He was held in high esteem, and respected and loved by a wide cross section of people in Jaffna and in Sri Lanka.

Our Past Pupils Association is deeply grateful to him for his leadership and devoted services. We shall miss Mr Thanapalan's smiling and welcoming personality at college.

As a truly dedicated servant of our Alma Mater, our guru and our brother he will continue to live in the memory of all those he influenced.

May his soul rest in peace

***The St Johns Chundukuli Past Pupils Association UK***




## ST.JOHN's Boys & CHUNDUKULI Girls

You are invited for a
PARTY IN THE PARK
A family fun day
Fun & Games for ALL Ages
Cricket, Netball, Rounders, Kids Games & other school day games to bring back fond memories & remember your school days.
BBQ & Food Fiesta
Subsidised bar

Dress code: Sports wear/Casual

Venue: POST OFFICE SPORTS GROUND
Opp. Sudbury Hill Station
136 Greenford Road
Harrow, Middx

Date, Time: 10th September, 2006 1:00 PM onwards

For details contact:
Jayantha 07956 290 916
Sivakumar 07956 555 589
Sriharan 07854 780 118
Sahunthala 020 8924 9856
Sarogini 020 8527 8050

*The CSJPPA Committee will meet at the same venue at 12 AM to organise the Memorial Service for Mr. S. Thanabalan the principal of SJC who passed away on the 15th August 2006*

BBK IT Solutions

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் - 17

கிறிஸ்தவ வேதமான பைபிளில பழைய ஏற்பாட்டுக் காலத்தில நடந்த ஒரு கதையப் போலதான 1958 இல சிங்களவருக்கு எதிரான முதல் முறியடிப்புச் சமர் நடந்தது. பெலிஸ்தர் எண்டிற சாதியாருக்கும் யூதருககும் நடந்த போரில உயர்ந்து பருத்த உடலும் வீரமும், உடலையும் தலையையும் போர்த்த இரும்புக்கவசமும் கொண்டிருந்த ஹோலியாத்தை டேவிட தனனுடைய கவண்கல்லால குறிதவறாம அவன்ர நெதத்திப்பொட்டில அடிச்சி விழ்த்தினதால யூத இனம் வெற்றிபெற்றதாம் எண்டு வேதாகமம் சொல்லுது.

ஆயுதமும் ஆளணி பலமும் அரசியல் ராஜதந்திர ஆதரவும் இருந்தாலும் நெஞ்சுரத்தோட நிக்கிற வனுக்குமுன்னால ஒண்டும் வேலைசெய்யாது பாருங்கோ. எங்கட தலைவன் தமிழ்த் தேசியத்தை இண்டைக்கு அந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறான். அவனுக்கு முன்னால ஆயிரமாயிரமாய அணிவகுத்து நிற்கிற வீரவேங்கைகள் ஒவ்வொருவரும் நூறுபேருக்குச் சமானமானவர்கள். வரலாறு அவர்கள அப்பிடி ஆக்கியிருக்குது. அதால ஒரு போராளி விழுந்தாலும் எதிரியிர பலம் நூறுபேரால அதிகரிக்குது. அத நினைச்சாத்தான் கவலை.

இயலாமையின்ர வெளிப்பாட்டிலதான் பள்ளிக்கூடப் பிள்ளையளக் கொண்டவனுகள். தம்பியிர மனிதாபிமானத்தையும் அனாதைச் சிறுவர்களோட அவர் காட்டிற அன்பையும் ஆதரவையும் கொச்சைப்படுத்த, வேணுமெண்டே திட்டம் போட்டு குண்டுபோட்டவனுகள். இப்ப ஹிட்லர் காலத்து பிரச்சார மந்திரி கோயபல்ஸிட பாணியில இலங்கையிலயும் ஒருவர் புறப்பட்டிரிக்கிறார்.

ஒரே பொய்யத் திரும்பத்திரும்பச் சொன்னால் அது உண்மையாப் போயிரும் எண்டு தப்புக்கணக்குப் போட்டு பள்ளிக் கூடப் பிள்ளையளையெல்லாம் செஞ்சோலையில ஆயுதப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த போராளிகள் எண்டு கணக்குக் காட்ட வெளிக்கிடுறார். உலகம ஏதோ இவர்ர உடான்சுகள தேவவாக்காக நம்பி அவருக்கும் அவர் சார்ந்திரிக்கிற அரசாங்கத்துக்கும் பாராட்டுக் கடிதம் எழுதவேணுமெண்டு எதிர்பாக்கிறார். கொஞ்சம் கூடத் துள்ளுறானுகள். துள்ளுறமாடு பொதிசுமக்கும். கடைசியாக் கோயபல்சுக்கு என்ன நடந்தது? தன்ர பொஞ்சாதியையும் புள்ளையளையும் தன்ர கையாலேயே சுட்டுக்கொன்று போட்டு தானும் தற்கொலை செய்தான். தெய்வம் நிண்டு கொல்லும் பாருங்கோ.

'தர்மத்தின வாழவதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லு மெனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங்கற்கும்'

எண்டு அருச்சுனன் பாரதியிர பாஞ்சாலி சபதத்தில சொன்னமாதிரி இவனுகள் எவ்வளவுதான் திருகுதாளம் பண்ணுனாலும் தருமம் வெல்லப்போறது நிச்சயம் பாருங்கோ.

அந்த வகையில செஞ்சோலையில வீசப்பட்ட குண்டால அனியாயமாகப் பலிகொள்ளப் பட்ட குழந்தைகளுக்காக இந்த ஆவேசச் சொல் வீச்சை இந்தத் தொடரில பதிக்கிறன்.

சண்டையிலே பால் அகவை
வேறுபாடில்லையென்று
சண்டாளன் சொல்கின்றான் செய்தி அவனுக்கு
அதிலும் வயதிலலை என்பானோ? – அந்தப்
பண்புகெட்டுப்போன பரத்தை மகன், தான பெற்ற
சேயைப் புணர்வானோ? தாயைப் புணர்வானோ?
ஆதலினால அவன வீட்டு அன்னையரே தங்கையரே
உங்களைக் குழந்தைகளை உடன் பாதுகாருங்கள்.

நயவஞ்சகர்களே!

செஞ்சோலை செய்கின்ற சேவைகளும் அன்புக்கும்
மாசுகற்பிக்க மதங்கொண்டீர் உங்களது
தேசத்தை என்றும் தீருவருளே தீண்டாது
வேசிகளும் வீணர்களும் வம்பப பரத்தர்களும
வாசம் புரிய வழிதவறித் தென்னிலங்கை
நாசமுற்றுப் போகட்டும் நாடழிந்து காடாகி
பாம்புகளும் தேளும் பரவட்டும் – மக்களெல்லாம்
தேம்பித்திரியட்டும் திக்குத்தெரியாது
ஆதரவற்று அழியட்டும் அங்கெல்லாம
தீதே நிறையட்டும் தேவி மாகாளியவள்
பார்வை முறைக்கட்டும் பரவட்டும் தீ எங்கும்

குண்டு பொழிந்து குழந்தைகளைக் கொன்றவனே!

ஆணுடல் அழுகுமுந்தன்
அங்கமோ புழுத்துநாறும்
ஊனமுண்டாகும் கணகள்
ஒளியிழந்தொட்டிப்போகும்
ஈனமே நெஞ்சிலில்லா இரண்யனே மறுபிறப்பில்
ஏனமாய்ப் பிறந்து எங்கள் ஈழத்தில்
மலத்தையுண்பாய்.

குண்டாலழிக்கக் குறி கொடுத்த துரோகிகளே!

வஞ்சமற்றென்வாய் சொன்ன வன்கவியும் கல்லன்ன
நெஞ்சகத் துறைக்குமாகில் நேரிய வழியைத் தேடீர்
தஞ்சமற்றுழலும் ஏழைத் தமிழினம் மனது வேகக்
கஞ்சலகாள் பிழைப்பீராயின் கண்ணிழந்துழல்தல் திண்ணம்.

தலைவன் மௌனமாகக் குமுறுறார் பாருங்கோ. நமக்கும் இந்தக் கொடுமையச் செய்தவனுகளுக்குமிடையில வித்தியாசமில்லாமப் போகக்கூடியமாதிரி நாம காரியங்களச் செய்ய ஏலாது. அப்பிடிச் செய்யிறது பெரிய வேலையில்ல.

இப்ப நம்மோட உலகத்தில ஒரு அனுதாபம் ஏற்பட்டிரிக்குது. அரச வன்முறைக்கு ஆகுதியாகிப்போன அந்தச் சின்னஞ்சிறிசுகளால நமக்குக் கிடைக்கிற உலக அனுதாபம் தேவைதானா எண்டுகூட நாமயோசிக்கலாம். எதிரி கண்ணாடி வீட்டுக்குள்ள இருந்து கல்லெறியிறான். அது அவனுடைய முட்டாள்தனத்தால இல்லை.

ஈழத்தமிழன் கொடியவனில்ல மகத்தானவோர் தலைமையைக் கொண்ட பண்பாளன் அவன். அதத் தனக்குத் திருப்பிச் செய்யமாட்டான் எண்ட நம்பிக்கையிலையும் தைரியத்திலையும்தான். அத நாங்க பாதுகாக்கவேணும். எல்லையே இல்லாத பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் இறைவன் எமக்கு அருளட்டும். இறுதி வெற்றி நிச்சயம் கிட்டும்.

தொடரும்....

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## பெண்களும் உடற்பருமனும்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

இன்றைய சமுதாயத்தில் உடல் எடை பற்றிய விழிப்புணர்வு மேலோங்கியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பிரச்சினைக்குரிய மருத்துவ விடயமாகவுள்ளது. நடுத்தரவர்க்கத்திலும், உயர்மட்டத்திலும் உள்ளவர்கள் அதிகரித்த உடல் எடையினால் மிகவும் சிரமப்படுகின்றனர். பெண்களிடையே காணப்படும் விழிப்புணர்வானது உடல் எடை சார்ந்த சிகிச்சையாளர்களை மிகவும் சுறுசுறுப்பாக தொழிற்படவைத்துள்ளது.

ஒருவர் தனது உடற்பருமன் பற்றி ஒரு எச்சரிக்கை உணர்வை அடைவார். ஆனால் அவர் செய்யவேண்டிய முதல் வேலை தனது குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும். இவ்வாறு பெறப்படும் ஒரு தீர்மானமே உடல் எடை ஒருவருடைய வயது, உயரம், ஆண் பெண் ஆகிய நிலமைகளுக்கு அமைய ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் உள்ளதா அல்லது அதிகமாகவுள்ளதா என தீர்மானிக்க உதவும்.

அடுத்ததாக உடல் எடை அதிகரிப்பு அதிகமாக உண்பதால் ஏற்படுகின்றதா அல்லது சில உடல் நோய்களால் ஏற்படுகின்றதா என அறிய உதவும். நோய்கள் காரணமாக உடல் எடை அதிகரிப்பின் அதற்கான சரியான காரணத்தை கண்டறிந்து சிகிச்சை அளிக்கவேண்டும். ஏனெனில் நோய் காரணமாக உடல் எடை அதிகரிப்பின் அது நோயின் ஒரு குறியாகும் (Sign). எனவே நோய் கட்டுப்பாட்டுக்கு வரும்போது உடற்பருமனும் சரியான அளவுக்கு வந்துவிடும். உடல் எடை அதிகரிப்பின் காரணங்கள்

1. அதிக உணவு 2. குறைந்த உடல்வேலை 3. பரம்பரை காரணங்கள்

ஒரு குடும்பத்தில் அவரது முன்னோர்கள் அனைவரும் மிக பருமனாகவோ அல்லது மிகவும் உயரக் குறைவுடனும் பருமனாகவும் இருப்பார்களானால் அப்பரம்பரையில் வருபவர்கள் சராசரிக்கு அதிகமாக பருமனாக காணப்படலாம்.

2. பிறப்பின்போது ஏற்படும் கரு வளர்ச்சி பாதிப்புகளினால் பிறப்போர் வளரும்போது அதிக உடல் எடையுடன் காணப்படலாம். Downs Syndrome

3. சிறுவரில் Growth Hormone வளர்ச்சிக்கான கார்மோன் அதிகம் சுரப்பதால் பாதிக்கப்பட்டவர் அசாதாரண வளர்த்தியுடனும் எடையுடனும காணப்படலாம்.

4. Thyroid Hormones தைரோயிட் கார்மோன் சுரப்பு மிகக் குறைவாக காணப்படுமானால் படிப்படியாக மிக்சோடிமா எனும் நோய் ஏற்படும. இதன் காரணமாகவும் உடற்பருமன் அதிகரிக்கும்.

5. சமிபாட்டு தொகுதியில் ஏற்படும் சில மாற்றங்களால் மிக அதிகமாக உணவு குடலில் இருந்து உறிஞ்சப்படலாம். இதனாலும் உடல் எடை அதிகரிக்கும்.

6. நீண்டநாள் பயன்படுத்தும் சில மருந்துகள், அதிக பசி உணர்வை ஏற்படுத்தும். இதனால் பாதிக்கப்பட்டவர் படிப்படியாக அதிக அளவு உண்ண நேரிடும். இதன் விளைவாக அதிகரித்த உடல் எடை ஏற்படும்.

7. மனச்சோர்வு Mental depression நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர், அடிக்கடி உண்பதை ஒரு சுகமாக உணர்வதுண்டு. இதன் விளைவாக விரைவில் உடல் எடை அதிகரிக்கும்.

8. தொழில்சார் சிக்கல் Occupational hazard, என்பது உணவு தயாரிப்பு அல்லது விற்பனை நிலையங்களில் தொழில் புரிபவர்களுக்கு இலவசமாக பலவகையான உணவுகளை உண்ணக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதனால் அதிகமாக உண்ண நேரிட்டு விளைவாக உடற்பருமன் அதிகரிக்கும்.

9. மது அருந்தல்

பொதுவாக மது அருந்துபவர்கள் அதனுடன் பலவகையான உணவுப்பொருட்களை சேர்த்து உண்பர். இவ்வாறு உண்பது அவரது மூன்று வேளை உணவுக்கு அதிகமாகவே இருக்கும். இதனால் படிப்படியாக உடற்பருமன் அதிகரிக்கும்.

10. மாதவிலக்கு நின்று போதல் Menopause காரணமாக பெண்களுக்கு பல சிக்கல் ஏற்படும். இவற்றில் ஒன்று Menopausal Obesity எனப்படும். இதில் உடல் எடை அதிகரிக்கும்.

*அடுத்த இதழில் அதற்கான பரிகாரத்தைப் பார்ப்போம்...*

**Tamsons**
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# றாலஹாமியும் குடு சுனிலும்

## டிங்கி நோனா
*( வாழைத் தோட்டத்தில் )*

*நாலு வருசத்துக்கு முந்தி கதிரேசன் வீதியிலை மினித்தியட்டருக்கு முன்னுக்கு நிண்டு எங்கடை தம்பிமார் ரெண்டு பேர் கதைச்சுக்கொண்டு நிண்டதை ஒட்டுக் கேட்டபோது:*

குமார்: என்னடாப்பா சீலன் படம் பாக்கவே?

சீலன்: ஓமடா குமார், வேறை என்னத்தைச் செய்யுறது. மனசேசரியில்லையடா.

குமார்: ஏனடாப்பா என்ன பிரச்சினை.

சீலன்: எல்லாம் என்ரை நேரமடாப்பா, அவ்வளவு காலமும் இருந்து போட்டு நான் வெளிநாட்டுக்கு வெளிக்கிட்ட இந்த நேரம் பாத்து ஒப்பந்தம் எழுதியிருக்கிறான்கள்.

குமார்: ஒப்பந்தத்துக்கும் நீ வெளிநாடு போற துக்கும் என்னடா சம்பந்தம்.

சீலன்: சும்மா என்ரை விசரைக் கிளப்பாதை, சண்டை நடந்துதெண்டா ஒரு மாதிரி வெளிநாட்டிலை போயிறங்கி அவன் பிடிச்ச உள்ளை போட்டான், இவன் காசு கேட்டான் எண்டு இல்லாத பொல்லாததை எல்லாம் சோடிச்சு பேப்பர் எடுத்திடலாம். இப்ப போனதும் போகாததுமா அடுத்த பிளேனிலை ஏத்தி அனுப்பி விட்டிடுவாங்கள்.

குமார்: உதுக்குள்ளை உப்பிடி ஒரு விசயம் இருக்குதெண்டு நான் யோசிக்கெல்லை. இனி ஊரிலை போய் தோட்டம் செய்ய வேண்டியது தான்.

*தம்பிமார் ரெண்டு பேரும் கவலைப்பட்டுக் கொண்டிருக்க 'அந்த' மாதிரிப் படம் பாக்கிற துக்கு அந்த வழியால் வந்த முத்துபண்டா றாலஹாமியும் குடு சுனிலும் சந்தித்துக் கொள்கிறார்கள்.*

(சின்ன அறிமுகம்: முத்துபண்டா றாலஹாமி மட்டக்குளி பொலிஸ் நிலைய சாதாரண கான்ஸ்டபிள். குடு சுனில் பாதாள உலகக் கோஸ்டி ஒண்டுக்குத் தலைவன்)

கு.சுனில்: ஆயுபோவன் றாலஹாமி,

மு. றாலஹாமி: ஆ மச்சான் சுனில், வறெங்

கு.சுனில்: என்ன மூஞ்சி டிம்மா இறுக்கிறது?

மு.றாலஹாமி: அதைப் பத்தி பேச வேனாம், சமாதானஞ் சொல்லி நம்மடை உழைப்பை கெடுத்துப் போட்டது தானே?

கு.சுனில்: ஏ மொகத?

மு.றாலஹாமி: சண்டை டைமிலை புலி சும்மா கிடந்தாலும் அந்த பேரை சொல்லி தெமலுவளை அள்ளி உள்ளை போட்டு சல்லி பண்ணினது. சொல்லி வேலை இல்லை மச்சான், நம்மளுக்கு ஒரு பைசிக்கள் தேவை சொன்னா கவர்மண்ட வேலை செய்யிற வனை தூக்கி உள்ளை போட்டா அடுத்த நாள் பைசிக்கிள். மோட்ட சைக்கிள் தேவை சொன்னா பாங்கிலை வேலை செய்யிறவனை தூக்கி உள்ளை போட்டா அடுத்த நாள் மோட்ட பைசிக்கிள். வீடு வேணும் சொன்னா யாருசரி கலியாணம் செஞ்சு வெளிநாடு போற குட்டியை தூக்கி உள்ளை வைச்சா அடுத்த நாள் வீடு. இது மாதிரி இருந்த நம்மளை இண்ணைக்கு தெமலுவள் பூனை மாதிரி பாக்கிறது. எல்லாம் நம்மட வேலாவ.

கு.சுனில்: அது நிசம் தாங் றாலஹாமி, நாமளும் ஒங்க பேரை சொல்லி அவனுவளை மெறட்டி சல்லி பண்ணினது. சல்லி இல்லை சொன்னா உங்களுக்கு சிக்னல் தந்தது. தாஜ் சமுத்திராவிலை திண்டு மஜஸ்ரிலை படம் பாத்த நம்மளை இந்த மினி தியட்டர்லை பலாய் படம் பாத்து அரியபவானிலை திங்க வைச்சிட்ட நம்ம றணில்.

மு. றாலஹாமி: நமக்கு மிச்சம் ஏறுறது இவனுவள் வெளிநாட்டிலை இருந்து வந்து படங்காட்டுறது. நாம என்ன சரி கதைச்சா எம்பசிலை சொல்லுற சொல்லி நம்மளை மிறட்டுறானுவள். பலாய் பாசைவள் எல்லாம் பேசி நம்மளை கிண்டல் பண்ணுறது.

கு.சுனில்: எங்களுக்கும் வெலாவ வாறது. அந்த டைம் பலமுகோ.

*(நாலு வரிசம் உறுண்டு போச்சுது. இப்ப பழையபடி காலி றோட்டிலை அம்புலன்ஸ்கள் ஓடித் திரியுது. முத்துபண்டா றாலஹாமியும் குடு சுனிலும் தாஜ்சமுத்திராவிலை விஸ்கி அடிததபடி பேசிக் கொள்கிறார்கள்)*

கு.சுனில்: றாலஹாமி பயநத்துவ (பயமில்லாமல்) பொண்ட. சல்லி நான் குடுக்கிறது.

மு. றாலஹாமி: என்ன சாக்கிலை சல்லி றொம்ப இருக்கிற மாதிரி.

கு.சுனில்: ஒவ் றாலஹாமி, நேத்து ஒரு புது கொண்றாக்ற் கிடைச்சது தானே.

மு. றாலஹாமி: அது என்னா கொண்றாக்ற் நம்மளுகிட்டை சொல்லிறது.

கு.சுனில்: தெமல பேப்பர்காறனை நேத்து தூக்கினது தானே. அந்த புத்தா இப்ப களனிகங்கவிலை மிதக்குறது.

மு.றாலஹாமி: நமக்கும் அப்பிடி தான் மச்சான். இப்ப தான் சல்லி புழங்கறது. அணே புது ஹாமதுறுவணே. மஹ்ந்தவும் வீரவன்சவும் இன்னும் பத்து வருசம் கவர்மண்ட் செய்யணும்.

கு.சுனில்: றாலஹாமி அதிலை மீசையோடை ஒருத்தன் வாறது. நம்மடை வேலையைப் பாப்பம்.

*(புலிப் பயங்கரவாதி ஆயுதங்களுடன் கொழும்பில் கைது என்ற பத்திரிகைச் செய்தியை நாளைய பத்திரிகைகளில் பார்க்கலாம்)*

> மல்லாக்கப் படுத்து யோசிக்க வேண்டிய விசயம்
>
> மண்டையில போடுறது Dye
> மண்டைய போட்டா Die

# பஞ்ச் தந்திர கதை

நம்ம விஜய டி ராஜேந்தர் பஞ்ச தந்திர கதை சொல்றார்.

டேய் ஒரு ஊர்ல இருந்திச்சிடா காக்கா
அது பாட்டி சுட்ட வடையை சுட்டுச்சுடா நேக்கா
உட்கார்ந்ததுடா மரத்துல ஷோக்கா
அப்ப அங்க நரி வந்துச்சுடா ஃப்ளுாக்கா
நரி காக்காயை பார்த்து கேட்டுச்சாம்
'காக்கா காக்கா கறுப்பு காக்கா
உன் வடையை கொஞ்சம் தா காக்கா'ன்னு
அதுக்கு காக்கா சொல்லிச்சாம்
'மாமா மாமா நரி மாமா
என் முதுகை கொஞ்சம் சொறி மாமா'ன்னு
அதுக்கு கோவப்பட்ட நரி சொல்லிச்சாம்
'சாம்பார்ல போடுறது பெருங்காயம்
உன் வடையே வேண்டாம்டா வெங்காயம்'ன்னு

இதையே விஜயகாந்த் சொன்னா . . .

டேய்ய்ய்ய், வயசான காலத்துல காஷ்மீர் பார்டர் ஓரமா வடை சுட்ட பாட்டி கிட்ட இருந்து ஒரு பாகிஸ்தான் காக்கா வடையை திருடிச்சி. அமெரிக்கா கிட்ட அடி வாங்கின ஒரு ஆப்கானிஸ்தான் நரி அந்த காக்கா கிட்ட பாடு'ன்னு சொல்லிச்சி. பைத்தியகார காக்கா வாயை தொறந்து பாடி வடையை விட்டுடிச்சி. கீழ விழுந்த வடை நரி தலைல விழுந்து நரி அங்கேயே செத்து போச்சி. வடையை பிடிச்சி இருந்த காக்கா பாடி முடிச்சதும் அதுவும் செத்து போச்சி. ஏன் தெரியுமா? அது இந்திய வடை. இந்தியனை தவிர எவன் அதை தொட்டாலும் அவனுக்கு சாவு தாண்டா.

ஜெய் ஹிந்த் !!

- அடடா



# மரண அறிவித்தல்
## திருமதி செல்லமுத்து அப்பையா

**தோற்றம் - 06.04.1924 மறைவு - 26.08.2006**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து 26.08.06 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி நாகலிங்கம் சின்னாரிப்பிள்ளை அவர்களின் ஆசை மகளும் காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம், மற்றும் பரமேஸ்வரி, சிவபாக்கியம், தர்மராசா, காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் ஆசை அம்மாவும் காலஞ்சென்ற பேரம்பலத்தின் சிறிய தாயாரும் அருளானந்தம், தியாகராசா, கிருஸ்ணபவானி, சுலோஜனா ஆகியோரின் அன்பு மாமியும், றூபி, றூபா, றூபாகரன், சுகுமார், சுரேஸ்குமார், சுஜிதா, தனுசா, றுபேஸ், றமேஸ், சலூஜா, ஜெலூஜா, சங்கீதா, சரண்யா, ஆகியோரின் ஆசைப் பேத்தியும், கவிதா, பாலகுமார், தயாளினி, தினோ, ஈவொண், கிரிதரன் யோகராசா, கவிதா ஆகியோரின் அன்புப் பேத்தியும் சலோமி, அருணன், றக்சன், கிரிசானா, லுக்சானா, வினுசன், சோபியா, ஜெசிக்கா, ஹஸ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3.09.06 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு Oshwal House, 1 Campbell Road, Croydon, CR0 2SQ, முகவரியில் நடைபெற்று மாலை 2 மணிக்கு Morden Cemetry, Low Morden Lane SM4 4NU மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுரேஸ்குமார் : 07944 160 481
றூபா : 07958 420 707
றுபேஸ் : 07990 875 592

# 'பெண் என்றால் பேயே இரங்குவாயா?'

இதென்னடியம்மா பேயிடம் கேள்விக்குறி?

பெண் என்றால் பேய் இரங்கும் என்று சொல்லிச் சொல்லியே பாருங்கோ பெண்களை அவர்களின் மனவலுவில கையை வைச்சு காட்சிப் பொருளாகவும், கனதியான எச்செயலுக்கும் இலாயக்கு இல்லாதவை யாவும் மாத்திப்போட்டினம் விளங்கிச்சோ?. ஆரெவை என்றெல்லாம் கேட்கக் கூடாது. அந்தக் காலத்தில இருந்து எவரெவர் என்று நான் சொல்ல? (ஆட்களைத் தெரிஞ்சாச் சொல்லியிருப்பன்)

நம்ம மூதாதையர் என்று வையுங்கோவன். இப்படி மூதாதையரில பழி போடுறன் என்று 'ஆனையை வீழ்த்திய அரியாத்தையையும்,' 'புலியை முறத்தால் மொத்திய தமிழ் மறத்தியையும்', 'போரில் முதுகில் வேல் பாய்ந்து சாவெய்திய மகனுக்கு பாலுட்டியதை அவமானமாக் கருதி மார்பகங்களை வெட்டி எறிந்த வீரத்தாயையும்' ஆதாரம் காட்டி என்னை அல்லல்ப் படுத்தக்கூடாது. அவர்களெல்லாம் அபூர்வப் பிறவிகள் அதுக்காக இண்டைக்கு தமிழீழத்தில் எதிரியைத் துவசம் செய்கிற பெண்புலிகளிடம் என்னை மாட்டி விடவேண்டாம். இவர்களெல்லாம் அன்னை சக்தியின் வடிவங்கள்..

இப்ப நானிங்கே அவர்களைப் பற்றி எழுத வரேல்லை புரிஞ்சுகொள்ளுங்கோ! அட உங்களுக்குத்தான் சொல்லுறன். அவர்களின் வாசனை பட்டாலே பேய்களெல்லாம் வீறிட்டுக் கொண்டு ஓடிவிடும் அது உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும்.

நான் பேயே! இரங்குவாயா? என்று இரந்து கேட்டதெல்லாம் புலம்பெயர்ந்த பல பேதைகளுக்காக...

புலம்பெயர்ந்த தேசங்களில கொஞ்சப்பேர் இருக்கினம் மூக்கைப் பொத்தினா வாயைத் திறக்கத் தெரியாமல் திணறித் தவிப்பினமே அவர்களுக்காகத்தான்... பேயை இரங்குவாயா? என்று கேட்டனான். என்னடியம்மா இவ என்னத்தைச் சொல்ல வாறா என்று நீங்கள் புரியாமல் விழிக்கிறது இந்தப் 'பொன்ஸ்' பொன்னுக்கண்டுக்கு நல்லா விளங்குது.

என்ன செய்ய? எனக்கும் எழுதத் தெரியுமென்று 'இங்க வந்து உங்க கருத்துகளைக் கொட்டுங்கோ' என்று இவளுகள் கூப்பிட்டாளுகள். சரி தானா வர்ற சீதேவியை ஏன் விரட்டுவான் என்று ஓமென்று எழுதத் தொடங்கீட்டன் என்ர பேச்சு வழக்கு உங்களுக்கு விளங்கேல்லை என்றாச் சொல்லிப் போடுங்கோ. 'எல்லாம் புண்படாமல் பண்பட்டுக் கொள்ளத்தான்!'

உங்காலை இந்த மாதர் பகுதிக்கு நேரங் கிடைக்கேக்க எல்லாம் வருவன் அதுக்காக ஒவ்வொரு 'ஒரு பேப்பரிலும்' வருவேன் என்று எதிர்பார்க்கக் கூடாது.

இப்ப உங்களுக்கு என்னைப் பற்றின அறிமுகம் காணும்தானே?.

எங்களுக்கு நாங்க இருக்கிற இடத்தில நிறையச் சலுகைகள் இருக்கு. அவையை நல்லாப் பயன்படுத்தவேணும் கண்டியளோ! நான் என்னென்ன செய்யிறன் என்று அப்பப்போ கொஞ்சம் கொஞ்சமா எழுதுவன்தானே...

இண்டைக்கு எனக்கு யோகாக் கிளாஸ் இருக்கு இப்ப வெளிக்கிட்டாத்தான் எப்பவுமே தலையாக இருக்க முடியும். எதிர்பாருங்கோ பொடிச்சிகளே! 'பொன்ஸ்' பொன்னுக்கண்டு புதினங்களோட வருவன். இப்ப வரட்டே!

*- புதின ஆச்சி*
*'பொன்ஸ்' பொன்னுக்கண்டு*

## தலையில் வியர்வை நாற்றம் போக்க

*தலையை சரிவர பராமரிக்காமல் போனால், தலையில் வியர்த்துக் கொட்டி, வியர்க்குருவும் அரிப்பும் ஏற்பட்டு, தலை நாறத் தொடங்கும்.*

*சீயக்காய் பொடி - 2 டீஸ்பூன்*

*வெந்தயத்தூள் - 2 டீஸ்பூன்*

*இரண்டையும் வெந்நீரில் கலந்து பேஸ்ட்டாக்கி ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலைக்கு தேய்த்துக் குளியுங்கள். ஓரிரு வாரத்தில் அழுக்கும், வியர்வை நாற்றமும் போய் தலை சுத்தமாகி விடும்.*

# ஆச்சியின்... அட்வைஸ்!

aachi@orupaper.com

*கேள்வி:*

எனது பெயர் மலர்விழி வயது நாற்பத்தியாறு திருமணமாகி இருபத்திரண்டு வருடங்கள், 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடையில் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது கணவர் குடும்பத்தை நன்கு கவனிப்பவர் சம்பள பணத்தை அப்பிடியே குடும்பத்திற்கென தருபவர். பிள்ளைகளிலும், என்னிலும் பாசமுள்ளவர். அவரிடம் இருக்கும் ஒரே ஒரு குறை கோபம் வந்தால் உடனே கை கால் நீண்டு விடும். பிள்ளைகள் தலைக்கு மேல் வளர்ந்து விட்டார்கள் என அவர்கள் மீது இப்போ கை வைப்பது இல்லை. ஆனால் எனக்கு எப்பவும் போல் அடித்து போடுவார். பிறகு கோபம் ஆறியபின் தனிப்பட்ட முறையில் குழந்தை போல கவலைப்பட்டு மன்னிப்புப் கேட்பார். ஆனால் இப்போ பிள்ளைகள் வளர்ந்து விட்டதால் முறுகிக் கொண்டு நிற்கிறார்கள். இனி எனக்கு அடித்தால் பொலிஸ்சுக்கு போன் பண்ணப் போவதாக எனக்குச் சொல்கிறார்கள். கண்ணாடியில் நடப்பது போல் உள்ளது வாழ்க்கை. எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்?

## ஆச்சியின்... அட்வைஸ்!

பிள்ள நீர் சொல்கிறதைப் பார்த்தால் அவருக்கு, தான் அடிப்பது தவறு என்று நன்றாக விளங்குகிறது. அவர் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கேட்பதை விட பிள்ளைகளுக்கு முன்னிலையிலும் தன் நடத்தைக்கு மன்னிப்பு கேட்பது நல்லது. அப்பிடி இல்லாவிட்டால் அவர் மன்னிப்பு கேட்டதை பிள்ளைகளுக்கு நீராவது அவருக்கு முன்னிலையிலோ, தனிப்பட்ட முறையிலோ தெரியப்படுத்தலாம். இது பிள்ளைகளுக்கும் அவருக்குமான இடைவெளியைக் குறைக்கும். உங்கள் வைத்தியரிடம் கூட ஆலோசனை கேட்கலாம். இப்போது வீட்டு வன்முறைக் கேஸ்சுகளை மனைவிமார் விரும்பினால் கூட வாபஸ் பெறுவது கடினம். அவர்கள் கணவனுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் பயந்து தான் அதைக்கேட்பதாக பெண்கள் அமைப்புகள் வாதாடுகின்றன. ஆகவே வருமுன் காப்பது நல்லது.

*ஆச்சியிடம் அட்வைஸ் கேட்க விரும்புபவர்கள், உங்கள் கேள்விகளை ஒரு ஒரு பேப்பர் முகவரிக்கோ, மின்னஞ்சலுக்கோ எழுதி அனுப்பலாம். உங்கள் தனிப்பட்ட விபரங்களின் நம்பகத்தன்மை பேணப்படும்.*

# வசந்திக்கு சுகந்தி எழுதும் கடிதம்

*என் ஆருயிர் தோழிக்கு அன்புடன் எழுதிக் கொள்வது*

உனது கடிதம் கிடைத்து. நீ எழுதியுள்ளது போல நாட்டு நிலமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகிறது. இங்குள்ள தமிழ் தொலைக் காட்சிகளிலும், தமிழ் வெப்சைட்டுகளிலும் நிலமைகளை உடனுக்குடன் அறியக் கூடியதாக இருந்தாலும் ஆங்கில ஊடகங்களில் எமது நிலமைகள், இழப்புகள், அவலங்கள் பற்றிய செய்திகள் ஒன்றையுமே காணக் கிடைப்பதில்லை. அதைவிட புண்ணில் புளிப்பற்றியது போல, அங்கு அறுபது, நூறு எனச் சனம் சாக இவர்கள் அதை ஒன்றையுமே போடாது இலங்கையில் நடந்த கிரிக்கற் மச்சின் ஸ்கோரையோ அல்லது ஏதும் சின்னனாக நடந்த தொன்றை, அதுமட்டும் தான் உங்கு நடந்த மாதிரி எழுதுவது மிகுந்த மனவேதனையையும், செய்மதிகள் மூலம் செய்தி திரட்டக்கூடிய, இந்த வெளிநாட்டு ஊடகங்கள் தூங்குவது போல நடிப்பது கண்டு வெறுப்புத்தான் மிஞ்சுகிறது.

என்ட மனுசனிடம் ஏன் இவர்கள் எங்களை கண்டு கொள்ளவே மாட்டார்களாம் என்று கேட்க நீர் வந்து கனகாலம் இல்லை அதுதான் மாரி தவளை மாதிரி கத்துகிறீர் தனிய ஒன்றும் செய்ய இயலாது இலட்சகணக்கில. சனம் போனால் ஒன்டிரண்டு நிமிடம் TVஇல் போடுவார்கள். தனி ஒருவர் என்றால், Foot ball match களில் உடுப்பில்லாமல் சிலர் ஓடுவது போல் ஓடினால் உடனே போடுவார்கள் பிறகு அதுக்காக தண்டனையும் கொடுப்பார்கள்.. வசதி எப்படி .. என்று விசர் பகிடி விடுகிறார். வந்து கனகாலம் எல்லோ உப்பு உறைப்பு இல்லாமல் சாப்பிட்டு சூடு சுரணை கெட்டு விட்டது போலும்.

இப்போ இங்கே வருவதும் அவ்வளவு சுலபம் என்று இல்லை ஒரே கெடுபிடி தான். தம்பியை எப்பிடி எடுப்பது என்று நாலு பேரை விசாரிக்க வேண்டும். நாலு பேருடன் பழகினால் தானே ஏதும் விசயம் அறியலாம். எங்களுக்கு அடுத்ததற்கு அடுத்தது தமிழ் சனம், அதுகளோடும் Hi யும், Byeயும் தான். அவையும் அப்பிடித்தான். சில தமிழருக்கு தமிழரைக் கண்டாலே அலேர்ஜி போலும்.

வேறு என்ன கோடை விடுமுறைக்கு நாங்கள் ஒரு இடமும் போகவில்லை. பிள்ளைகள் இருந்து, அதுவும் நல்ல பள்ளிகூடத்தில் படித்தால் கட்டாயம் எங்காவது கூட்டி போக வேண்டும் அல்லாவிடில் பிறகு பள்ளிகூடம் தொடங்க எப்பிடி விடுமுறையை கழித்தீர் என்று எழுதச் சொல்வினமாம். அப்ப ஆ..கூ என்று எழுதுகிறதற்கு ஒன்றும் இல்லாவிட்டால் பிள்ளைக்கு அவமானமாக இருக்குமாம் என்று உன் சிவகுருமாமா உங்கு வர என்று இருந்தவர் இப்ப பிரச்சனை என்று சொல்லிவிட்டு மலேசியா பார்க்க போய் விட்டார்கள். ம்.. உலாத்திரதற்கும் ஒரு காரணம். என்ற மாதிரி எனக்குப் படுகிறது ஆனால் அதுகளுக்கு என்ன மான ஈன பிரச்சனையோ..

தங்களை விட தகுதிக்கு மீறிய பெரிய பெரிய பணக்கார பள்ளிக்கூடத்தில் பிள்ளையை சேர்த்துவிட்டு வேலையால வந்த யூனிபோர்த்தை கழற்றி வைத்துவிட்டு சேட்டையும் டையையும் கட்டிக் கொண்டு பிள்ளையை ஏத்த போவார். யூனிபோத்தோட போனால் பிள்ளைக்கு அவமானமாக இருக்குமாம். ஏதோ பிள்ளைகளுக்கு பெற்றோர் படும் கஷ்டம் விளங்கினால் சரி. இல்லாவிட்டால் வளர்ந்து பெற்றோரையே அவமானமாக நினைக்கத் தொடங்கி விட்டால் பிறகு வளர்த்த கடா மார்பில் பாய்ந்த மாதிரி வந்து விடும். நீ அவர் போன் எடுக்கும் போது மருமகனுடனும் கதைப்பாய் தானே நிலைமையை பார்த்து எசக்கு பிசக்காக இருந்தால் மெதுவாக புத்தி சொல்லி வை.

உன் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்த்து...

*அன்புடன் சுகந்தி*

## மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்

பெண்கள் பக்கத்திற்கு மங்கையர் மலர், மகளிர் பக்கம், Ladies only பெண்கள் பேப்பர், மகளிர் மட்டும் என பெயர் வைக்கலாம் என்று சுதர்சினி நித்தியானந்தனும், 'ஒரு பார்வை' (பெண்கள் மட்டும்) என பெயர் வைக்கலாம் என்று உமா மகாலிங்கமும், Ladies Paper / Ladies Junction என பெயர் வைக்கலாம் என்று நித்தியானந்தனும் கருத்து தந்திருந்தார்கள். உங்கள் கருத்துக்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள். கனடாவில் இருந்து பெண்கள் பக்கத்திற்கு எழுதுவதற்கு பெண் எழுத்தாளர்கள் குறைவாகஉள்ளனர். திறமையும், எழுத்துத் துறையில் ஆர்வமும் உடையோர் நிலைய முகவரிக்கோ, அல்லது இணையத்தள முகவரிக்கோ தொடர்பு கொள்ளலாம். உங்கள் சேவை ஒரு பேப்பருக்கு தேவை. உங்கள் பதிலை எதிர்பார்த்து

- ஒரு பேப்பர் காரிகள்


HERBA NATURELLE
London Norbury இல் மூலிகை மருத்துவர்
அஞ்சலா ஜெகநாதனின் இயற்கை மூலிகை மருத்துவ நிலையம்
❀ தலைமுடி உதிர்வு, ❀ தோல் வியாதிகள்
❀ சொடுகு, ❀ மகப்பேறின்மை ஆண்,
❀ மயிர்ச்சிதைவு எக்ஸிமா, ❀ பெண் உடற்கோளாறுகள்
❀ ஆத்மா,
புதிய அறிமுகம்
சில நோய்களுக்கு வழமையான உணவுகள் காரணமா?
Allergy / Intolerance Test மூலம் ஒவ்வாமை / சகியாமைக்கு காரணமான உணவைக் கண்டறியலாம்.
Tel: +44 (0) 20 8765 9015 Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com
ஆரோக்கிய வாழ்வு
மும்மாதமொரு இதழ்
ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியமான விபரங்களை உள்ளடக்கியது. வாசித்து, அறிந்து பயன் பெறுவீர். www.herbanaturelle.com ல் பெற்றுக் கொள்ளலாம்.

HERBA NATURELLE
Natural Health Centre,
1410,
London Road,
Norbury
SW17 4BZ

# KIDS பேப்பர்

## My holiday in Isle of Wight

The Isle of Wight is an island near England, which is exactly 23 miles in length I spent my holiday there and I had a brilliant time.

To get there, we had to go by car to Portsmouth where we then took the ferry to reach Isle of Wight. We had a beautiful ferry ride. We arrived at the part of Fishbourne in the north of the island and followed the coastal road to Shanklin, which is in the east.

As soon as we arrived at our holiday site, I unpacked my suitcase straight away and was eager to look around the site. we went to the Arcade to play some games and then went to the entertainment area, where the little kids were dancing. It was so cute watching all of them dance in there little outfits and I loved the show.

Sunday, we went to a theme park called Blackgang Chine. This theme park is mostly for little kids, because it has got little rides like the teacup ride, the crooked house, which is definitely crooked!. Thankfully, there was one rollercoaster called Cliff Hanger, which goes over the edge and a water slide which gets you soaked. I had a great time there. In the evening we went to Shanklin beach, which is a sandy beach. I soaked my feet in the sea and made a few sandcastles. In the late afternoon we went swimming.

Monday, we went to a place called Needles, it is called Needles because the rocks in the sea are shaped like Needles. There, we went on a boat ride with other tourists to take a closer look at the needle shaped rocks. This area has rocks in different colours. There are different shapes of containers which you can fill with sand, which was cool. So I made an elephant shaped one and when I showed that to my friends they loved it. There were also sweet manufacturing and glass manufacturing places on the site. We watched the demonstration of making a glass vase, it was amazing. When we got home we were exhausted, but we still went to a different beach, which is nearby in Sandown. It was great, we saw the sun set which was beautiful.

Tuesday, we went to Robin Hill, it was better than Blackgang Chine they had a Toboggan Ride. I was scared, that I would fall off, but it was great.

We went to loads of stuff at Robin Hill such as the Monk's Walk, The Maze, Rabbit Hutch, The Temple Walk, The Pirate Ship and my favourite "The TIME MACHINE."

Wednesday, we went back to Blackgang Chine and we visited all the things we had missed on our first visit. In the afternoon we went swimming, the weather was very hot, it was about 30 centigrade.

Thursday, we went back to Robin hill. This trip was upsetting, because my mum had a fall on the bridge and hurt her shoulder so we went home early, and my dad took mum to the hospital while my brother and I watched a DVD.

Friday, mum was slightly better and she came swimming with us, but she couldn't swim. we were leaving on Saturday, but I wanted to stay longer. We went for a ride to other places, then went back to Sandown beach and played games in the amusement arcade on the pier, till around midnight, after that we went home.

Saturday, the last day of our holiday, we packed our bags and set off to our journey back home. There is a saying in the Isle of Wight. Which i found it abit funny, when my mum told me it. It goes like this:

" Needles you cant thread ! Cows you can't milk it!

Ryde you can't ride it! Fresh water you can't drink !

Seaview you can't see ! Fishbourne you can't fish in it! "

If you want to go to the Isle of Wight don't hesitate to book it, its GREAT!

*- by Yasmin Morris (Age 12 yrs)*

**Dear Kids**

Send us a short essay on any trips or holidays you have you have been to, and we will publish it in *Oru paper.*

*- Kids Team*





## Jokes

Q. How do you catch a squirrel?

*A. Climb a tree and act like a nut!*

Q. What do you do with a blue whale?

*A. Try to cheer him up!*

Q. How do you communicate with a fish?

*A. Drop him a line!*

Q. Where do sheep go to get haircuts?

*A. To the Baa Baa shop!*

Q. What does a shark eat with peanut butter?

*A. Jellyfish!*

Q. Why was the pelican kicked out of the hotel?

*A. Because he had a big bill!*

Q. What do cats eat for breakfast?

*A. Mice Crispies!*

Q. What kind of dog tells time?

*A. A watch dog!*

Q. Why can't a leopard hide?

*A. Because he's always spotted!*

Q. What do you give a dog with a fever?

*A. Mustard, its the best thing for a hot dog!*

Q. What do you get when you cross a cat with a lemon?

*A. A sour puss!*

Q. Why do birds fly south for the winter?

*A. Its easier than walking!*

Q. What kind of key opens a banana?

*A. A monkey!*

Q. How do you know that carrots are good for your eyesight?

*A. Have you ever seen a rabbit wearing glasses?*

Q. Why does a hummingbird hum?

*A. It doesn't know the words!*

*- by Tharshia R (11)*

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Jenani Yogan*** (8 Yrs.) from Harrow

Last week's runners up -

***Tharshana Nanthakumar*** (Age 5) *from Morden*

***Shanushiya Rathakirushna*** *from Mitcham*

***Thuvarajan Rathakirushna*** *from Mitcham*

***Mayuran Gopi*** *from Harrow*

***Geetha Sheelan*** *from Ealing*

***Dillani Jaykumar*** *from Toronto*

### Instrument



The thalam is used by musicians as a timing instrument. The mild clanging sound made by the two circular brass plates held together by a string, is used to maintain timing and rhythm.

Thalam is mainly used in devotional music and in Nadaswaram recitals.

***- Suba Dharsan***

## Riddle

***Hi Kids,***

**The maker doesn't need it, The buyer doesn't use it, The user uses it without knowing.**

**WHAT IS IT?**

**A coffin**

***- Tharshia R***

## Tongue Twister

***Hi Kids,***

**A good cook could cook as much cookies as a good cook who could cook cookies!** (FASTER!!!)

**(Even faster!!!)**

***- Tharshia R***

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | R | D | V | N | F | T | N | G | U |
| F | U | O | N | A | B | R | A | I | N |
| W | S | D | O | D | H | I | Q | Y | Z |
| P | A | U | V | A | S | I | P | U | I |
| A | B | I | E | L | A | T | H | U | L |
| D | M | T | H | U | L | U | A | D | P |
| I | E | O | E | N | I | L | M | A | P |
| P | O | D | E | L | J | E | U | A | R |
| U | S | M | R | D | V | F | T | N | G |
| E | Q | Y | Z | A | I | U | W | S | O |

**Hidden Words:**

**Subject: Verbs**

Padipu, Vasipu, Elathu, Odu, Nada and Thulu

*Submitted by: Tharshia R (11)*

## SPECIAL COMPETITION!!!

Hello! Welcome to Orupaper's Special Competition which will be run by Rishiyan Ravindrakumaran. This competition will have 10 General Knowledge Questions in each paper for the next 10 issues. Over the next 10 issues (100 Questions) the person who answered the most correct answer will win prizes. The Prizes are:

**1st 7" Portable DVD Player**

**2nd 40GB MP3 Player**

**3rd Two PC Webcam** (With microphone)

To participate just e.mail the answer to kids@orupaper.com or send the answers to:

**ORUPAPER (UK)**

45'B' Crusoe Road , Mitcham , CR4 3LJ

**ORUPAPER (CANADA)**

230-55 Nugget Avenue, Scarborough ON, M1S 3L1

**The questions for this issue will be:**

**1) Who discovered photosynthesis ?**

**2) As of December 6, 2000, which was worth more ?**

**3) What was the real name of US Confederate General "Stonewall" Jackson ?**

**4) What commonly eaten vegetable was originally thought to be poisonous ?**

**5) After Mandarin Chinese, what is the most widely spoken first language ?**

**6) Which Shakespeare play is not a tragedy ?**

**7) How big is the world's largest permanent maze, in Honolulu, Hawaii, USA ?**

**8) In what ancient culture was the underworld ruled by a goddess ?**

**9) Which Pokémon monster evolves ?**

**10) The first ceremony of the International Olympic Committee was held in 1894. In what city was it held ?**

GOOD LUCK KIDS!!!!..in answering these ten wacking questions, and send them in by 13/09/06 Wednesday.......

YOU could be the one of the WINNERS, in winning one of our three prices!!!

## How to make Flapjacks

**100g - Margarine**

**25g - Brown sugar**

**2 - tablespoons of syrup**

**1 - tablespoons of ground ginger**

**225g - porridge oats**

**50g - chocolate chips**

**Method:**

1)Pre-heat the oven at 160 degrees, melt the margarine , sugar and syrup over the

heat and stir until the sugar dissolved.

2)Stir in the oats and ground ginger when mixed, transfer the mixture into a tin and

spread evenly.

3)Place the tin into the oven for 30 minutes.

4)Take out after 30 minutes and let it cool on a rack. When cooled cut into equal pieces.

*by Pirahami (12 years)*



*by Meran Annalingam (Year 4)*
*From Colindale Primary School*

# Book Review

## Enduring Love




The story of how an ordinary man can be driven to the brink of murder and madness by the delusions of another. It begins on a windy summer's day in the Chilterns when the calm, organized life of Joe Rose is shattered by a ballooning accident.

" One windy spring day in the chilterns Joe Rose's calm, organized life is shattered by a ballooning accident.

The afternoon, Rose reflects could have ended in more tragedy, but for his brief meeting with Jed Parry. Unknown to Rose, something passes between them - something that gives birth in Parry to an obsession so powerful that it will test to the limits Rose's beloved scientific rationalism, threaten the love of his wife Clarissa and drive him to the brink of murder and madness".

# Film Review

## Pirates of the Caribbean- Dead Man's Chest




Johnny Depp, Orlando Bloom and Keira Knightley reunite in Walt Disney, in association with Jerry Bruckheimer film, Pirates of the Caribbean dead man chest an all new epic tale chronicling the futher misadventures of Captain Jack Sparrow.

Captain Jack Sparrow is caught up in another tangled web of supernatural intrigue. Although the curse of the Black Pearl has been lifted, an even more terrifying threat looms over its captain and scurvy crew: it turns out that Jack owes a blood debt to the legendary Davy Jones, Ruler of the Ocean Depths, who captains the ghostly Flying Dutchman, which no other ship can match in speed and stealth. Unless the ever-crafty Jack figures a cunning way out of this Faustian pact, he will be cursed to an afterlife of eternal servitude and damnation in the service of Jones. This startling development interrupts the wedding plans of Will Turner and Elizabeth Swann, who once again find themselves thrust into Jack's misadventures, leading to escalating confrontations with sea monsters, very unfriendly islanders, flamboyant soothsayer Tia Dalma and even the mysterious appearance of Will's long-lost father, Bootstrap Bill. Meanwhile, ruthless pirate hunter Lord Cutler Beckett of the East India Trading Company sets his sights on retrieving the fabled "Dead Man's Chest."

## Jewellery

As in other parts of India, Tamil Nadu has its own traditional jewellery-especially, the stone-encrusted jewellery, which reached its pinnacle here. The people of this state still have a strong belief in the efficacy of the navaratnas (nine gems), in warding off evil and enhancing the beneficial effects of planets. It is not surprising then , that they find common use in women's jewellery here.

The ornaments, which are most common to this part of South India are the oddiyaanam (gold waist belt), vanki (armlet) and jimiki (eardrop), which are traditionally crafted and finished with great dexterity. The jimiki is a bell-shaped ear jewel set, in coloured stones with pearls hanging at the lower end, and hangs from the lotus shaped kammal of diamonds or rubies worn on the lower lobe of the ear.

*- by Tharshi*


**Fish & Chips Shop for Sale**
Collierswood Tube Station
க்கு அருகாமையில் உள்ள Fish & Chips Shop விற்பனைக்கு உண்டு High Turn over.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்: **07957 100 917**



**"Chef Wanted**
New restaurant opening in Balham requires a head chef with South Indian / Sri Lankan experience.
For an exciting career with a good salary
call ***Bahi*** **0772 054 7714"**



**Room தேவை**
Tootingஇற்கும் Modernஇற்கும் இடைப்பட்ட பகுதியில் இளைஞன ஒருவருக்கு (Student) தனியான அல்லது பகிர்ந்து கொள்ளக் கூடிய Room தேவை.
தொடர்புகளுக்கு **07727236901**

**Private Tuition**
For 11+:- Maths & Science,
For Year 7 to GCSE:- Maths
For A/Level:-Maths/Physics /Mechanics/Statistics
தொடர்புகளுக்கு
By Ranjan BSc(Eng), MSc(Eng)
07906783825
0208 204 6449

**Revision Classes (துரித மீட்டல் வகுப்புகள்)**
***A/L Maths/Biology***
*Revision Classes*
*In Croydon*
*By experienced Teachers Starting 9th Sep 2006.*



**TECA/STS**
Selhurst Boys School
Croydon CR0 2HN



Contact ***Vilvaraj***
**07958 408 280**
email:info@tamiled.co.uk

**CHILD MINDER WANTED**
To look after an 14 month child.
Full-time 36 hours a week
சமையல் வேலையும், வீடு துப்புரவாக்குதல் போன்ற வேலைகளும் செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
Harrow Area:
Please Call: **Thaya**
**07956 436 262 / 07765 462 216**
Preference:
Asian Babysitter

**ஒரு பேப்பர்** ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £22 மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

Email: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், **£22** க்கு **"Jasmine Studio Ltd.""** ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதிக் கிழிப்பவர்: வித்தகன்

# எங்கடை தலையிலை நாங்களே....!

14/08/2006 உலகத் தமிழருக்கெல்லாம் ஒரு கரிநாள். தட்டிக் கேட்க ஆளில்லை எண்ட தைரியத்திலை சிங்களப் பயங்கரவாதம் கொடுமையின்ரை உச்சத்தைத் தொட்ட நாள்.

பள்ளிக்கூடங்களிலை படிக்கிற பிள்ளைகளிலை கெட்டிக் காரராப் பாத்துப் பொறுக்கி எடுத்த எங்கடை குழந்தை கள் தலைமத்துவப் பயிற்சியை எடுத்துக் கொண்டிருக் கேக்குள்ளை 'படுபாவிகள் குண்டுகளைக் கொட்டிக் கொண்டழிச்சதைக் கேட்டுத் தமிழரெல்லாம் கொந்தளிச்சுப் போயிருக்கிறம்.

காணுற, கதைக்கிற ஒருத்தரின்ரை முகத்திலையும் சந்தோசமில்லை. இந்தப்பயங்கரத்தை ஒவ்வொருத்தரும் எங்கடை எங்கடை வீடுகளிலை நடந்த கொடுமையாத் தான் நினைச்சுக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறம்.

இந்த அநியாயங்களையெல்லாம் செஞ்சு கொண்டிருக்கிற சிங்கள அரசாங்கத்துக்கு அறிஞ்சோ அறியாமலோ நாங்களே துணைபோய்க் கொண்டிருக்கிறம் எண்டது தான் ஆகப் பெரிய கொடுமை.

ஒரு விசயம் நடந்ததும் உணர்ச்சி வசப்படுறதும் காலம் போகப் போக மறந்து போறதும் எங்கடை சாபக்கோடோ அல்லது பலவீனமோ தெரியேல்லை.

ரெண்டு வருசத்துக்கு முந்தி சுனாமி அடிச்சதும் நாங்கள் துடிச்சுப் போய் உடுப்புகள், மருந்துகள் எண்டு சேத்து அந்தச் சனத்துக்கு அனுப்ப வெளிக்கிட்டம்.

அப்ப Srilankan Airlinesகாரங்கள் அந்தச் சாமான்களைக் கொண்டுபோக மாட்டம் எண்டு சொல்லித் தங்கடை இனவாத முகத்தை வெளிப்படையாவே காட்டினவங்கள். உடனை எங்களுக்கெல்லாம் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. Srilankan Airlinesஐ தமிழர் எல்லாரும் புறக்கணிக்க வேணும் எண்டு கதைச்சனாங்கள். தமிழ னுக்கு உதவி போகக்கூடாது எண்டு நினைக்கிற நாசமறுப் பாங்களின்ரை பிளேனிலை என்ரை பிணங் கூடப் போகக் கூடாது எண்டு சபதம் போட்ட ஆக்களும் இருக்கினம். கோயில்கள், தமிழ்க் கடைகள் எல்லாத்திலையும் இதைப் பற்றி நோட்டீஸ் அடிச்சு ஒட்டிக் கிடந்தது.

ஆனா இந்த ரெண்டு வருசத்துக்குள்ளை எல்லாம் மறந்து போச்சுது. இண்டைக்கு எங்கடை ஆக்கள் எல்லாம் அவங்களின்ரை பிளேனுகளிலைதான் போய் வருகினம். இதைப்பற்றிக் கேட்டா மற்றப் பிளேனுகளிலை ஏறினா 2 மணித்தியாலம் இடையிலை காத்து நிக்க வேணுமெண்டு மூக்காலை அழுகினம். ஊரிலை எங்கடை பிள்ளைகள் வருசக்கணக்கா பங்கருக்கை நிண்டு எல்லைகளைக் காத்துக் கொண்டிருக்குதுகள். உவையளுக்கு ஒரு ரெண்டு மணித்தியாலம் காத்திருக்க ஏலாமல் கிடக்குது. Air Lines காறரும் ஒண்டுக்கு ரெண்டு பிளேனை விட்டு கோடி கோடியாச் சம்பாதிக்கிறான்.

சண்டை பிடிக்கிறதுக்கும் ஆயதங்களை வாங்கிறதுக்கும் சிங்களவனுக்குப் பொருளாதாரம் நல்ல பெலமா இருக்க வேணும். அவங்கடை பொருளாதாரத்துக்கு முண்டு குடுக்கிறதுக்குத்தான் எங்கடை 'தன்மானத் தமிழன்' இருக்கிறானே.

உலகத்திலை எல்லா இடத்திலையும் வங்கிகள் இருக்குது. ஏன் தமிழீழத்திலை எங்கடை வங்கிகளே அந்த மாதிரி இயங்குது. ஆனால் நாங்கள் எங்கடை காசுகளை யெல்லாம் கொழும்பிலை இருக்கிற சிங்களவன்ரை வங்கிகளிலை தான் போடுவம் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறம். பிறகு அந்தக் காசிலை வாங்கின பிளேனு களிலை கொண்டு போய்க் குண்டுகளைக் கொட்டினாக் குளறுறம்.

அதுமட்டுமே தமிழற்றை காசை முழுசாச் சுறுட்டுற துக்குச் சிங்களவன் திட்டம் போடுறான். வெளிநாட்டிலை இருந்து கொண்டு காசைக் கொழும்பிலை போட்டிட்டு வட்டி பெருகும் எண்டு நாங்கள் ஆவெண்டு பாத்துக் கொண்டிருக்க அவங்கள் முதலையே விழுங்கிறதுக்குச் சட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான்கள்.

இதைப் பற்றி அங்கை காசைப் போட்டு வைச்சிருக்கிற ஒருத்தரோடை கதைக்க அவர் நக்கல் சிரிப்பொண்டு சிரிச்சுப் போட்டுச் சொன்னார்

'அது தம்பி இயங்காமைக் கிடக்கிற எக்கவுண்டுகளைத் தான் அவங்கள் treasuryக்கு எடுக்கப் போறாங்களா மெண்டு சொல்லுகினம். பின்னை நான் என்ன செய்தன் எண்டா போனகிழமை இன்னுமொரு 5000 பவுணை என்ரை எக்கவுண்டிலை போட்டு விட்டனான். இப்ப பிரச்சினை இல்லைத் தானே.

அவற்றை 'கெட்டித்தனக்' கதையைக் கேக்க எனக்குப் பத்திக் கொண்டு வந்தது.

'அண்ணை வாழ வேண்டிய வயசிலை எத்தினையோ கனவுகளோடை எதிர்பார்ப்புகளோடை இருந்த எங்கடை குருத்துகளின்ரை தலையிலை கொட்டின குண்டுகள் உங்கடை காசிலை வாங்கினதாக் கூட இருக்கலாம். இதுக்கும் சேத்து நீங்கள் பெருமைப்படலாம் எண்டு மூளையைப் பாவிச்சுக் கதைக்காமை இதயத்தாலை கதைச்சுப் போட்டன்.

இப்ப என்ன, என்ரை சினேகிதர்களின்ரை பட்டியலிலை ஒராள் குறைவு. அவ்வளவு தான்.

'குட்டக் குட்டக் குனியிறவனும் மடையன். குட்டிறவனும் மடையன்' எண்டு சொல்லிறவையள். அதின்ரை பொருள் எனக்கு கனநாளா விளங்காமல் கிடந்தது. அவரோடை கதைச்ச பிறகு இப்ப நல்லா விளங்குது.

இன்னொரு விசயத்தைப் பற்றியும் உங்களோடை கதைக்க வேணும்.

இந்த நாடுகளிலை எங்களுக்கெதிரானா பிரச்சாரத்தை அவங்கள் செய்யிறதுக்கும் நாங்களே இடம் ஒதுக்கிக் குடுத்துக் கொண்டிருக்கிறம் எண்டதை நம்பிறது கொஞ்சம் கஸ்டமாத் தான் இருக்கும். ஆனா உண்மை அதுதான்.

முல்லைத்தீவிலை அந்தப் பயங்கரம் நடந்த அடுத்தடுத்த நாள் நான் கடையொண்டுக்குப் போயிருந்தன். முதலாளி எங்கடை ஆள்தான். அவற்றை முகமும் சோர்ந்து போய்க் கிடந்தது. என்னைக் கண்டதும்...

'என்ன தம்பி இப்பிடிச் செய்து போட்டாங்கள்'

எண்டு யாவாரத்தையும் விட்டுப் போட்டுக் கவலைப் பட்டார். நானும் கொஞ்ச நேரம் அவரோடை சேந்து கதைச்சுப் போட்டு சாமான்களை எடுப்பம் எண்டு கடைக்குள்ளை போனா...

'பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம் மீது விமானப் படையினர் குண்டு வீச்சு' எண்ணுற செய்தியோடை இங்கிலீஸ் பேப்பர் கட்டொண்டு கடைக்குள்ளை அடுக்கி வைச்சுக் கிடக்குது. முதலாளிக்குத் தெரியாமல் ஏதாவது குளறுபடி நடக்குதோ எண்ட சநதேகத்தோடை மெல்லமாக் கதையை எடுத்தன்.

'என்னண்ணை, கடைக்குள்ளை உந்தப் பேப்பரெல்லாம் கிடக்குது'

அதுக்கு அலட்டிக் கொள்ளாமல் ரகசியமாச் சொன்னார்

'ஓ அதோ தம்பி, நாலைஞ்சு சிங்களவங்கள் கடைக்குச் சாமான் வாங்க வாறவங்கள். அவங்களுக்காண்டி விட்டுக் கிடக்குது. யாவாரம் நடக்கத் தானே வேணும்'

தன்ரை வியாபார சாணக்கியத்தைப் பற்றிப் பெருமைப் படுற அவரை அப்பாவி கணக்கிலை சேக்கிறதா, சந்தர்ப்ப வாதி கணக்கிலை சேக்கிறதா, பச்சோந்தி கணக்கிலை சேக்கிறதா எண்டு எனக்குத் தெரியெல்லை.

இப்படி நாங்கள் ஏமாளியா, காரியகாறரா, வாய்ச்சவடால் விடுற ஆக்களா இருக்கிற மட்டும் சிங்களவன் தான் நினைச்சதைச் செய்ய இந்த உலகமும் ஆமாம் போட்டுக் கொண்டுதான் இருக்கப் போகுது.

ம்ம்ம்.... என்ன செய்யிறது?

## காதலி வேண்டாம் காதலி

இளைஞர்கள் காதலி இல்லை என்று ஏங்கும் வேளையில் காதலி இல்லாவிட்டால் என்ன என்ன நன்மைகள் கிடைக்கும் என்று விளக்குகின்றேன் பாருங்கள்.

நேரம் மீதமாகும்
நன்றாக நித்திரை கொள்ளலாம்
மிஸ் கால் வந்தால் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை
எந்த உணவு விடுதியிலும் சாப்பிடலாம்
நடுராத்திரியில் அலுப்படிக்கும் எஸ்.எம்.எஸ் வராது
எல்லா பொண்ணுங்களோடையும் கதைக்கலாம்
அட்வைஸ் பண்ணி அறுக்க யாரும் இருக்கமாட்டாங்க
எங்கேயும் யாரோடையும் போகலாம்
எப்படி அழகாக உடை உடுத்துகின்றேனா எனக் கவலைப்படத் தேவையில்லை
பழைய புளித்துப் போன பகிடிகளைக் கேட்கத் தேவையில்லை

இப்ப சொல்லுங்கள் இப்பவும் உங்களுக்கு கேள் ஃபிரண்ட் தேவையா???

'எனக்கொரு கேள் பிரண்ட் தேவையில்லையாடா' இப்பவே பாடத் தொடங்குங்கள்!!!!

- மயூரேசன்

TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S & A/2 Students
All examination boards covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams
For further details call
Kamalanathan BSc (Hons)
Tel: 020 8442 2393
Mobile: 07970 839 507
North, North-East & North-West London areas

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

NAG & CO
Solicitors
With best Compliments from...
Tel: 020 7737 1211
Fax: 020 7737 0809
Unit 3, Holles House, Overton Road
Myattsfield Road South, London Sw9 7JN
(Nearest underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line)

MORTGAGE PLUS London Ltd
Mortagages Tailormade for you
Specalist in CCJ Default Cases
S.Kaul
Tel: 020 8571 2570
07710 150 713
81 South Road, Southall, Middx UB1 1SQ



**IOM • OIM**

IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001    Fax: 020 7233 3001
www.iomlondon.org

இவ் இலங்கையர் எங்களுக்கு தனது கதையைச் சொன்னார். தானாக விரும்பி தாய்நாடு சென்று மீன்பிடி தொழில் செய்வதற்கு எங்கள் உதவியைப் பெற்றிருந்தார். ஆனால் ஆழிப்பேரலை (Tsunami) காரணமாக அவர் தொழில் அழிக்கப்பட்டது. எங்கள் (IOM) பண உதவியுடன் திரும்பவும் தன் தொழிலை ஆரம்பித்து தற்போது நல்ல நிலையில் உள்ளார்.

**தாய்நாடு திரும்பும் யோசனை உண்டோ?**

**உடன் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்!**
நீங்கள் நன்மை பெறும் வழியில் அனைத்து உதவிகளும் செய்து தர ஆயத்தமாய் உள்ளோம்.

**'கை கொடுக்க காத்திருக்கின்றோம்' நாங்கள், IOM**
ஏற்கனவே நீங்கள் அகதி அந்தஸ்தை கோரி
நிராகரிக்கப்பட்டவராக இருந்தால், நீங்கள் விரும்பினால்
உங்களுக்கு தாய்நாட்டு பயண ஒழுங்குகளை மேற்கொள்வோம்.

உங்கள் விமானச்சீட்டிற்கான செலவுகள், இந்நாட்டு விமான நிலையத்திலிருந்து உங்கள் நாடு வீடு வரை உள்ள செலவுகள் போன்றவற்றைப் பொறுப்பேற்கிறோம்.

உங்கள் பயணத்திற்குத் தேவையான அனுமதிச் சீட்டை பெறுவதற்கு வேண்டிய வழிமுறைகள், பயணத்தின் போது இந்நாட்டிலும் உங்கள் நாட்டிலும் தேவைப்படும் உதவிகள், பயணத்தின் போது மருத்துவ உதவிகள் போன்றவற்றிற்கான ஒழுங்கு முறைகளை மேற்கொள்வோம்.

2006 செப்ரம்பர் 31ஆம் திகதிக்கு முன் நீங்களாகவே வீடு திரும்ப விரும்பினால் உங்களுக்கும், உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும்

**£3000** வீதம் கிடைக்க தகுதியுடையவர்களாவீர்கள். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்! இலவச தொலைபேசி

**0800 783 2332**

***குறிப்பு: இச்சலுகை 2006க்கு முதல் அகதி விண்ணப்பம் செய்தவர்களுக்கு மட்டுமே***

Now more right choices than ever before from

# SURYAA




# BUY 2 GET 1 FREE

Try the all-new Suryaa ready-to-cook range of String Hopper, Puttu and Wheat Flour. With our "Buy 2 Get 1 FREE" offer you and your family could end up with more than just a tasty bargain.

Niru Europe Limited, Unit 11, Mitcham Industrial Estate, 85 Streatham Road, Mitcham, Surrey CR4 2AP
Tel. 0208 640 8228 Fax. 0208 640 8423 Email. sales@niru.co.uk

Another quality product from Niru

catamaran communications . 0207 58 00 885

# LION

## THE BIG HUNT

## Drink & Win!




Try Again

### How to win the grand prize

மெற்றோ என்பது பாரிஸின் மக்களின் வாழ்க்கையை இலகு படுத்தும் நிலக்கீழ் இரயில் சேவை. ஒரு சில இடங்களில் நிலத்தின் மேலாலும் தலை காட்டுவது உண்டு. இரண்டு வழிப்பாதைகள் முழுக்க நிலத்தின் கீழாகவே செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டிருந்தது. அப்போதெல்லாம் மொத்தம் 13 வழிப்பாதைகளில் இந்த மெற்றோக்கள் பயணிகளை ஏத்தி இறக்கும். அதன் கீழாலும் ஓடும் அறுபதடி ஆழத்தில் என்று ஒரு பேச்சு எங்கள் புத்திசாலிகளால் அடிக்கடி அறிவுறுத்தப்படும் ஆர் ஈ ஆர் என்னும் மூன்று வழிப்பாதைகளில் ஓடும் இரயில்களும் இருந்தது. மாதாந்த பாஸான கார்த்து ஒறேஞ் என்பது அழகுத் தமிழில் காத்தொரேஞ் என்று வழங்கிருந்தது.

பாரீஸுடன் புறப் பகுதிகளை இணைக்கும் இரயில் நிலையங்களாக கார் நோர்ட், கார்டு லீஸ்ட். செல்லஸார், மொன்பர்நாஸ் என்று பெரும் இரயில் நிலையங்கள் பிரான்ஸின் அனைத்துப் பகுதிகளையும் இணைத்து நிற்கும் உயிர் நாடிகளாக விளங்கின. எங்கள் தமிழ் மக்களும் பின் நாட்களில் போன்லியு என்று அழைக்கப்படும் பாரிஸை அண்டிய பிரதேசங்களில் கால் வைக்கத் தொடங்கியிருந்தனர். பொந்துவாஸ் போயர் மற்றும் கார்து நோர்ட்டிலிருந்து போய் வரக் கூடிய கார்து கோனேஸ் போன்ற இடங்களுக்கும் மெள்ள மெள்ளச் சிறகடித்துப் பறக்கத் தொடங்கினர்.

**அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப் பட்டவர்கள் மிகக் குறைவு. அப்படி அந்தஸ்து பெற்றவர்களின் மவுஸோ தனி மவுசு. கொம்பு முளைக்காத ஒரு பெருமையுடன் தலையை நிமிர்த்திய படியே அவர்கள் நடக்கும் நடப்பைப் பார்க்கக் கண் ஒரு கோடி வேண்டும்.**

இதே வேளையில் கலை இலக்கிய ஈடுபாடு அரசியல் கலந்தும் கலக்காதும் தனித் தனிப் பாதைகளில் நடைபோடத் தொடங்கியிருந்தது. அரசியலை ஒரு பக்கத்தில் விட்டு விட்டு கலை இலக்கிய முயற்சிகளையும் எனது நினைவில் இருந்த வரையில் அசை மீட்டுப் பார்க்கின்றேன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இருந்த எஸ். அகஸ்தியர் அப்போது பாரீஸில் தான் வாழ்ந்து கொண்டிருந்தார். ஐரோப்பா முழுவதும் மாத சஞ்சிகைகள் முழு வீரியத்துடன் வெளிவந்து கொண்டிருந்த காலம் அது. இலக்கியச் சந்திப்புகள் என்று சந்திக்கு வந்த சங்கதிகளும் சந்திக்கு வராமலே உள்ளூர் கோயில் திருவிழா போல குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே முழக்கமிட்ட சங்கதிகளும் நடந்து கொண்டேயிருந்தன. பெண்ணிய வாதம் என்றும் சிந்தனை என்றும் சீறிப் பாயும் சினத்துடன் பெண்கள் உலா வந்து கொண்டிருந்தனர். கண் என்று ஒரு பக்கப் பார்வையுடன் ஒரு மாத இதழையும் அவர்கள் பாரீஸில் நடாத்தி வந்தார்கள். அவர்கள் எவ்வளவு தூரம் பார்வைக்குறையுடன் இருந்தார்கள் என்றால் சம காலத்தில் வெளி வந்த சில மாத சஞ்சிகைகளையும் அதன் வெளியீட்டாளர்களையும் மட்டம் தட்ட வேண்டுமென்ற முனைப்புடனும் சவால் விடும் அளவில் அவர்கள் நடவடிக்கைகள் இருந்தன அந்தக் காலத்தில். இவர்களைக் கொம்பு சீவி விடவென்றே சில இலங்கைக் கற்ற சமவுடமை வாதிகளும் இருப்பியல் பற்றி கேள்வி கேட்டு தங்கள் இருப்பிற்கே அர்த்தம் தெரியாத சில குழப்பவாதிகளும் இருந்தார்கள். இன்றும் கள்ளடிப்பது இருப்பியலை அர்த்தப்படுத்தும் என்று தமிழ் நாட்டு தலித் எழுத்தாளர்களுடன் சேர்ந்து தண்ணியடித்துக் கொண்டு திரியும் இவர்களே கொம்பு சீவும் குணமுடன் இருந்தார்கள்

பிற்காலத்தில் மறைந்த கலைச் செல்வன் அப்பால் தமிழில் எழுதியதைப் போல குமுறல், தேடல், ஆதங்கம், பள்ளம், சிந்து, ஓசை என்று பல சஞ்சிகைகள் வெளி வந்து தமிழர் தம் ஆதங்கங்களை வெளிப்படுத்தின. அதே நேரம் எஸ். சந்திரனின் முயற்சியுடன் எஸ். குகநாதனின் உதவியுடன் ஈழ நாடு வீட்டிலேயே அச்சாகி சிறு பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியிருந்தது. சிகரம் என்றும் ஒரு பத்திரிகை வெளிவரும் முயற்சி பற்றியும் பேச்சு அடிபட்டுக் கொண்டே இருந்தது.

- தொடர்ச்சி 38ம் பக்கம்

**PERSONAL ACCOUNTANCY CLASSES**

Personal Accountancy classes are conducted by a qualified Chartered Accountant (conducted classes in Colombo previously – IAS and presently working for one of the big four audit practice) for the following:

- Advanced Level
- AAT
- CIMA
- ACCA
- University studies
- Any other professional studies



Classes conducted by:
S. Suthaharan
ACA, ASCMA, ACMA, BBA
077 687 10 828 / 0208 839 8488

*Classes are conducted during evening and weekends. Only limited classes are available. Rates are negotiable and may vary depending on circumstances and subjects.*

சி. புஸ்பராசாவின்

# ஈழப் போராட்டத்தில் எனது (பொய்) சாட்சியம்

## அவரது புத்தகம் மற்றும் அவரைப் பற்றிய ஒரு பார்வை - பாகம் ஐந்து

**சாத்திரி**
*( ஒரு பேப்பருக்காக )*

புலோலி வங்கி கொள்ளை 1976ம் ஆண்டு வைகாசி மாதம் நிகழ்த்தபட்டது இந்த வங்கி இலங்கை மக்கள் வங்கியின் ஒரு கிராமிய கிளையாகும். இது தமிழ் இளைஞர் பேரவை செயலிழந்த பின்னர் தமிழீழ விடுதலை இயக்கம் என்று தொடங்கியவர்களாலேயே நிகழ்த்தப்பட்டதாகும். இந்த கொள்ளையை நடத்தியவர்களின் நோக்கம் அந்த கால கட்டத்தில் சிறீ லங்கா காவல் துறை மற்றும் புலனாய்வுத்துறையினரால் தேடப்பட்டும் மற்றும் சந்தேக வளையத்தில் இருந்த இளைஞர்கள் தங்கள் வீடுகளில் இருந்து இடம் மாறியும் தலை மறைவு வாழ்க்கையும் மேற்கொண்டிருந்த படியால் அவர்களது அன்றாட செலவுகளையும் மற்றும் ஆயுத போராட்டம் நடத்த ஆயுதங்கள் வெடி மருந்துகள் வாங்கவும் இந்த கொள்ளையை திட்டமிட்டனர் ஆனால் கொள்ளை நடந்ததின் பின்னர் நடந்த சம்பவங்களோ வேறானவை.

இந்த கொள்ளை சம்பவம் நடந்த நேரம் துரையப்பா கொலை வழக்கில் சந்தேகத்தின் பெயரில் புஸ்பராசா வெலிக்கடை சிறையில் இருந்தார். ஆனால் இந்தக் கொள்ளை கென்ஸ் மோகன் சந்திரமோகன் தங்க மகேந்திரன் கோவை நந்தன் போன்றவர்களால் நிகழ்த்தப்பட்டது. இந்த கொள்ளைக்கான திட்டத்தை தீட்டி அதை பொறுப்பெடுத்து நிறைவேற்றியவர்களிலுள் முக்கியமானவர்கள் தங்க மகேந்திரனும் சந்திர மோகனுமே. இதில் தங்க மகேந்திரன் திருகோணமலையை சேர்ந்தவர் இவர் யாழ்ப்பாணத்திலேயே தனது நண்பர்கள் வீடுகளில் அந்த நேரம் வசித்து வந்தார் இந்த கொள்ளை சம்பவத்தை திட்டமிட்ட காலங்களில் புஸ்பராசா குடும்பத்தினருடன் நல்ல உறவை கொண்டிருந்த காரணத்தால் அவர் புஸ்பராசா வீட்டிலேயே அந்த காலகட்டங்களில் வசித்தார்.

இவர்கள் திட்டமிட்டபடி கொள்ளை சம்பவம் மிகவும் கன கச்சிதமாக நிறைவேற்றப்பட்டது. வங்கியிலிருந்து சுமார் ஆறுலட்சம் பெறுமதியான நகைகளும் இரண்டு இலட்சம் பெறுமதியான பணமும் கொள்ளையிடபட்டதாக செய்திகள் வெளிவந்தன. அதேநேரம் அந்த வங்கியின் முகாமையாளராக பாலகுமார் அவர்களே இருந்தார். (ஈரோஸ் இயக்கத்தின் மாணவர் அமைப்பிற்கு பின்னாளில் பொறுப்பாயிருந்தவர் இப்பொழுது புலிகள் அமைப்புடன் இணைந்து செயல்படுகிறார்) இந்த கொள்ளையில் பால குமாரிற்கும் தொடர்புகள் இருப்பதாக சந்தேகத்தின் பெயரில் கைதாகி பின்னர் விடுதலையானார். 76ம் ஆண்டு எட்டு இலட்சம் என்பது மிக பெரிய தொகையாகும்.

ஆனால் அந்த கொள்ளையை திட்டமிட்டு கச்சிதமாக செய்து முடித்தவர்களிற்கு கொள்ளையிட்ட பணம் நகைகளை எங்கே கொண்டு போய் பாதுகாப்பாய் பதுக்குவது அந்த பெருந்தொகையான நகைகளை எப்படி விற்று பணமாக மாற்றுவது அதற்கடுத்த படியாக என்ன செய்வது என்கிற திட்டம் எதுவும் இருக்கவில்லை. அதே நேரம் கொள்ளை நடந்து முடிந்ததும் எப்படியும் காவல் துறையும் புலனாய்வு பிரிவினரும் ஏற்கனவே சந்தேக வளையத்தில் இருக்கும் இளைஞர்களை வளைத்து பிடிப்பார்கள் என்கிற காரணத்தால் எல்லோரும் தங்கள் தற்போதைய செலவிற்கு மட்டும் கொஞ்சம் பணத்தை எடுத்து கொண்டு மிகுதி பணம் நகைகளை எங்காவது சில காலம் மறைத்து வைத்து விட்டு சிறிது காலம் தலைமறைவாய் இருந்து விட்டு கொஞ்சம் காவல் துறையின் கெடுபிடி குறைந்ததும் அடுத்ததை யோசிக்கலாம் என்று நினைத்து தங்க மகேந்திரனின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு தனித்தனியாக பிரிந்து சென்று விட தங்க மகேந்திரனும் தனக்கு நம்பிக்கையான புஸ்பராசா வீட்டில் அந்த பணம் நகைகளை கொண்டு மறைத்து விட்டு அவரும் தலைமறைவாகி விட்டார்.

மறுநாள் இலங்கையின் எல்லா பத்திரிகைகளிலும் பரபரப்பு செய்தியாக வங்கி கொள்ளை செய்திதான் முதல் இடத்தில் இடம்பிடித்தது. வழைமை போல காவல்துறையும் புலனாய்வு துறையும் தங்கள் நடவடிக்கைகளை முடுக்கி விட்டனர். அந்த காலகட்டத்தில்புலனாய்வு பிரிவிலும் காவல் தறையிலும் தமிழர்கள் அதிகமாக இருந்த கால கட்டம். எனவே இந்த வங்கி கொள்ளையை பிடிப்பதற்கான அதிகாரியாய் இன்ஸ்பெக்ரர் பத்மநாதன் தலைமையில் ஒரு குழு அமைக்கபட்டு யாழில் பிரபலமான நகைக்கடைகள் மற்றும் அடைவுகடைகள் என்பனவற்றில் யாராவது நகைகள் விற்கிறார்களா? என்று கண்காணித்தும் சந்தேகத்தின் பெயரில் பலர்கைது செய்து விசாரிக்கபட்டுக் கொண்டும் இருந்தனர். ஆனால் அவர்களிற்கு சரியான ஆதாரம் எதவும் கிடைக்கவில்லை.

ஆனாலும் அவர்களது சந்தேகமும் விசாரணைகளும் அன்றை காலகட்டத்தில் அரசிற்கு எதிராய் இருந்த இளைஞர்கள் மீதே இருந்தாலும் பாலகுமாரிடமும் காவல் துறையின் தீவிர விசாரணைகள் தடந்ததாலும். தங்கள் மீது காவல் துறையின் சந்தேகம் விழுந்து விட்டதை உணர்ந்த தங்க மகேந்திரன் தாங்கள் எந்த நேரமும் கைது செய்யபடாலாம் என்று நினைத்ததால் புஸ்பராசா வீட்டிலிருந்த நகைகளை பாதுகாப்பாக வேறிடம் மாற்ற திட்டம் தீட்டினார் ஆனால் அந்த கொள்ளையை நடத்தியவர்களிற்கு அந்த நேரம் இந்தியாவுடனான தொடர்புகள் ஏதும் இருக்காத காரணத்தால் அவர்களிற்கு இந்தியாவிற்கு தப்பி செல்லும் யோசனை தோன்றவில்லை எனவே மற்றைய மாவட்டங்களில் அவ்வளவு நகைகளை கொண்டு சென்று விற்க முடியாது பிடிபட்டு விடுவார்கள்.எனவே கொழும்பில் அவர்களிற்கு உறவினர்கள் நண்பர்கள் இருந்ததால் கொழும்பிற்கு கொண்டு போவது என்று முடிவு செய்யபட்டு புஸ்பராசாவின் சகோதரி புஸ்பராணி மூலமாக மூன்று நான்கு தடவைகளாக சூட்கேசுகளில் துணிகளில் மறைத்து கொழும்பிற்கு இரயில் மூலம் நகைகள் கொண்டு செல்லபட்டது.

அங்கு முன்னர் தமிழ் மாணவர் பேரவையிலும் பின்னர் இளைஞர் பேரவையிலும் இருந்த தவராசாவின் (இவர்தான் இன்று ஈ.பி.டி.பி.அமைப்பின் முக்கிய உறுப்பினர் தவராசா) உதவியுடன் களவு பொருளை பொலிஸ்காரன்வீட்டிலேயேஒளித்துவைத்தால் காவல்துறைக்கு சந்தேகம் வராது என்ற சித்தாந்தத்தின் அடிப்டையில் மருதானையில் இருந்த தவராசாவின் காவல் துறையில் இருந்த ஒரு உறவினர் வீட்டில் நகைகள் பதுக்கபட்டன. ஆனால்வேகமாய்புலனாய்வில் இருந்த பத்மநாதன் குழுவினரோ ஒரளவு கொள்ளையரை நெருங்கிவிட்டிருந்தனர். அவர்கள் பரந்தன் இரசாயன தெரழிற்சாலையில் பொறியியலாளராய் இருந்த தவராசாவின் மூத்த சகோதரன் தங்கராசாவை கைது செய்து விசாரணைக்காய்கொண்டுசென்றதும் அடுத்த தாய் தானும் எந்த நேரமும் கைது செய்யப் படலாம் என்று பதறிப்போன தவராசா காவல் துறையிடம் ஓடோடி சென்று தனக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை தனக்கு நகைகள் இருக்கிற இடம் தெரியும் காட்டித்தரலாம் ஆனால் அதற்கு மாற்றீடாக சகோதரனை விடுதலை செய்வதோடு தன்னையும் கைது செய்ய வேண்டாம் எனக்கேட்டு கொண்டு நகைகள் இருந்த இடத்தையும் யாரால் எப்படி எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்றும் விலாவாரியாக சொல்லி காட்டிகொடுத்து விட்டார்.

நாகரீகமாக சொல்வதானால் அரசுதரப்பு சாட்சியாக மாறிவிட்டார்.

- தொடர்ச்சி 38ம் பக்கம்


Kerala Ayurvedic Health Clinic

Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

Call 020 8902 1104 or 020 8902 1707



உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



Massage therapies by experienced and highly skilled therapists
Treatment is designed around your individual health needs
Only natural herbal medicines are used
No side effects at all
Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholestrol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditions

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female Therapists available
We can also speak in Hindi
Tamil & Malayalam




Open 7 Days a Week

1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex, UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadily Line www.kahc.co.uk

# அகதிகளுக்குப் பாதுகாப்பு ஓடை

மறவன்புலவு க. சச்சிதானந்தன்
*( தினமணியில்)*

'பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாக ஈழத் தமிழ் அகதிகளின் சோக வரலாறு தொடர்கிறது. மன்னாரிலிருந்து புறப்பட்ட படகைக் கடுங்காற்று கவிழ்க்க, ஐந்து அகதிகள் கடலுள் கரைந்தனர் என்ற செய்தி வந்த ஒரு வாரத்தின் பின்னர், பயணிகளற்ற மன்னாரப் படகு ஒன்று பாம்பனில் கரை சேர்ந்ததாகச் செய்தியும் வந்து, கொதி ஈயத்தைக் காதில் பாய்ச்சியது.

பஞ்சம், பட்டினியிலிருந்து விடுபடப் பொருளாதார அகதிகளாக எல்லை தாண்டி அசாம், திரிபுரா, மராட்டியம், தில்லி போன்ற இடங்களுக்குக் குடிபெயரும் வங்காள தேசத்தவரின் நோக்கமும் எண்ணிக்கை அளவும் கொண்டவர்களல்ல ஈழத் தமிழகதிகள்.

ஈழத்தில், தத்தம் ஊர்களில் இனிமேல் உயிருடன் வாழ முடியாது எனக் கருதி, இடம்பெயர்கின்றவர்களின் எண்ணிக்கையில் மிக மிகச் சிறுபான்மையினரே தமிழகத்தை நாடுகின்றனர். அவர்களுள் பலர், அன்றாடம் காய்ச்சிகள், வறுமைக் கோட்டின் கீழுள்ளோர்.

ஈழத்தின் மேற்குக் கரையோரத் தீவான மன்னாருக்கும் தமிழகத்தின் கிழக்குக் கரையோரத் தீவான பாம்பனுக்கும் 31 கி.மீ. தூரக் கடலே இடைவெளி. இந்தக் கடலில் 20 கி.மீ. இலங்கைக் கடல் எல்லைக்குள்? 11 கி.மீ. இந்தியக் கடல் எல்லைக்குள்.

மன்னார்த் தீவு முழுக்க முழுக்க இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பகுதி. அங்கே பேசாலை என்ற மீனவர் குடியிருப்பு. அங்குள்ள மீனவருக்கு மன்னார் - பாம்பன் கடலின் ஒவ்வோர் அங்குலமும் மனப்பாடமாகத் தெரியும். நகரும் மணல் மேடுகளான சேதுத் திடல்களின் காலவோட்ட நகர்வுகளும் தெரியும்.

## இலங்கைத் தீவோ கொதிக்கும் கொப்பறை. சேதுக் கடலும் தமிழகக் கடலோரமும் எரியும் நெருப்பாகலாமா?

தமிழகத்துக்கு அகதியாக வர விழைவோர் பேசாலை மீனவரின் துணையை நாடுவது வியப்பல்ல. தலைமன்னாரில் இலங்கைக் கடற்படைத் தளம், மண்டபத்தில் இந்தியக் கடலோரக் காவற்படையினர். இவர்களின் கண்காணிப்பை மீறி, பேசாலையில் ரகசியமாக அகதிகளை ஏற்ற வேண்டும். பாம்பன் தீவுக்கு அருகே இறக்க வேண்டும். படகுடன் பேசாலைக்குத் திரும்ப வேண்டும். இந்தப் பணியை மனிதாபிமான அடிப்படையில் பேசாலை மீனவர்கள் செய்கின்றனர்.

காற்று மெல்ல வீசுகிறதே, புறப்படலாம் எனப் படகைப் பேசாலைக் கடலுள் இறக்குவார்கள், நடுக்கடலுக்கு வந்த பின், திடீரெனக் காற்று பலமாக வீசத் தொடங்கும். தலைக்குமேல் நீர்வாரி இறைக்கும் அலைகள் படகைப் புரட்டும். சிலசமயம் படகு கவிழும். மீனவர் தம் படகையும் உயிரையும் பயணிகளுடன் சேர்ந்து இழப்பர்.

மனிதக் குவியல்களுடன் மீனவர் படகா? இலங்கைக் கடற்படையின் கழுகுக் கண்களுள் விழுந்தால் போதும், கடற்படைப் படகு நெருங்கும், பேசாலை மீகாமனும் படைவீரரும் சிங்களத்தில் பேசுவர், பேரம் சரிவரின் பணம் கைமாறும், பயணிகள் தப்புவர். பேரம் சரிவராவிடின் படகும் பயணிகளும் கைதாவர். தலைமன்னாருக்குப் போய் சிறைகளில் வாழ்க்கை. இழப்பு மீனவருக்கே!

இந்தியக் கடல் எல்லைக்குள் கடலோரக் காவற்படையினர் ரேடார் வலைக்குள் அகப்பட்டால் போதும், ஹெலிகாப்டர் வானில் தெரியும், படகையும் பயணிகளையும் பாம்பனுக்கு நெருக்கி அணைப்பர். தமிழகக் காவல்துறை படகைக் கைப்பற்றும், பேசாலை மீனவர் சிறையில், பயணிகள் அகதி முகாமில்!

இலங்கைத் தீவோ கொதிக்கும் கொப்பறை. சேதுக் கடலும் தமிழகக் கடலோரமும் எரியும் நெருப்பாகலாமா? போரில் கொடுமையைத் தாண்டி உயிர் தப்பினோம் என்ற பெருமூச்சு வருமுன்பே தமிழகக் கடல் எல்லைக்குள் மீண்டும் கொடுமைகளா? கொதிக்கும் கொப்பறைக்குள் இருந்து தப்பி எரிதழலுள் விழுவதா?

இந்தியக் கடல் எல்லைக்குள்ளே, அகதியாக வருவோருக்கும், கொண்டு வரும் படகுகளுக்கும் ஏற்படும் துன்பங்களைப் போக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்திய அரசுக்கு உண்டு.

## ஈழத்தில், தத்தம் ஊர்களில் இனிமேல் உயிருடன் வாழ முடியாது எனக் கருதி, இடம்பெயர்கின்றவர்களின் எண்ணிக்கையில் மிக மிகச் சிறுபான்மையினரே தமிழகத்தை நாடுகின்றனர்.

பாம்பன் தீவின் கிழக்கு முனையில் இருந்து 11 கி.மீ. வரை இந்திய எல்லை. இந்த எல்லைக்குள், முதலாம் திடல் (தீடை), இரண்டாம் திடல், மூன்றாம் திடல் எனப் பெயர்கொண்ட நகரும் திட்டுகள், வாடைக் காலத்தில் நீர்மட்டத்தின் கீழ் மறைந்து, கோடையில் தெளிந்த நீரில் சிறு பரப்புகளாகித் தொடரும் இந்தத் திடல்கள் அருகே, முழங்காலளவு ஆழநீரில் அகதிகளை இறக்கியபின் பேசாலைப் படகுகள் விரைந்து மறைந்துவிடும்.

தமிழக மீனவர்களோ, இந்தியக் கடலோரக் காவற்படையோ கண்டு மீட்கும்வரை இவ்வகதிகள் அத் திடல்களில் காத்திருப்பர்.

சேதுத் திடல்களுக்கு வடக்கே, தனுஷ்கோடி பழைய இறங்குதுறையிசூருந்து 15 கி.மீ. நீளும் இந்திய எல்லைக்குள், பாதுகாப்பு ஓடை அமைத்து, பேசாலையிலிருந்து வரும் அகதிகளுக்கும் படகுகளுக்கும் நம்பிக்கையைக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்திய அரசுக்கு உண்டு.

இரண்டு அல்லது மூன்று கடலோரக் காவற்படைக் கப்பல்கள் 24 மணி நேரமும் இந்தப் பாதுகாப்பு ஓடைக்கு அரணாக நின்றால், உண்மையான அகதிகள் தஞ்சமென வருகையில் நெஞ்சம் குளிர்வர்.

அகதிகளைக் கொண்டு வரும் படகுகளைக் கைப்பற்றி, மீகாமான்களைச் சிறையில் அடைப்பது கொடுமை. மனிதாபிமான நோக்குடன் குறைந்த செலவில் நிறைந்த இழப்புகளுக்குத் தம்மை ஆளாக்குவோருக்கு மனிதாபிமானம் தரும் பரிசு இதுவா?

பிரசவத்துக்கு இலவசமாகப் போகும் ஆட்டோ, விபத்தில் காயமுற்றவரை ஏற்றி வரும் கார், நடுக்கடலில் எந்திரம் பழுதடைந்த படகை இழுத்து வரும் சக மீனவரின் படகு, இப்படி எத்தனையோ எடுத்துக்காட்டுகள். இவர்களைப்போன்றவரே பேசாலை மீனவர்? ஆபத்துக்கு உதவப்போய் ஆபத்தில் மாட்டிக் கொள்கிறார்களே!

24 மணிநேரப் பாதுகாப்பு ஓடை அமைத்து உண்மை அகதிகளுக்குத் தஞ்சமளிப்பதும் பேசாலை மீனவரின் படகுகளைக் கைப்பற்றாமல் திருப்பி அனுப்புவதும் இந்திய அரசின் தார்மிகக் கடமைகள்.

# விருந்தினர் வந்தால்...

புவனம் அக்கா
*(அடுப்படியிலிருந்து)*

## சிக்கின், தக்காளி கூட்டு பொரியல்

### தேவையான பொருட்கள்

சிக்கின் 500 கிராம் [எலும்பில்லாதது], பெ.வெங்காயம் நறுக்கியது 1 Cup, தக்காளி 3 சுமாரானது, இஞ்சி 1½ அங்குல நீளம், பூண்டு - 5 பல், மி.தூள்- 1 மே.கரண்டி, கரம் மசாலாதூள் - ¼ தே.கரண்டி, மஞ்சள்தூள் -¼ தே.கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப, நல்லெண்ணெய் - வதங்க போதுமான அளவு, மல்லி இலை - ½ Cup.

### செய்முறை:

1. சிக்கினை ice cube அளவிற்கு வெட்டி சுத்தமாக கழுவி மஞ்சள்பொடி, தேவையான உப்பு சேர்த்து பிரட்டி மூடி வேகவிடவும்.

2. பெரிய வெங்காயத்தையும், தக்காளியையும் சிறு துண்டுகளாக வெட்டி தனியே வைக்கவும்.

3. இஞ்சி, பூண்டை அரைத்து எடுக்கவும்.

4. சிக்கின் வெந்ததும் தண்ணீர் இல்லாமல் எடுத்து ஆறவிடவும்.

5. ஒரு அகன்ற பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டு காய்ந்ததும் வெங்காயத்துடன் சிறிது உப்பு சேர்த்து பொன்னிறமாக வதங்கியதும் தக்காளியையும் சிறிது உப்பும் சேர்த்து அதனுடன் குழையும் வரை வதக்கவும். பின் மி.தூள், கரம் மசாலா சேர்த்து, நன்கு பிரட்டி விடவும்.

6. பிரட்டிய மசாலாவுடன் சிக்கினையும் சேர்த்து மெல்லிய தீயில் மூடி இடைக்கிடை பிரட்டவேணும். நன்கு சேர்ந்து பிரட்டலாக வரும்போது வாசனை வரும். அப்போது மல்லி இலையை தூவி இறக்கிவிடவும்.

முக்கிய குறிப்பு: எந்த உணவுடனும் சாப்பிட மிக சுவையாக இருக்கும். குழந்தைகளும் விரும்பி உண்பர். காரம் அவரவர் தேவைக்கு கூட்டி குறைக்கவும்.

# மறைந்திருக்கும் மகிழ்ச்சி

மற்றவர்களைத் தேவையில்லாமல் ஆராய்பவன் தன்னுடைய மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்கிறான்.

மற்றவர்களுக்கு ஏதாவது கிடைத்தாலோ அல்லது யாராவது கொடுத்தாலோ, அதைப் பொறுக்க முடியாதவனுக்கு மகிழ்ச்சி போய்விடுகிறது.

கிடைத்ததிலும் இருப்பதிலும் திருப்தி அடையாத குணம் உள்ளவனுக்கு மகிழ்ச்சியும் நிலைக்காது.

ஏமாற்றம், தோல்வி என்று வரும் போது அவர்கள் மனத்தின் சமநிலை கெட்டுப்போகும்.

தத்துவ மனப்பான்மை இல்லாதவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு, வருவதையும் நடப்பதையும் பார்வையாளனாகப் பார்க்கும், பக்குவம் தத்துவ மனப்பான்மை கொண்டவர்க்கு உண்டு.

பிறர் பேசுவதையும் செய்வதையும் யதார்த்தமாக எடுத்துக்கொள்ளும் தன்மை எவ்வளவு குறைவாக உள்ளதோ, அந்த அளவுக்கு மகிழ்ச்சியும் குறையும்.

மனத்தையும் பேச்சையும் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் அவ்வப்போது மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மற்றவர்களிடம் குறை அல்லது பிழைகாண்பதை ஒரு வழக்கம் ஆக்கிக் கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது.

மற்றவர்களின் விமர்சனங்களை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சரியான அணுகுமுறையைக் கற்றுக் கொள்ளாதவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அளவுக்கு மீறி விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் கவலையைத்தான் வளர்ப்பார்கள்.

*- வி.எஸ். ஸ்ரீதரன்*

Nathan & Co

Properties
Crime
Immigration
&
Matrimonial

with best compliments

Tel: 020 8542 1805

106 Kingston Road
Wimbeldon,
London SW19 1LX

# என் ஞாபகப் பதிவிலிருந்து...

**சுதந்திரா**
*( ஒரு பேப்பருக்காக )*

அமைதிகாக்க வருகிறோம் என வந்த இந்தியப்படைகளின் உண்மை முகம் கிழிந்து இந்தியப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்து கொண்டிருந்த நாட்களவை.... மார்கழி மாத மழையில் நனைந் திருந்தது ஊர். அந்த விடியப்பறம் ஊருக்குள் ஏதோ அவலம் ஒன்று நேரப் போவதை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது.

எங்களுக்காய், எங்கள் சுதந்திரத்துக்காய், எங்களது வாழ்வினை மட்டுமே எண்ணத்தில் இருத்தி எங்களுக்காகவே தங்களைக் கருக்கி எங்களுக்காகவே துப்பாக்கி தூக்கிய எம் தேசப் புதல்வர்களைத் தேடி ஊர்களைச் சூழும் இந்தியப் படைகள் அந்த விடியப்பறம் எங்களது ஊரையும் சூழ்ந்து கொண்டனர்.

கற்கரைப் பிள்ளையார் கோவில்ப் பக்கமாய் துப்பாக்கிச் சத்தங்கள் வெடித்து ஓய்ந்தது. ஊர் இளம் பெண்கள் அனைவரும் இப்போது முழுப்பாவாடை கட்டியிருப்பார்கள். அவர்கள் வருகிறார்கள் என அறிந்தால் 13 வயதான என்னையே அம்மாவும் அம்மம்மாவும் முழுப் பாவாடை கட்டுவித்து விடுவார்கள். நானும் முழுப்பாவாடை கட்டுகிறேன். சமாதி கோவிலடி நோக்கி இந்தியச் சப்பாத்துகள் திடும் திடுமெனக் குதித்தது.

எல்லாம் பிள்ளையார் கோயிலுக்குப் போக ணும். மீறி வீட்டுக்க இருக்கிறவங்க எல்லாம் சுடப்படுவாங்க.... ஒரு இந்தியச் சிப்பாய் ஒலிபெருக்கி மூலம் சொல்லிக்கொண்டு போனான். ஊரே அந்த அறிவிப்புடன் கற்கரைப் பிள்ளையார் கோவில் வாசலில் குவிகிறது. முழத்துக்கு ஒரு சிப்பாய் துப்பாக்கி வேலி போட்டிருந்தான்.

வெளியிலிருந்த சிப்பாய் ஒருவன் ஆங்கிலம் தெரிந்த யாரையாவது எழும்பும்படி சொன் னான். ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருந்தும் யாரும் எழும்பவில்லை. இறுதியில் கிறிஸ்ண தாஸ் மாஸ்ரர்தான் எழுந்தார். ஆங்கிலம் தெரிந்தவர்களை எழும்பச் சொன்னவர்கள் கிறிஸ்ணதாஸ் மாஸ்ரருக்குக் காலால் எட்டி உதைத்தார்கள். சனக் கூட்டத்தில் இருந்த கிறிஸ்ணதாஸ் மாஸ்ரரின் மனைவி ராசாத்தி யக்காவும் 10 வயது மகள் சுயாவும் அழுது கொண்டு எழ துப்பாக்கிக் கழுகு ஒன்று அவர் களை நோக்கித் துப்பாக்கியை நீட்டியது. அத்துடன் அவர்களின் அழுகை அடங்கி விடுகிறது. அவர்கள் சொல்வதை அப்படியே மக்களுக்குச் சொல்லச் சொன்னான் அந்தக் கூட்டத்தின் தளபதி.

கற்கரையான் மணல் வீதியில் இருந்தவர்கள் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டனர். தரம் பிரித்தவர்களில் எமது ஊர் இளைஞர்களில் ஒரு பகுதியினரை கோவிலுக்குள் அழைத்துப் போனார்கள். நடுத்தர வயதினரில் ஒரு பகுதி யினரை சற்றுத்தள்ளி நிறுத்தி இரு கைகளை யும் மேலே உயர்த்திப் பிடித்தபடி இரு கால் களையும் அகட்டி மேலே வானத்தைப் பார்க்க வைத்தனர். அப்படி நிறுத்தப்பட்டவர்கள் சற்று அசைந்தால் சரி. அந்த நபர் அவர்களால் உதைக்கப்பட்டு மீண்டும் அப்படி நிறுத்தப் படுவார். கோவிலுக்குள் கொண்டு செல்லப் பட்டவர்களின் கதறல் ஒலி ஊரையே அதிர் வித்து குப்பிளானையே நிறைத்துக் கொண்டி ருந்தது.

கோவில் வெளிமணலில் இருந்த எங்களை அந்தக் கதறல்கள் நடுங்க வைத்துக் கொண்டி ருந்தது.. பல இளைஞர்கள் ஓமகுண்டத்தில் இறக்கி ஏற்றப்பட்டு வதைக்கப்பட்டுக் கொண்டி ருந்தார்கள். திடீரெனக் கற்கரையான் பெரிய மணி ஒலிக்கிறது. வெளியிலிருந்த மக்கள் வெள்ளம் 'பிள்ளையாரே அப்பனே ஆண் டவா...' கைகளை உயர்த்திக் கும்பிட்டனர்.

அந்த மணியோசைக்குப் பின்னால் மறைந் திருந்த சோகத்தின் பொருள் அப்போது யாருக்குமே புரியவில்லை. அடி, உதை, வதை, அழுகை கற்ரையான் வீதியெங்கும் எதிரொலித் துக் கொண்டிருந்தது.

புலி வாறதா...? சொல்லு....! கிறிஸ்ணதாஸ் மாஸ்ரரைக் கேட்டான் அந்தப் பேய்க்கூட்டத் தின் தளபதி. இல்லை... இஞ்சை ஒருத்தரும் வாறதில்லை...அருகில் நின்ற துப்பாக்கிக் காரன் கிறிஸ்ணதாஸ் மாஸ்ரருக்குத் துப்பாக்கி யால் இடித்தான். இஞ்சை புலி வாறது ..... வந்தது... இஞ்சைதானிருக்குது! மீண்டும் கர்ச்சித்தான் தளபதி.

அங்கு குழுமியிருந்த மக்கள் கதறினர். இஞ்சை ஒருதரும் வாறேல்லை ஐயா.... இஞ்சை ஒருதரும் வாறேல்லை... அந்தக் கொடியவர் களின் காதுகளிற்கு அவை எதுவும் கேட்க வில்லை கண்ட பாட்டுக்கு உதைத்தார்கள்.

உண்மை சொல்லுறவரைக்கும் ஒருத்தரும் வீட்டை போறேல்லை... தண்ணியும் இல்லை.

கத்திவிட்டுக் கதிரையில் போயிருந்தான் தளபதி. நிலம் வெளிக்க முன்னம் விடிகாலை 5 மணி முதல் கற்கரையான் வீதியில் காவலி ருக்கத் தொடங்கி 8 மணியாகிவிட்டது. பசியிலும் தண்ணீர்த் தாகத்திலும் குழந்தைகள் அழத் தொடங்கியது. ஆக்கிரமிப்பாளர்களின் காது களில் அது விழவே இல்லை.

நேரம் பகல் 11. கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிக்க அனுமதி கிடைக்கிறது. பசித்த வயிறுகள் தண்ணீரால் நிறைந்தது. கோயிலுள் கதறல் ஒலி ஓயாது கேட்டுக் கொண்டே இருந்தது.

ஐயோ...அம்மா... இல்லை... தெரியாது... ஆ...அம்மா....ஐயோ... எத்தனையோ சீவன் களின் அவலக் குரலின் அழுகை.... அந்த ஆணவப் பேய்களின் காதுகளில் எதுவும்? எட்டவில்லை. அது அவர்கள் காதுகளில் தேன்வார்த்திருக்கும்.

பொழுதுமதியப்பொழுதைத் தொட்டது. பேய் களின் அநியாயம் தணிகிறது. கிறிஸ்ணதாஸ் மாஸ்ரரை அழைத்துச் சொன்னார்கள். புலி வந்தா உடனை எங்களுக்கு அறிவிக்க வேணும்... இல்லாட்டி எல்லாம் எல்லாம் அழிச்சுப் போடுவம்....

கோவிலுக்குள் ஓமகுண்டத்தில் வதைக்கப் பட்ட இளைஞர்கள் வெளியே கொண்டு வரப்பட்டனர். உடலெல்லாம் இரத்தக்கசிவு... வண்ண வண்ணமாய் உடையணிந்து வலம் வரும் சயிக்கிள்களில் மிடுக்காய்த் திரிந்த எமது ஊர் இளைஞர்கள் இன்று தலைகள் நிமிர்த்த முடியாத காயங்களுடனும் கண்ணீருடனும் நின்றனர்.

வதைக்கப்பட்டவர்களில் 9 பேரை விசாரணை செய்யப் போவதாக வாகனத்தில் ஏற்றிப் பறந்தது ஒரு கூட்டம். அவர்களின் உறவுகளின் அழுகையால் மீண்டும் அதிர்ந்தது கற்கரை யான் வீதி. பேய்கள் வடக்குப் புன்னாலைக் கட்டுவன் நோக்கிப் போய் முடிந்தது.

அதுவரையும் அந்தப் பேய்களின் நாற்றத்தில் நசுங்கிக் கிடந்த ஊர் இப்போது மெதுவாய் மூச்சு விடத் தொடங்கியது. அடுத்து வந்த மூன்றாம் நாள் கற்கரையான் மேற்குப்பக்க தோட்டவெளி எருக்கும்பிப் புற்காட்டுக்குள் சனக்கூட்டம் நிறைந்தது.

என்னவாம்.... என்ன நடந்ததாம்.... கேட்டுக் கேட்டுச் சனம் நிறைந்தது அந்த வெளியில். அங்கு ஓர் இளைஞன் ஊதிப் பருத்து மணக்கப் பிணமாய்க் கிடந்தான். அவனது ஊர் வடக்குப் புன்னாலைக் கட்டுவன். அவன் ஊரில் இந்தியப் பேய்கள் குடியிருப்பதால் அவனும் அவனது குடும்பமும் குரும்பசிட்டியில் இப்போது குடியிருக்கிறது.

அவன் எங்கள் ஊரால் தினமும் சந்தைக்கு வாழைக்குலை கொண்டு போவான். முந்த நாள் அவனும் அந்தப் பேய்களால் எங்கள் ஊர் வீதியில் கைது செய்யப்பட்டுக் கோவில் ஓமகுண்டத்தில் ஏற்றி இறக்கப்பட்டு வதைக்கப் பட்டவன். இவனது உறவுகள் யாரும் அந்த இடத்தில் இல்லாமையால் அவனைப் பெரிதாய் யாரும் கவனிக்கவில்லை.

அவனது பெற்றோர் அவனைக் காணாது தேடி இறுதியில் வடக்குப் புன்னாலைக் கட்டுவன் இந்தியப் படைகள் முகாமுக்கு

- தொடர்ச்சி 38ம் பக்கம்


MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
845 Romford Road




குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

- House/Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# வீதியோர வேம்பு

வயதும் வாழ்கின்ற சூழலும் மாற்றகளைச் சந்திக்கின்றவேளை நம் வரலாறும் புதிய அத்தியாயங்களை எழுதத் தொடங்குதின்றது.

நகரப் படிப்பை முடித்துக்(?) கொண்டு திரும்பிய எனக்கு புதிய அத்தியாயம் தொடங்கியது மீண்டும் என் சொந்த ஊரில்,

அதே வீடு, வளவு, பழக்கப்பட்ட வீதிகள், மரங்கள், வயல்கள், கால்வாய்கள். இவற்றோடு சிறு வயதுப் பருவத்தில் இருந்த நெருக்கம் இப்போது இல்லை என்றாலும், எனக்கும் அவற்றுக்குமான ஆழமான உறவை அவை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தன.

பிரதான தெருவில் இருந்து பிரிந்து என் வீடு நோக்கிச் செல்லும் கிறவல் பாதை என் பெற்றாருக்கு அடுத்ததாய் எம்மை வளர்த்த, வளர்த்த பெருமைக்குரியது. எனக்கு மட்டுமல்ல, அவ் வீதியில் வாழும் சிறுவர் சிறுமியர் அனைவருக்கும் இக் கிறவல் பாதையே மாற்றாந்தாய்...

இவ் வீதியில் காணப்பட்ட மூன்று மலைவேம்பு மரங்கள், ஒரு வேப்பமரம், மற்றுமொரு பாலைமரம் இவைதான் வெயிலுக்கும் மழைக்கும் எமக்கான குடைகள். எம் ஊர்ப் பறவைகள் பலவற்றின் வீடுகள்.

அடிக்கடி எமக்கும் இந்த மரப் பறவைகளுக்கும் இடையே தகராறு வருவதுண்டு. மரத்தின் கீழ் ஒதுங்கும் எம் தலைகளைக் குறி வைத்து அவை இடுகின்ற எச்சம் பெரிய எரிச்சலை எமக்கு ஏற்படுத்தும். இதை அடுத்து எம் கற்களால் பல கூடுகள் கலைந்ததும் உண்டு.

அவ் வீதியின் ஒரு முடக்கருகே இருந்த வைரவர் கோவிலுக்குப் பக்கத்தில்தான் அந்த வேப்பமரம் நின்றது. மிகக் காத்ததிரமான நீண்டு உயர்ந்த வேப்பமரம். அதற்குப் பின்னால் வைரவ கோவில் கிணறு. கோவில் தேவைகளுக்கு மட்டுமல்ல, அவ் வீதியின் நீர் தேவைகளுக்கும் அக் கிணறு பயன்பட்டது. தாகம் தீர்த்த பலரும் இந்த வேப்பமரதின் கீழ்தான் இளைப்பாறுவர்.

எம் பயணப் பாதையில் சரிபாதியில் இவ் வேம்பு நின்றதால் நாம் சற்று நேரம் அதிகமாய்த் தரித்து நின்ற நிழலும் இதுதான். அவ் வேளை மரத்தின் பட்டைகளில் எம் பெயரை நாம் பொறித்தும் இருக்கின்றோம். நான் சிலவேளை அப்பா அம்மாவுடன் சண்டை பிடித்து பின் வெளிநடப்புச் செய்தால், என் தந்தையார் என்னைக் கண்டெடுக்கும் இடமும் இந்த நிழல்தான்.

ஆண்டுக்கொரு தடவை நடைபெறும் வைரவ கோவில் பொங்கல் நாளன்று இந்த வேம்பில்தான் ஒலிபெருக்கி கட்டுவார்கள். வேம்பிற்கும் களை கட்டிவிடும்.

இவையெல்லாம் என் அக்கால நினைவுகளாயிருந்தன.

ஊர் திரும்பி ஓரிரு நாட்கள்தான். படிப்பை முடிக்க இன்னுமொரு ஆண்டுக்கு வாய்ப்பு இருந்தாலும், எதிர்காலம் பற்றிய மெல்லியதான வினாக்கள் நெஞ்சத்திற்குள் எழாமல் இல்லை.

இதயத்துக்கு இனிமை தரவல்ல ஒரு காலைப்பொழுதில் எழுந்து, கடன்கள் முடித்து, சைக்கிளோடு என் வீதியில் இறங்கினேன்.

வீதியின் இரு மருங்கு அழகையும் நின்று நிதானித்து அனுபவிக்கின்ற வயது இது. சீருடைகளோடு பள்ளிப் பிள்ளைகளும் அழகை அள்ளி எறிந்தபடி வீதியில் அணிவகுத்துக் கொண்டிருந்தார்கள்.

பாதிக்குமேல் புதிய முகங்களாக இருந்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் முகங்கள்.

## கரிச்சானின் கோலங்கள்

### - இருவத்தியேழு -

சைக்கிள் மெதுவாக நகர்ந்தது. முடக்கில் திரும்பினேன். திரும்பியவுடன் வழக்கமாய்த் தோன்றும் காட்சியில் வழமைக்கு மாறான ஒரு வெறுமை. அவ்விடத்தில் ஒரு சிறு கூட்டமும் கூடி இருந்தது.

சட்டென உச்சந்தலை உறைந்தது. காணவில்லை. எம் தலையான உறவுகளில் ஒன்றான அந்த வேப்ப மரத்தைக் காணவில்லை. என் உடலெங்கும் ஓடிய குருதி ஒரு திசை நோக்கிக் கொப்பளித்திருக்க வேண்டும். துயரம் கடந்து கொதிப்பேறியது.

பெறுமதி மிக்க அதன் பலகைகளுக்காக யாரோ இரவோடு இரவாக அதை அறுத்துப் போய்விட்டார்களாம். கூடியிருந்த வீதியின் குடிமக்கள் வேதனையோடு பேசிக் கொண்டார்கள்.

நினைவு தெரிந்த நாள் முதல் எம்மை அரவணைத்த அன்னைக்கு நிகரான வேம்பைக் கொய்த கொடியவர்கள் யார்?

பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாம். ஆயினும் மீண்டும் அங்கு வேம்பு வருமா என்ன?

உறவை இழந்துவிட்ட உணர்வு எனக்கு. வேப்பம்பழம் உண்ணவரும் பறவைகளையும் எம்மையும் துன்புறுத்திய கயவனை நாமும் தேடினோம்.

இனி வீதியில் அவ்விடத்தைக் கடக்கும் போதெல்லாம் என் கண்கள் கலங்கும்.

கோலங்கள் தொடரும்.

- கரிச்சான் குஞ்சன்.

# பரப்புரையும் பிரச்சாரமும்

சிறீலங்கா அரசாங்கம் தமிழின அழிப்பு சம்பந்தமாகக் கட்டவிழ்த்துள்ள அரச பயங்கரவாதத்தைப் பற்றி, உலக மக்களுக்குத் தக்கமுறையில் பரப்புரை செய்து அவர்களின் கவனத்தையும், அனுதாபத்தையும் இலங்கைத் தமிழர் பக்கம் கவரும் முக்கியத்துவத்தை ஒரு பேப்பர் (Aug 16) மூலம் கரிகாலன் அவர்கள் அபிப்பிராயம் கேட்டதன் பிரகாரம் ஒரு சிலவற்றை ஒரு பேப்பர் வாசகர்களுடன் கலந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் ஒரு பேப்பர் ருக்காக சுதந்திரா அவர்களும் இதே கருத்துப் பட வெறும் அஞ்சலியும், ஆர்ப்பாட்டங்கள் மட்டும் போதாது என்றும் அதைத் தொடர்ந்தும் தொடர்ச்சியாகப் பரப்புரையும் பிரச்சாரமும் - குறிப்பாக அந்தந்த நாடுகளின் அரசியல் வாதிகளையும், தீர்மானம் மேற்கொள்வோர்களின் கவனத்தை கவரும் வண்ணம் மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமானது.

இதே கருத்துப்பட பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கொடுத்த பேட்டியிலும் TTN தமிழ் ஒளி செய்திக்களத்திலும் தமிழ்த் தேசியத் தொலைக்காட்சியிலும் (NTT) ஆதரவு தேடலின் (Lobbying) முக்கியத்துவத்தை விளக்கியிருந்தார். அவரின் கருத்துப்படி அஞ்சலியும், ஆர்ப்பாட்டமும் மக்களின் அபிப்பிராயத்தை ஆக்குவதற்கு ஏதுவாக இருந்தாலும், அதனால் வரும் தாக்கம் (Impact) மிகக் குறைவானதே என்றும் விளக்கியிருந்தார்.

இதே கருத்துப்பட ஒரு பேப்பர் ருக்காக (ஆகஸ்ட் 16) ஆதரவு தேடலும் அரசியல் பிரச்சாரமும் தலையங்கத்தில் இராகு அவர்கள் ஆணிவேர், அக்குவேர் போன்று மிக விரிவாகப் பிரித்து எழுதியுள்ளார். இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாகவும் தன்மானத்துடனும் வாழ வேண்டும் என விரும்பும் தமிழர்கள் - முக்கியமாகப் புலம்பெயர்ந்துள்ள ஒவ்வொரு தமிழர்களும் இவ்விடயமாகப் பரப்புரையும், பிரசசாரமும் செய்ய வேண்டியது மிக முக்கியமானது. "செய்கின்றவர்கள் செய்யட்டும்" என்று ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி மற்றையவர்கள் பார்வையாளர்களாக மட்டும் இருக்கும் நிலைமாற வேண்டும். ஒவ்வொரு தமிழனும் செய்யக் கூடிய சில காரியங்களைப் பட்டியல் இடலாம் என எண்ணுகின்றேன்.

1. Tamil Guardian, ஒரு பேப்பர் போன்ற இலவசப் பத்திரிகைகளில் நல்ல பல விசயங்கள் வருகின்றன. அவற்றை ஒவ்வொருவரும் வாசித்து அறிய வேண்டும். முக்கியமாக அவற்றில் உள்ள ஆங்கிலக் கட்டுரைகளை தமிழ் அல்லாத நண்பர்களுடனும், அயலவர்களுடனும் பகிர்ந்து கொண்டு எமது பிரச்சினைகளை விளக்கலாம். உதாரணமாக எனக்குத் தெரிந்த பாகிஸ்தான் நண்பர்களுடன் பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு விற்பனை செய்யும் ஆயுதங்களே இலங்கையிலுள்ள தமிழர்களைக் கொன்று குவிக்கின்றது என்பதனை ஆங்கிலக் கட்டுரை மூலம் விளங்கப்படுத்திய போது, அவர்கள் வாயாலே 'காஷ்மீர் பிரச்சினைக்கும், பலஸ்தீனியப் பிரச்சினைக்கும் ஆதரவு வழங்கும் பாகிஸ்தானிய அரசாங்கம் எப்படி இவ்வாறு செய்யலாம்? என்று அங்கலாயித்துக் கொள்வதைக் கேட்கவே, நான் ஒருவிதத்தில் பரப்புரை செய்துள்ளேன் என்று மனநிம்மதி அடைவேன். அதே ஒவ்வொரு புலம்பெயர்ந்த தமிழனும், மற்றையவர்களின், ஆதரவைச் சம்பாதிக்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

2. புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களில், என்னும் எத்தனையோ மக்கள் IBC தமிழ் வானொலி கேட்காமலும் TTN, தீபம் போன்ற தொலைக்காட்சிகளைப் பார்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர்களை எம்பக்கம் மாற்றி ஒரு நாட்டுப் பற்றுள்ளவர்களாக மாற்ற வேண்டும்.

3. www.tamilnet.com மூலம் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறியக் கூடியதாக இருக்கும். IBC tamil வானொலியில் செய்திகளையும் முக்கிய நிகழ்ச்சிகளையும் www.ibctamil.co.uk இணையத்தளம் மூலமும் அறிந்து கொள்ளலாம். இந்த விடயத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் அறிந்து கொள்வதற்கு ஒரு அறிமுகம் இணைத்தளம் (Introducing Tamil web) அமைந்தால் நல்லது என்பது அபிப்பிராயம்.

4. இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றிய செய்திகள் பிறமொழி ஊடகங்கள் மூலம், குறிப்பாக BBC, CNN மூலம் உண்மையான நிலையை மற்றையவர்கள் அறிந்துகொள்ள வழிவகை செய்யவேண்டும். 5. பிரித்தானியாவில் பிரபல்யமான பத்திரிகையான Guardian ஆங்கிலப் பத்திரிகை இடைக்கிடை இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை பக்கசார்பற்ற முறையில் தெரியப்படுத்தினாலும் Times பத்திரிகை, அரச சார்பான செய்திகளையே பிரசுரித்து வருகின்றது. அதற்கு எமது விழிப்புணர்வுக்குழு உடனடியாகக் கண்டனக் கடிதங்களை எழுதவேண்டும். இதேபோன்று பிரித்தானியாவிலிருந்து பிரசுரமாகும் Economist வாராந்த சஞ்சிகை ஆகஸ்ட் 19ம் திகதி பக்கசார்பற்ற முறையில் எழுதியிருந்தார்கள். இதற்கு நாங்கள் வரவேற்று நன்றி எழுதினால் மீண்டும் நாங்கள் பக்கசார்பற்ற செய்திகளை அறிவிக்க ஏதுவாக இருக்கும். இவ்வாறு உலக மக்களின் ஆதரவை நாங்கள் பெறமுடியும் என்பது எனது கருத்து.

South Africa இல் Nelson Mandela அவர்கள் செய்த போராட்டம் வெற்றி அடைவதற்கு உலக மக்களினதும் அரசாங்கங்களினதும் ஆதரவு மிக முக்கியமானதாக இருந்தது. இதேபோன்று இலங்கைத் தமிழர் பிரச்சினையும் நாளை வெற்றியடைவதற்கு வாய்ப்பு வெகு தூரத்தில் இல்லை.

- த.செல்வரத்தினம்

RADIUS SERVICES LIMITED

**Contact our services for :**
Shelving
Chillers, Freezers
Air Conditioning systems
Shop Fitting
Cold Rooms etc.



உங்களின் அனைத்து குளிர்சாதன
உபகரணங்களின் தேவை
மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு
நாடவேண்டிய ஒரே இடம்






Unit: 23 - 24 Resolution Way
London SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) Jaffna Parents looking for their son 41 years 5'7" tall, an UK, B.Sc IT Graduate, now in real estate business, a suitable bride. Ref: 790

2) Jaffna mother looking for her son 36 years old 5'7" tall, educated & now working as Duty Manager at a leading super market in UK, a suitable bride. Ref: 789

3) Brother looking for his brother, 36 years 5'7" tall, working as a Information officer at NGO in Colombo, a suitable bride. Ref: 788

4) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'7" உயரமுள்ள, லண்டனில் Assistant Manager ஆக வேலைசெய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி UK/Canada இல் தேடுகிறார். Ref: 787

5) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'3" உயரமுள்ள UK இல் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref: 786

6) Jaffna Parents living in UK looking for their son, 31 years 5'8" tall, Charted accountant, UK citizen a suitable bride. Ref: 785

7) Jaffna parents, living in U.K seeking for their professionally qualified son, a UK citizen, 28 years 5'11"tall, a suitable bride. Ref: 784

8) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42வயது 5'7" உயரமுள்ள MBBS பட்டதாரி விவாகரத்துப் பெற்ற பிள்ளைகள் அற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 783

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'7"உயரமுள்ள A/L UK பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் வசிக்கும் மாமனார் தேடுகின்றார். Ref: 782

10) Jaffna Parents living in Canada looking for their son, a U.K Graduate having PR & an Accountant, 27 years 5'11" tall, a suitable bride. *Ref: 781*

11) Jaffna parents, living in U.K seeking for their son 27 years 5'8"tall, a Graduate working as an Accountant a suitable bride with traditional values. *Ref: 780*

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இங்கிலாந்தில் நிரந்தர வதிவிடவுரிமை பெற்ற பட்டதாரி, 33 வயது 5'7"உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 779

13) Sister seeks for her brother 38 years old 5'6" tall a British citizen working as a computer consultant, westernised, a suitable, fluent in English bride.Ref: 778

14) Jaffna Parents seek for their son, 33 years, 5'6" tall, UK educated ,B.Sc qualified, a citizen of UK & a divorcee, a suitable bride in UK/Canada/USA. Ref: 777

15) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள, தற்போது வவுனியாவில் வேலை பார்க்கும் படித்த மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref: 776

16) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'5" உயரமுள்ள, கண்டியில் டாக்டராக பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் சகோதரன் தேடுகின்றார். Ref: 775

17) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'7", 8 வருடங்களாக லண்டனில் தொழில்புரியும் மணமகனுக்கு சகோதரி தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 771

18) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் 32 வயது 5'11" உயரமுள்ள, லண்டன் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள A/L படித்த மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 769

19) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் 29 வயது 5'4" உயரமுள்ள, லண்டன் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள A/L படித்த மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 768

20) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது USA இல் தொழில்புரியும் A/L படித்த 37 வயது 5'6" உயரமுள்ள, மணமகனுக்கு USA/Canada இல் வதிவிட வுரிமையுள்ள மணமகள் தேவை. Ref: 767

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'7" உயரமுள்ள, பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் விசா உள்ள, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 766

22) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 40 வயது 5'11" உயரமுள்ள, பிரிட்டிஷ் பிரஜாவுரிமையுள்ள விவாகரத்துப் பெற்ற படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 765

23) முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'6" உயரமுடைய, 3 வருடங்களாக லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் அக்கா தேடுகிறார். *Ref:762*

24) A Malaysian Tamil, teacher, business man, originally from Jaffna, 25 years old, 5'10" tall seeks a British Tamil bride. Ref:761

25) Jaffna born British citizen 48 years old, 5'5" tall, a divorcee looking for a bride, widow or divorcee also may be considered. Ref:760

26) Ceylon Tamil, a Professional Mechanical Engineer living in USA, a Canadian Citizen, 37 years old, 5'7" tall, a divorcee, looking for a suitable bride. Ref:759

27) Jaffna Parents looking for their son a Graduate 33 years 5'7"tall, living in London a suitable bride in UK/Canada/Australia with Permanent resident. *Ref:758*

28) Jaffna Parents living in Canada looking for their son 29 years old,6' tall, a professional, born in Sri Lanka, brought up in Canada, a suitable educated bride willing to live in Canada. *Ref:757*

29) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 6'உயரமுடைய UK பிரஜாவுரிமையுள்ள படித்த மணமகனுக்கு படித்த மணமகளை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர். *Ref:754*

30) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'9" உயரமுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். *Ref:753*

31) Jaffna Parents looking for their son 29 years old 5'10" tall, UK educated, employed in civil service, a suitable bride. *Ref:751*

32. Jaffna Parents living in the UK looking for their UK born son, a Graduate, 34 years old, 5'6" tall, a suitable bride from one of the western countries. *Ref:749*

33. Vadamarachchi Parents looking for their son 35 years 5'6" tall self-employed as an estate agent, a PR holder, awaiting citizenship, a suitable bride. *Ref:747*

## மணமகன் தேவை

1) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பில் ஆசிரியராகக் கடமையாற்றும் 38 வயது 5'4" உயரமுள்ள, BA Jaffna Uni.Graduate மணமகளுக்கு கொழும்பில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1069

2) Jaffna Uncle looking for his niece, 29 years, 5'4" tall, A/L educated, a British citizen, a suitable bride in UK. Ref: 1068

3) மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5'5" உயரமுள்ள, படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை Europe இல் தேடுகின்றனர். Ref: 1067

4) South Indian (Malayalam) brother looking for his sister 25 years old, 5'4" tall, educated in India, fluent in Tamil, a suitable groom. Ref: 1066

5) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள, பட்டதாரி ஆசிரியராக கொழும்பில் வேலைபார்க்கும் மற்றும் கணினி தேர்ச்சியும் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் லண்டன்-கனடாவில் தேடுகின்றனர். Ref: 1065

6). Brother living in UK looking for a suitable groom for his sister from Jaffna, a Doctor, working in Colombo General hospital, Ref: 1064

7) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'5" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் உள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1063

8) இலங்கையிலுள்ள 34 வயதுடைய பட்டதாரி ஆசிரியை மணமகளுக்கு வெளிநாட்டில் வசிக்கும் நற்குணமுடைய மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் தேடுகிறார். Ref: 1062

9) Jaffna Mother living in Canada seeking for her daughter 39 Years 5'3" tall, a medical doctor in a well recognized university hospital, divorcee (with no children) and a permanent resident of USA, a suitable qualified partner. Ref: 1061

10) Jaffna Parents looking for their UK born daughter 33 years old, 5'1" tall, a well qualified and working in London, a suitable groom. Ref: 1060

11) Jaffna parents living in Chilaw looking for their daughter 40 years, 5'1" tall, well educated, English trained teacher, a suitable groom in UK/Canada Ref: 1059

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5'3" உயரமுள்ள, விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு கொழும்பிலுள்ள சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார் . Ref: 1058

13) நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 47 வயது 5'3" உயரமுள்ள, லண்டனில் வசிக்கும் தாரமிழந்த மணமகளுக்கு உறவினர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1057

14) Sri Lankan Parents looking for their daughter 25 years, 5'5" tall , a School teacher in Colombo, a suitable groom Ref: 1056

15) Jaffna parents living in Canada looking for their daughter 27 years, 5'5" tall and employed. A suitable educated and employed groom in Canada from a good family. Ref: 1055

16) Jaffna Parents living in London seeking for their UK born daughter 26 years, 5'4' tall , well qualified and employed, a suitable groom with similar background and qualified. Ref: 1054

17) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது , 5'1" உயரமுள்ள தற்போது கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1053

18) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது, 5'5" உயரமுள்ள, கனடாப் பிரஜாவுரிமையுள்ள தாரமிழந்த மணமகளுக்கு தகுந்த வரனை சகோதரி தேடுகிறார். விவாகரத்து பெற்றவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1052

19) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" உயரமுள்ள, GAQ படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1051

20) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 40 வயது 5'4" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் உள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1050

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'3" உயரமுள்ள A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் உள்ள சகோதரி தேடுகிறார். Ref: 1049

22) Jaffna Mother living in London looking for her daughter, a UK citizen, 33 years old 5'5" tall, well educated holding a high profession, a suitable groom. Ref: 1048

23) Jaffna Parents looking for their daughter 26 years, 5'4" tall, UK born, a graduate, a suitable groom. Ref: 1047

24) Jaffna Parents looking for their daughter 35 years old, 5'7" tall, a Uni. Lecturer, a divorcee with no children, now in UK, a suitable groom. Ref: 1046

25) Jaffna Sister looking for her younger, 38 years 5'3" tall, accounting technician, a UK citizen, a suitable groom in UK, Canada or Sri Lanka. Ref: 1045

26) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடாவில் வசிக்கும் பெற்றோர் தங்கள் பட்டதாரி மகள் 27 வயது, 5'3" உயரமுள்ள கனேடிய ஊவையணைநெஇ தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1044

27) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 44 வயது 5'1" உயரமுள்ள கனடாப் பிரஜாவுரிமையுள்ள பதிவுத் திருமணம் செய்து விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1043

28) வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டு ஆங்கில ஆசிரியராக் அங்கே பணியாற்றும் 27 வயது 5'1" உயரமுள்ள பட்டதாரி மணப்பெண்ணுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1042

29) வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அங்கே வங்கியில் வேலை செய்யும் 33 வயது 5'2" உயரமுள்ள மணமகளுக்கு லண்டனிலுள்ள சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1041

30) Jaffna Parents living in U.K, looking for their daughter 41 Years old, 5'4" tall, well educated, holding high profession a suitable groom. Ref: 1040

31) Jaffna Parents living in U.K, looking for their daughter 36 Years old, 5'6" tall, well educated, holding high profession a suitable groom. Ref: 1039

32) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5"3"" உயரமுள்ள, உதவிக் கணக்காளராக கொழும்பில் வேலைசெய்யும் மணமகளுக்கு கொழும்பில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1037*

33) வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5"2"" உயரமுள்ள, A/L படித்து வவுனியாவில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகனை தேடுகின்றார். *Ref: 1036*

34) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'6' உயரமுள்ள, கனடாவில் நிரந்தர வதிவுரிமையுள்ள படித்த மணமகளுக்கு பெற்றோர் கனடாவில் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1026*

35) Parents living in London looking for their daughter 25 years old, 5' 4" tall, a graduate and a carnatic musician, living in Colombo, a suitable groom. *Ref: 1020*

# கவிதை

## என்னைக் கவர்ந்த எழில்!

கீழிவான் சிவந்து கிழக்கு வெளுத்தது;
பாழ்இருள் நீக்கிப் பகலவன்— வாழுயிரை
மண்ணில் எழுப்பிய மாண்புடைக் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்
ஆடும் மயிலின் அழகும், மரக்கிளையில்
பாடும் குயிலின்நல் பண்ணிசைக்கும்— காடுமென்
அன்னை இயற்கையின் அற்புதக் காட்சியுமே
என்னைக் கவர்ந்த எழில்

ஏற்றம் இறைக்கும் இசைநிறை பாட்டுடன்
போற்றும்ஏர் பூட்டிப் புலம்உழுது— நாற்றுநடும்
கண்ணைக் கவரும் கவினுறு காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

மலைவீழ் அருவியும் மாமுகில் போர்த்தக்
கலைவாழ் மலையும் கருத்தில்— நிலைத்திடும்
எண்ணில் அடங்கா இயற்கையின் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

வண்ணச் சிறுகற்கள் வானப் பரப்பினில்
எண்ணற் கரிதாய் எழிர்சிந்த்— பெண்ணணங்காய்
பொன்நிலவு தோன்றிப் பொழிந்திடும் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

அன்னைத் தமிழுக் கணிகலனாய்க் காப்பியங்கள்
முன்னை இலக்கியங்கள் முத்தொளித்து— மின்னிவர
பண்ணார் தமிழ்மகளைப் பார்போற்றும் காட்சியே
என்னைக் கவர்ந்த எழில்

*- புலவர் செ. இராமலிங்கன்*

## இதயத்தின் எடை 5300 கிராம்!

உன்னால் தானடி நேர்முகத்தேர்வில்
நான் தோற்றுப் போனேன்!
அவன் உலக அழகி பெயர் கேட்டான்,
நான் உன் பெயரை சொல்லித் தொலைத்தேன்!

மௌனத்தோடு மட்டுமேப்
பேசிக்கொண்டிருந்த என்னை
மரத்தோடு கூடப் பேச வைத்தவள் நீ!

புத்தகத்தில்,கடிதத்தில்,
மின்மடலில் தான்
கவிதைகள் வரும்!
இப்படி சுடிதாரில் கூட
வருமா என்ன?

நான் எழுதியனுப்பியக்
கவிதையெல்லாம் அழகு என்றாய்!
அழகி, உன்னைப் பற்றி
எழுதியவை பின் எப்படியிருக்குமாம்?

நிலா, பூமியைச் சுற்றுகிறதா?
அடிப்பாவி, பூமியில் இருக்கும் உன்னைத் தானே
அது ஓயாமல் சுற்றுகிறது!
என்னைப் போல..

பொதுவாய்
இதயத்தின் எடை 300 கிராமாம்.
என்னுடையது ஒரு 50000 கிராம்
அதிகமாக இருக்கும்!

*- அழியாத அன்புடன், அருட்பெருங்கோ.*

## தமிழா! உனக்கு என்ன விதி? தணிந்தது போதும், தணல் மூட்டு இனி.

முன்னும், பின்னும் இராணுவத்தின்
மூச்சு மேனியில் படுவதென்ன?
இன்னும் எத்தனை காலங்கள்
இன்னல் சூழ்ந்துயிர் குடிப்பதென்ன?
கண்ணாய் காத்த அத்தனையும்
காடையர் சிதைத்து அழிப்பதென்ன?
அன்னை மேனியைப் துடிக்கவைத்து
ஓட்டுப்படைகள் உவப்பதென்ன?

தமிழா! உனக்கு என்ன விதி?
தணிந்தது போதும் தணல் மூட்டு இனி

ஒன்றே தமிழ்க்குலம் என்ற நிலை
ஒற்றுமை கலைத்துத் திரிவதென்ன?
பேதமை நிறைத்து மனிதர்கள்
மதங்கள் கொண்டு அலைவதென்ன?
வடக்கு, கிழக்கெனும் வாதங்கள்—தமிழ்
வலிமை பிய்க்க நினைப்பதென்ன?
அடக்கு எனும் ஒரு கட்டளையை
அண்ணா இட்டிடச் சுனக்கமென்ன?

தமிழா! உனக்கு என்ன விதி?
தணிந்தது போதும் தணல் மூட்டு இனி

ஈனவும், இருக்கவும் முடியாமல்—தமிழ்
ஈழமே இன்னலில் மாழ்வதென்ன?
கனவுகள் மெய்ப்படும் காலமிதில்
கண்களைக் கட்டிக் கிடப்பதென்ன?
உறவுகள் கலங்கும் போதினிலே
உணர்வுகள் வலிக்க உறைவதென்ன?
அகிலமே குழம்பும் வேளையிது
அமைதி காத்து நடப்பதென்ன?

தமிழா! உனக்கு என்ன விதி?
தணிந்தது போதும் தணல் மூட்டு இனி

நேற்றைய வாகைகள் நிமிர்ந்திருக்க
நடப்பு நகர்வில் நோவதென்ன?
கூற்றுவர் சேனைகள் குலாமிட்டு
ஊர்மனை பறித்து வாழ்வதென்ன?
உலகக் கையின் அளவீட்டில்
ஓரிடம் மட்டும் தாழ்வதென்ன?
உலைக்களப்புலியே! உன் அமைதி
தலைக்கனம் எதிரிக்குத் தருவதென்ன?

தமிழா! உனக்கு என்ன விதி?
தணிந்தது போதும் தணல் மூட்டு இனி

*- வல்வை சகாறா*

## தமிழ்மேல் ஆணை!

தங்கத் தமிழ்மிசை ஆணை! — என்றன்
தாய்நிகர் தமிழக மண்மிசை ஆணை!
சிங்க மறத்தமிழ் வீரர் — எங்கள்
செந்தமிழ்த் தோழர்தம் தோள்மிசை ஆணை!
சங்கு முழக்கி யுரைப்பேன் — நாளைச்
சண்டைக் களத்திலே சாக வந்தாலும்
மங்கிக் கிடக்குந் தமிழை — மீண்டும்
மாளிகை ஏற்றி வணங்கியே சாவேன்!

கன்னித் தமிழ்மகள் தெய்வம்! — அவள்
காதல் அருள்விழி காட்டிவிட் டாளடா!
என்ன சுகமினித் தேவை? — இந்த
எலும்புந் தசையு மெதுக்கடா தோழா?
மின்னி முழங்குது வானம் — இடி
மேகத்தி லேறிவலம் வர வேண்டும்!
தின்னப் பிறந்து விட்டோமா? — அட
செங்களம் ஆடப் புறப்பட்டுவாடா!

நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம்! — இந்த
நிலத்தின் திசைகளனைத்தையும் ஆண்டோம்!
ஆற்றல் மிகுந்த தமிழை — அரி
அணையில் இருத்தி அழகு சுவைத்தோம்!
சோற்றுப் பிறவிகளானோம்! — இன்று
சொந்தப் பெருமை யிழந்து சுருண்டோம்!
கூற்ற மெதிர்த்து வந்தாலும் — இனிக்
கூனமாட்டோ மென்று கூவடா சங்கம்!

தென்றல் தவழ்ந்திடும் மண்ணில் — நாங்கள்
தீயும் புயலும் வலம்வரச் செய்வோம்!
குன்றும் மலையும் நொறுக்கி — இந்தக்
கொடிய உலகம் பொடிபடச் செய்வோம்!
என்றும் இனிய தமிழை — அட
இன்னுயிர் மூச்சை அமுதக் குழம்பை
மன்றம் மதித்திடவில்லை — என்றால்
மக்கள் உலகம் எதுக்கடா தேவை?

கூவும் அலைகடல் மீதும் — பொங்கிக்
குமுறி வெடிக்கும் எரிமலை மீதும்
தாவும் வரிப்புலி மீதும் — எங்கள்
தடந்தோள் மீதுமோர் ஆணையுரைப்பேன்...
நாவும் இதழு மினிக்கும் — இன்ப
நற்றமிழ் மொழிக்கோர் நாடுங் கொற்றமும்
யாவும் உடனிங்கு செய்வோம்! — இந்த
யாக்கை பெரிதோ? தமிழ் பெரிதோடா?

கொட்டு தமிழா முரசம்! — அட
குறட்டைத் தூக்கம் நிறுத்தடா"" என்று
வெட்ட வெளியிடைக் கூவி — என்றன்
விழிக ளெதிரே தமிழ் மகள் வாயின்
பட்டு முறுவல் சுவைத்தேன்! — அவள்
பார்வை எதிரே மறைந்தனள் கண்டீர்!
சட்டென் றுலகில் விழுந்தேன்! — என்றன்
சங்கொலி கேட்டு விழித்தது தானை!

*- உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்*

## காதல் ஒரு...

காதல் ஒரு காவியம்
ஆம்! காவியத்திலே
சோகங்கள் உண்டு

காதல் ஒரு கடல்
ஆம்! கடலிலே
விபத்துக்கள் உண்டு

காதல் ஒரு கவிதை
ஆம்! கவிதையிலே
கற்பனைகள் உண்டு

காதல் ஒரு கானகம்
ஆம்! கானகத்திலே
ஆபத்துக்கள் உண்டு

காதல் ஒரு கற்பனை
ஆம்! கற்பனையிலும்
இன்பங்கள் உண்டு

காதல் ஒரு கற்பூரம்
ஆம்! கற்பூரத்திலே ஒளிகளுண்டு

காதல் ஒரு காற்று
ஆம்! காற்றிலே தென்றல் உண்டு

காதல் ஒரு காவியம்
ஆம்! காவியத்திலே தியாகங்கள் உண்டு

காதல் ஒரு கற்பு
ஆம்! கற்பிலே ஒழுக்கங்கள் உண்டு

காதல் ஒரு காதல்
ஆம்! காதலிலே காதல்கள் உண்டு.

*- இ.லியோன்*

STUART KARATAS SOLICITORS
*Specialist Immigration Law Practice*

- Asylum and Human Rights Appeals
- Judicial Reviews Bail and Detentions
- High Court Appeals Indefinite Leave to Remain Applications Marriage Visas
- Work Permits
- Student Extensions Family Reunion Applications



- அகதிகள் கோரிக்கை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- குடும்பச் சட்டம்
- வர்த்தகச் சட்டம்
- திருமணச் சட்டம்

போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் எம்மை நாடுங்கள்......

1st Floor, 83 Kingsland High Street, Dalston, London, E8 2PB

வழக்குகளில் வெற்றி - நியாயமான கட்டணங்கள்

Contact: **MR. JAMIL TRAWALLY**
Office No: **020 7923 8600**
Emergency Mobile No: **0772 7630 428**

## பாரீஸ்....பாரீஸ்..பாரீர் மலரும் நினைவுகள்.....!

(31ம் பக்கத் தொடர்ச்சி)

அதே நேரம் பல சங்கங்கள் தோன்றி எழுத்தாளர் கலைஞர்களை முண்டு கொடுத்துத் தூக்கிவிட முயற்சித்து சில காலங்களில் அவர்களையே தூக்கிவிட ஆள் இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. பொதுமக்களின் ஆதரவு இல்லாத போதிலும் தனிப்பட்ட முயற்சிகளால் இலக்கியத்தில் பல சாதனைகள் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினால் ஒரு சிறு கதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டிருந்தது. கலைஞர்களாக சாம்ஸன் எஸ்.துரை, குணபாலன் போன்றவர்கள் அடையாளங் காணப்பட்டிருந்தார்கள். அருந்ததி எனப்படும் அருள் மாஸ்ரர், கருணாநிதி, காந்தி நேசன், சுகன், ஓசை மனோ என்போர் எழுத்தாளர்களாக களமிறங்கியிருந்தார்கள் இன்னும் பலர் இருந்திருக்கலாம். என் நினைவில் இருப்பவர்கள் என்ற வகையில் இந்தப் பட்டியல் முழுமை பெறாது என்ற போதிலும் சிலரைப் பற்றியாவது சொல்ல முடிந்தது என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சியே. மெய்கண்டான் அச்சகம் என்ற ஒன்றை உருவாக்கி அச்சுத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரி என அழைக்கப்படும் அரியசிங்கம் எல்லாம் தமிழ் வளர்க்கும் முயற்சிக்கு ஊக்கமளித்தவர்கள். அதே நேரம் கொல்வ்நகைமாளிகை மோகன் கமலா அண்ட் பிரதர்ஸ் என்று 'சிந்து' மாத சஞ்சிகையாக வெளிவருவதற்கு ஆதரவளித்த வர்த்தகர்களையும் நினைவு கொள்கின்றேன்.

அதே வேளையில் சைவப் பெருமக்களின் நம்பிக்கைகள் புதுப் புதுக் கோயில்களை உருவாக்கும் முயற்சியிலும் பேஸ்மெண்டுகளை வாடகைக்கு எடுத்து ஜோராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஓபவில்லியர்ச்ஸில் ஒரு பிள்ளையாரும் பெல்வில் பக்கத்தில் இன்னுமொரு கோயிலும் கொடி கட்டிப்பறக்கத் தொடங்கியிருந்தன. ஒரு முறை சனீஸ்வர பகவானுக்கு எள்ளெரிக்கப் போய் பேஸ்மெண்ட் கொள்ளா புகை மண்டலம் வீதியில் போவோரையும் படுத்தி எடுத்தது சுவையான ஒரு கதை.

பாரீஸில் இரவுக் கழியாட்டங்களுக்குப் பேர் போன பகுதியாக பிகால் அன்வேஸ் பகுதிகள் இருந்தது. புகழ் பெற்ற மூலன் றூச்ஸ் அந்தப் பகுதியிலேயே இருந்தது. குறைந்த வாடகைக்காக அந்தப் பகுதியிலே குடியிருந்து அந்தப் பெண்களிடம் கைக்காசையும் தொலைத்த நம்மவர்களின் கதைகளும் சுவையாக உலா வரும். அதே நேரம் வைற் சேர்ச் எனப்படும் மாதா கோவில் அங்கேயே இருந்தது. ஞாயிறு மாலைகளில் சமய வேறு பாடில்லாது நம்மவர்கள் சென்று வழிபடும் இடமாகவும் அது இருந்தது. அதை விட்டால் பக்தியாத்திரை சக உல்லாச யாத்திரையாக தமிழ் மக்களுக்கு விளங்கிய இடம் பிரான்ஸின் தென் மேற்குப் பகுதியில் இருக்கும் போர்ட்தோ என்ற பெரு நகருக்கு அண்மித்தாயிருக்கும் லூர்ட்ஸ் மாதா கோவில்.

இதை விட்டால் சினிமாக் கலைஞர்களை இறக்குமதி செய்து காசு பார்க்கும் முயற்சிகளும் வெகு ஜோராகக் களை கட்டியிருந்தது. நடிகை மீதுள்ள கிறக்கத்திலும் உள்ளே இறங்கிய மதுவின் மயக்கத்திலும் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலிகளையே கழட்டிப் போட்டு விட்டு பின்னர் எல்லா மயக்கங்களும் போன பின்னர் கதறியழுத இரசிகர்களையும் நான் கண்டிருக்கின்றேன். இப்படியான இரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்தவென்றே நடிகர்களையும் நடிகைகளையும் இறக்கிப் படம் காட்டுவதில் முன்னின்றவர்கள் பலர்.

இப்படி எத்தனையோ கதைகளையும் சுவைகளையும் இன்றும் என் மனிதில் தாலாட்டி நினைவூட்டி வரும் பாரீஸ். அழகும் அறிவும் நிறைந்தவொரு அற்புத நகரம். அலெக்ஸாண்டர் டுமாஸ் போன்ற சிறந்த அறிஞர்களை இந்த உலகுக்குத் தந்து பெருமை கொண்ட மண்ணில் தமிழனின் சரித்திரம் பதிக்கும் காலம் இப்போது என்ற அளவில் எமக்கெல்லாம் பெருமையே.

## சி. புஸ்பராசாவின் ஈழப் போராட்டத்தில்....

(32ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகென்ன ஆத்திலை போட்டு குளத்திலை எடுத்தது மாதிரி அடுத்தநாள் பத்திரிகைகளில் புலோலியில் காணாமல் போன நகைகள் மருதானையில் மீட்கப்பட்டது என்று தலைப்பு செய்திகளில் வெளிவந்தது. அதுமட்டுமல்ல அந்த கொள்ளையில் சம்பந்தபட்ட அனைவரும் பாலகுமாரும் கைதாகி சிறைகளில் அடைக்கபட்டனர். ஆனாலும் கொள்ளை போன நகைகளில் அரைவாசியே நகைகளே மீட்கப்பட்டது. கொழும்பிற்கு கொண்டு வரும்போது புஸ்பராசா வீட்டிலே கொஞ்சம் காணாமல் போனதாகவும் பின்னர் தவராசாவின் பொறுப்பில் இருந்த சமயம் கொஞ்சம் காணாமல் போனதாகவும் கொள்ளையில் சம்பந்தபட்டவர்கள் பின்னர் குற்றம் சாட்டினர்.

ஆனால் அதற்கும் தங்களிற்கும் சம்பந்தமில்லை காவல்துறை அதிகாரிகளே பாதியை அள்ளிவிட்டு மீதியை நீதிமனறத்தில் ஒப்படைத்தனர் என்று புஸ்பராசா குடும்பத்தினரும் தவராசாவும் தங்கள் மீதான குற்றசாட்டை மறுத்தனர். ஆனால் இங்கு யார் எவ்வளவு எடுத்தனர் என்று ஆராய்வது இந்த கட்டுரையின் நோக்கம் இல்லையென்பதால் அடுத்த தொடரில் புஸ்பராசா தனது புத்தகத்திலும் மற்றும் புலத்திலும் மாற்று கருத்தாளர்கள் என்று தங்களை இனங்காட்டுபவர்களும் இன்னொரு முக்கிய கொலை சம்பவத்தையும் திருப்ப திருப்ப புலியின் வாலில் கட்டி விட துடிக்கின்றனர் அது யாழ் பல்கலை கழக விரிவுரையாளர் ரயனி திரணகம. எனவே அடுத்த பாகத்தில் ரயனியையும் திரணகமவையும் பார்ப்போம்.

## என் ஞாபகப் பதிவிலிருந்து...

(34ம் பக்கத் தொடர்ச்சி)

நடையாய் நடந்தனர். ஆனால் அப்படி ஒருவனைத் தாங்கள் காணவே இல்லை என்று சொல்லி அனுப்பினார்கள். இவனது அம்மா கண்ணீரோடு தன் மகனை யாராவது கண்டீர்களா என எங்கள் ஊரவர்களைக் கேட்டழுத ஞாபகம் என் கண்களுக்குள் ஓடிவந்தது. என்னையறியாமலே எனது கண்கள் கண்ணீரில் நனைகிறது.

இந்த இளைஞன் அவர்களுக்கு என்ன செய்தான்? இவனை ஏன் கொன்றார்கள்?

இவன் எதற்காக இந்த எருக்கும்பிப் புழுக்களுடன் வீசப்பட்டான்? விடைதெரியா வினாக்கள் அவை எண்ணத் திரையில் விழுந்து மறைந்தது வாழும் வயதில் உயிர் வேர் பிடுங்கப்பட்ட இவனின் சாவைச் சொல்லவே ஒலிக்க வைக்கப்பட்டது. முந்தநாள் கற்கரையான் பெரியமணி 3 தரம் கோவில்க் குருக்களால் ஒலிக்க அவர்கள் பணித்ததன் பொருள் இந்தச் சாவு?

சாதி சொல்லி காத்திரம் சொல்லிக் கோயிலின் உள்ளே அந்தச் சாதி போகக் கூடாது இந்தச் சாதி போகக் கூடாது என்ற என் ஊர்ப் பெரிசுகள் பலதின் வாய்கள் அன்று ஏன் மௌனமாகி நின்றது? எவனோ எங்கேயோ இருந்து வந்தவன் கோவில் முழுவதும் துவளமாடித் திரிந்து கோவிலுக்குள்ளேயே கொலையும் செய்து விட்டுப் போய்விட்டான். இதற்கு எந்தக் கத்தியை எடுப்பார்கள்?

சற்றே நேரத்தில் கற்கரையான் சாட்சியாகக் கொல்லப்பட்டுக் கற்கரையான் இரவில் உலாவுவதாகச் சொல்லப்படும் அந்தத் தோட்டவெளியில் அந்த அப்பாவி இளைஞனின் உறவுகளின் அழுகை அந்த மாலைக்காற்றோடு கலந்து ஒரு சீவனின் சாவை ஊரெங்கும் சொல்லிக்கொண்டது.

வாழைக்குலை விற்று விட்டுப் பணத்தோடு வருவான் எனக் காத்திருந்தவர்கள் முன் அவன் பிணமாய்க் கிடந்தான். அவனது வாழைக்குலைச் சயிக்கிள் இனி எங்கள் ஊரால் வராது... அவனும் இனி வரமாட்டான்.... இனி அவன் ஒருபோதும் வரவேமாட்டான்.....


"Achieving the best price"

LINK UP
RATHY PROPERTIES




விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லம் வேண்டுமா?

*Selling homes locally to you in :*

**Wembley, Alperton, Sudbury, Kingsbury Harrow and Surrounding area**

FindaProperty.com

*Free market Appraisals*

*Colour glossy brochures for all properties*

*Distinctive local advetisement*

*links to dedicated conveyancing service*

*feedback on all viewings within 24 hrs*

*Personal & Professional services at all times*

LINK UP International

Even thought of owning a dream home abroad!
Spain / France / Florida / Caribbean
Call your local LINK UP office for futher details

12 Ealing Road, Wembley, Middlesex, HA0 4TL **Tel.: 020 8903 0325,**
**e-mail:rathy.linkup@btconnect.com** Opening Hours: Mon-Fri:9am-630pm, Sat:9am-3pm
**web:www.linkupproperties.co.uk, findaproperty.co.uk, hotproperty.co.uk**

# பெட்டிசம்

போடுகிறார்

– பெருமாள்சாமி

## தான் ஆடாவிட்டாலும்

மன்னிக்கோணும் பாருங்கோ....

சின்ன இடைவெளி ஒண்டு விட்டிட்டன். பெட்டிசன் எழுதவெண்டு பேனையும் பேப்பருமாய்க் குந்தேக்க....

காதில விழுந்தது குண்டு. அதுதான் முல்லையில விழுந்த குண்டுகள் பாருங்கோ. பள்ளிப் பிள்ளையள் சிதறிச் சாகேக்க... என்னத்த எழுத? மனம் கலைஞ்சு போச்சுது.

பெட்டிசன் எழுத கணக்கக் கிடக்கு. இப்ப ஒண்டத்தான் எழுதப் போறன்.

என்ரை அன்பிற்குரிய மகாசனங்களே...

வெளிநாடுகள் எண்டு நாங்கள் ஒண்டும் சொர்க்கபுரியில வாழேல்ல.. ஒரு வகையில கனபேர் அன்றாடம் காய்ச்சிகள்தான். மாதம் உழைச்சாத்தான் வருமானம் வாடகை எல்லாம். 2 மாசம் வேலை இல்லையெண்டா யோசியுங்கோ எங்கட நிலைமையள..

இதுக்குள்ளதான் தாயகத்தைப் பற்றி கவலைப்பட்டா என்ன.... களியாட்டம் கொண் டாட்டம் எண்டு மனசை மகிழ்ச்சிப்படுத்தினா என்ன... எல்லாம்.

தானாடாவிட்டாலும் சதை ஆடும் எண்டு சொல்லுவினம் பாருங்கோ....

இங்க நாங்கள் பட்டுமெத்தையில படுத்துக் கிடந்தாலும் மனம் என்னவோ ஆட்டம் கண்டுதான் கிடக்குது. இதுக்குள்ள களியாட்டம் கொண்டாட்டம் எண்டு மகிழ்ச்சியளைத் தேடிப் போகேலாது பாருங்கோ. இதுகளக் காசுக்காக நடத்திறவையும் கொஞ்சமெண்டாலும் யோசிச்சிருக்கலாம். அவையள நாங்களும் கூட யோசிக்க வைக்கலாம் பாருங்கோ.

குளிர் நாட்டில வாழுற எங்களுக்கு கோடை எண்டாலே கொண்டாட்டந்தானே. கனக்கப் பிளானுகளோடதான் நாங்கள் கோடைய எதிர்பார்த்ருப்பம். நினைச்சமாதிரி எல்லாம் நடக்குமே? இந்தக் கோடையில ஏகப்பட்ட இழப்புச் செய்தியள். தாயகத்துக்காரருக்கும் எங்களிட்டடை இருந்து எதிர்பார்ப்புகள்.

எங்களால செய்ய வேண்டியதைச் செய்ய முடியேல்லை எண்டாலும் நாங்கள் எப்பையும் உங்களுக்கு ஆதரவா இருக்கிறம் எண்ட நம்பிக்கையை தாய்நாட்டுச் சனத்துக்கு நாங்கள் குடுக்கலாம் எல்லே. பாகிஸ்தான் காரன் குண்டு போடுற பிளேன ஓட்டேக்க... நாங்கள் பாகிஸ்தான் பாட்டுக்காரனைக் கூப்பிட்டு மேடையில ஆடவிடுற செய்தியை அந்தச் சனங்கள் கேள்விப்பட்டால் எவ்வளவு வேதனைப்படுவினம்.

சில விசயங்கள நேரகாலம் அறிஞ்சு செய்ய வேணாமே.

எப்பிடி எண்டு யோசிக்கிறியள்?

வெளிநாடுகளில வாழுற நாங்கள் எவ்வளவு காசை இலங்கை வங்கியில போட்டு வைச்சிருக் கிறம் தெரியுமே. இதைவிட கொழும்பில புதிசுபுதிசா முதலீடுகள் வேறை. வீடு வாங்கி விடுறவையும், பிளாட், காணி வாங்கி விடுற வையும் எக்கச்சக்கம். எயர்லங்காவுக்கு நாங்கள் குடுக்கிற காசே பல பில்லியன் டொலர் வரும். இதை விட ஸ்ரீலங்கா இற க்குமதிச் சாமான்களுககு நாங்கள் குடுக்கிற மதிப்புப் பெரிசு பாருங்கோ. அங்கர் பால்மா இல்லையெண்டால் எங்களில சிலர் பாலே குடிக்க மாட்டினம். லெமன்பொப் பிஸ்கட் சாப்பிடாட்டி சிலருக்கு பத்தியப்படாது. லக்ஸ் இல்லையெண்டா சிலருக்கு அழுக்கே போகாது. இப்பிடி நாங்கள் ஸ்ரீலங்காவில இருந்து வாங்கிற சாமான்கள்தான் ஸ்ரீலங்காவுக்கு பெரிய வருமானம் பாருங்கோ.

சுருக்கமாச் சொன்னா ஸ்ரீலங்காவின்ற மிகப்பெரிய சந்தை புலம்பெயர்ந்த தமிழர் நாங்கள்தான். எங்கடை காசு ஸ்ரீலங்காவின்ர வருமானத்தில கணிசமான பங்கு பாருங்கோ.

இதுகளைக் கட்டுப்படுத்த புது வழியளத் தேட வேணும் கண்டியளோ?

மகிந்தான்ர சிந்தனை தமிழ்ச் சனத்தை முடிக்கிறதுதான் எண்டுறது நல்லாத் தெரிஞ்சு போச்சு. இவன் பள்ளக்கூடமாத் தேடித்தேடி குண்டுகள் போடப்போறான். மண்ணுக்கும் மக்களுக்கும் பேரழிவு ஒண்ட இவங்கள் செய்யப் போறாங்கள். உந்த உலக நாடு களுக்கு விடுப்புப் பாக்கிறதும், அறிக்கை விடுறதும்தான் வேலை.

எங்கட சனத்தை நாங்கள்தான் காப்பாத்த வேணும். அந்த மக்களக் காப்பத்திறதும் அழிவுக்குப் பின்னால நாட்டைக் கட்டி எழுப்புறதும் நாங்கள்தான் செய்யவேணும் கண்டியளோ. இதுவரைக்கும் நாங்கள் செய்ததைவிட இனிச் செய்யப்போறது கொஞ்சம் பெரிய வேலையாயும் இருக்கும். ஆனா செய்யத்தான் வேணும்.

ஒரு கனடாத் தமிழன் சொன்னது நேற்று என்ர காதில விழுந்தது. கேக்க சந்தோசமா இருந்தது.

'அழிவுக்குப் பிறகு எங்கட மக்கள நாங்கள் தான் காப்பாத்த வேணும் எண்டா நான் என்ர வீட்டையும் வித்து காசைத் தருவன்.'

இப்பிடி ஒவ்வொருத்தரும் நினைச்ச மெண்டா....

ஆருக்கும் அடிபணியாம நம்மட நாடு நாளைக்கு நிமிந்து நிற்கும்.

400 வருசத்துக்குப் பிறகு உலகத்தில தமிழன் தலை நிமிர்ந்தான் எண்ட சரித்திரம் எங்கட தலைமுறையில எழுதப்படவேணும் எண்டா

எழும்புங்கோ எல்லாரும்.

எங்களுக்காக தமிழ்நாடு, மலேசியாத் தமிழர் எல்லாரும் எழும்பிட்டினம்.

சிலதுகளுக்கு இதுதான் நேரம்.

அப்ப... நீங்கள் ரெடியோ.... கவனமா அவதானியுங்கோ...

சிக்னல் கெதியா வரும்.

நாங்கள் அடுத்த பெட்டிசனில சந்திப்பம்..

அன்புடன்

*பெட்டிசன் பெருமாள்சாமி.*

# வானவில்லே... வானவில்லே...



இயற்கை அளிக்கும் அற்புதமான காட்சி வானவில். வயல்வெளியாக இருக்கிற இடத்தில் வானவில் தெரியுமானால் அதை முழுதாகப் பார்க்க முடியும். வானவில்லின் பெயரை வைத்து வானில் உண்மையாக பல வண்ணங்களில் வில் போன்று ஏதோ உண்டாவதாக நினைத்தால் அது தவறு. நீங்கள் நிலைக் கண்ணாடி முன்பாக நின்ற ால் எதிரே உருவம் தெரிகிறது. ஆனால் அது வெறும் தோற்றமே. கிட்டத்தட்ட அது போன்ற துதான் வானவில்லும்.

இன்னொன்று. வானவில்லை நோக்கி நீங்கள் நடந்தால் ஒரு கட்டத்தில் அது உங்கள் தலைக்கு மேலே தெரியும் என்று நினைத்தால் அதுவும் தவறு. காலையில் வெயில் இருக்கும்போது உங்கள் கிராமத் துக்கும் அடுத்த கிராமத்துக்கும் நடுவே மழை பெய்கிறது. அப்போது நீங்கள் வானில் வானவில்லைக் காண்கிறீர்கள். மழை பெய்கிற இடத்துக்கு அப்பால் உள்ள பக்கத்து கிராம வாசிகளுக்கு இந்த வானவில் தெரியாது.

வானவில் என்பது குறிப்பிட்ட சூழ்நிலை களில்தான் தென்படும். முதலாவதாக சூரியன் கிழக்கே (அல்லது மேற்கே) அடிவானில் அல்லது அடிவானத்துக்கு சற்று உயரே இருக்க வேண்டும். அந்த சமயத்தில் எதிர்த் திசையில் மழை பெய்ய வேண்டும். அப்போது தான் வானவில் தெரியும். அதாவது நீங்கள் நடுவே இருக்க, ஒரு புறம் வெயிலும் மறுபுறம் மழையும் இருக்க வேண்டும். அப்படியான சமயத்தில் பெய்கின்ற திசையில் வானவில் தோன்றும். நீங்கள் இருக்கின்ற இடத்தில் சூரியனே தெரியாத வகையில் வானை மேகங்கள் சூழ்ந்திருந்தால் வானவில் தோன்றாது. எல்லாவற்றுக்கும் மேலாக சூரியன் நடுவானில் இருந்தால் வானில் வானவில் தோன்றாது.

முப்பட்டகம் எனப்படும் முக்கோண வடிவிலான கண்ணாடித் துண்டு வழியே சூரிய ஒளிக்கற்றை பாய்ந்து செல்லும்படி செய்தால் சுவரில் 7 வண்ணங்கள் தெரியும். வெண்மையான சூரிய ஒளிக் கற்றையை முப்பட்டகம் இவ்விதம் 7 வண்ணங்களாகப் பிரிக்கிறது. ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், இளம்சிவப்பு, சிவப்பு ஆகியவை அந்த 7 நிறங்களாகும். இதை நினைவில் வைத்துக்கொள்ள ஏஜஊபுலுமுசு என்று சொல்வது உண்டு.

மழை பெய்யும்போது ஒவ்வொரு மழைத் துளியும் கிட்டத்தட்ட கோள வடிவில் இருக்கும். எதிர்ப்புறத்தில் இருந்து வருகின்ற சூரிய ஒளிக் கற்றைகள் இந்த மழைத் துளிகள் வழியே பாய்ந்து செல்லும்போது ஒவ்வொரு துளியும் முப்பட்டகம் போல செயல்பட்டு சூரிய ஒளிக் கற்றையை 7 வண்ணங்களாகப் பிரிக்கிறது. இதன் விளைவாகவே வானவில் தெரிகிறது.

சில சமயங்களில் வானில் இரட்டை வானவில் தெரியும். அவ்வித நிலைமைகளில் பிரதான வானவில்லுக்கு மேற்புறத்தில் துணை வானவில் தெரியும். இந்த இரு வானவில்களுக்கும் இடையே சிறிது வேறுபாடு உண்டு. பிரதான வானவில்லின் நிறங்கள் அழுத்தமாகத் தெரியும். தவிர, வானவில்லின் வெளிப்புறத்தில் சிவப்பும் அடிப்புறத்தில் ஊதாவும் தென்படும். துணை வானவில்லில் இதற்கு நேர் மாறாக வெளிப்புறத்தில் ஊதாவும் அடிப்புறத்தில் சிவப்பும் தெரியும். பிரதான வானவில் அடி வானத்தில் இருந்து 40 முதல் 42 டிகிரி உயரத்திலும் துணை வானவில் 50 முதல் 52 டிகிரி உயரத்திலும் தெரியும்.

பௌர்ணமியாக இருந்தால் இரவிலும் வானவில் தென்படலாம். ஆனால் மேற்கூறியது போல சந்திரன் அடிவானத்துக்கு சற்று மேலே இருக்கிற சமயத்தில் எதிர்ப்புறத்தில் மழை பெய்தால் வானவில் தெரியும். சந்திரனின் ஒளியானது சூரியனிடமிருந்து பெறப்பட்ட பிரதிபலிக்கப்பட்ட ஒளி என்பதால் அந்த வானவில் மங்கலாகத் தெரியும். இரவில் வானவில்லைக் கண்டுள்ளதாக கிரேக்க மேதை அரிஸ்டாட்டில் எழுதி வைத்துள்ளார்.

பௌர்ணமி இரவில் அபூர்வமாகத் தெரிகிற வானவில்லை படம் பிடித்துள்ளவர்கள் பலர் உண்டு. சிலர் இதை சுயகைடிழற என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக ஆழழடிழற என்று குறிப்பிடுகின்றனர். சூரியன் மேற்கே அஸ்தமிக்க, பௌர்ணமி சந்திரன் கிழக்கே உதித்த சமயங்களில் (மேற்கு வானில்) இவ்விதம் இரவு நேர வானவில்லைக் கண்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு வட்டத்தின் ஒரு பகுதியே வில் (புசஉ) எனப்படுகிறது. அந்த வகையில்தான் வானவில்லுக்கு அப்பெயர். நாம் வானவில்லாகக் காண்பது அரை வட்டமாகும். எனினும் முழுவட்ட வானில் என்பதும் இருக்கத்தான் செய்கிறது. விமான ஓட்டிகள் சிலர் தாங்கள் வானில் இருந்தபடி கீழே முழுவட்ட வானவில்லைக் கண்டுள்ளதாக கூறியுள்ளனர். அந்த வகையில் கீழே பூமியில் இருக்கிற யாரும் முழுவட்ட வானவில்லைக் கண்டிருக்க முடியாது.

எனினும் மலைப் பகுதியில் உயரமான இடத்தில் இருந்தபோது கீழே பள்ளத்தாக்குப் பகுதியில் -பகல் நேரத்தில் -முழுவட்ட வானவில்லைக் கண்டுள்ளதாக ஒரு நிபுணர் குறிப்பிட்டுள்ளார். இதை வளைய வானவில் என்று வர்ணிப்பது பொருத்தமாக இருக்கும்.

**Quotation / cover provided over the phone**

No more proposal forms to complete

No more immediate payment

No more Direct Debit Mandate to complete

No more claim form to fill - All the details are taken over the phone.

But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover

Please ring us for a friendly service **020 8763 2221**

**P.SRINIVASAN** 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH

PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS

Fax: 020 8763 2220

E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

**Home Insurance**

Building and Contents Insurance including Let Properties

**Term Assurance / Critical Illness**

Level Term, Mortgage Assurance and Family Income Benefits

**Retailer, Shopkeepers & Liabilities**

All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.

**Mortgages / Re-Mortgages -**

**Decision in Principle/Virtual offer over the phone**

All types of mortgages including Self-cert and buy-to-let.

All circumstances will be considered

ARM Associates

FSA Financial Services Authority

Authorised and Regulated by the Financial Services Authority

# அறுவைப் பக்கம்

## தமிழகத்தில் பெப்சி, கோக கோலா குளிர்பானங்களுக்குத் தடை



சென்னை, பெப்சி, கோக்கக்கோலா போன்ற குளிர்பானங்களுக்கு தமிழகத்தில் தடை விதிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. சி. ஞான சேகரன் இது குறித்து பிரச்சினை எழுப்பினார்.

முதல்வர் பதில்: தடை கொண்டு வருவதில் அரசுக்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், தமிழகத்தில் தடை விதித்து பக்கத்து மாநிலங்களில் விற்பனை நடந்தால் என்ன செய்ய முடியும்? எனவே, இந்தியா முழுக்கத் தடை வந்தால் அதை ஆதரிக்க இந்த அரசு தயாராக உள்ளது என்றார் முதல்வர்.

அடடா என்ன ஒரு பாசம் தமிழினத் தலைவருக்கு கோக் கம்பெனி மேல பக்கத்து மாநிலத்தில் விற்றால் என்ன அவன் அவன் அங்க போயி குடிச்சிட்டு தமிழ்நாட்டுக்கு வரவா போறான்.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் இதன் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. இன்னிக்கு கேரளாவுல தடை செஞ்சி இருக்காங்க.

நம்ம தமிழினத் தலைவர், அம்மா, வைகோ, காமராஜர் ஆட்சி அமைக்க அரும்பாடு பட்டு இருக்கிற காங்கிரஸ், நம்ம தமில் தலைவரு கேப்டன், தமிழ் டையரில் திரைப்படத்திற்கு பேரு வைக்க சொல்லி தமிழ் நாட்டில் துடைப்பம் மற்றும் செருப்பு விற்பனையை பெருக்கும் தமிழ் குடிதாங்கி, சிறுத்தை திருமா, அட நம்ம அந்நிய கம்பெனி எதிர்ப்பு கம்யூனிஸ்டு கட்சி முதல் கொண்டு பக்கத்து கிரகத்துல ஒரு பிரச்சனை அப்படின்னாலும் மறியல் பண்ற லெட்டர் பேட் கட்சி தலைவர்கள் வரை தமிழ் நாட்டுல இதை எதிர்த்து ஒருத்தன் வாய் திறக்க வில்லை. ஒரு வேளை எல்லார் வாயிலும் கோக், பெப்சி கம்பெனிகாரன் குடுத்த காசை கவ்விட்டு இருக்காங்களோ?

நாளைக்கே இதை எல்லா மாநிலங்களிலும் தடை விதிச்சிடாலும் நம்ம தலைவரு என்ன சொல்வாரு பாரடா கண்மனி பாகிஸ்தானில் விக்குறாங்க, அமெரிக்காவில் விக்குறாங்க எனவே உலகம் முழுவதும் தடை விதித்தால் இந்த அரசு அதை ஆதரிக்க தயாராக உள்ளது அப்படின்னு சொன்னாலும் சொல்லுவாரு.

அட எங்கப்பா போனாரு நம்ம சிவமைந்தரு சூரியா, ஓ அவுரு கல்யாண வேலையில பிசியா இருப்பாரு. அட அது தான் கம்பெனிகாரனுங்க ஏற்கனவே கேமிரா முன்னாடி குடிச்ச கோக்குக்கு காசு வந்தாச்சி எவன் எக்கேடு கேட்டா எனக்கு என்ன? ஜோதிகாவை கட்டிகிட்டோமா பெப்சிக்கு தடை விதிச்சா கப்சியை குடிச்சிட்டு ஆடலாம்.

நம்ம இளைய தளபதியை கூட காணோம் ஓ அவரு அடுத்த படத்துக்கு கதையை எந்த மொழியில இருந்து பண்ணலாம் இல்லாட்டி எந்த இடம் பிரியா இருக்கு ஒரு மண்டபத்தையோ ஷாப்பிங்க காம்ப்லக்சையோ அப்படின்னு பிஸியா இருப்பாரு.

அட இன்னொருத்தர் உப்பிட்ட தமிழ் மண்ணை மறக்க மாட்டேன்னு இருந்தாரே ஓ அவரு மறக்க மாட்டேன் அப்படின்னு தானே சொன்னாரு குரலு குடுப்பேன்னா சொன்னாரு அப்ப 'தமிழ்நாட்டை அந்த ஆண்டவனாலேயும் காப்பாத்த முடியாதுன்னு சொன்னது' ஹி... ஹி... அது எலெக்ஷனுக்கு முன்னாடி அடுத்த எலெஷனுக்குத்தான் இன்னும் 5 வருசம் இருக்கு இல்ல அது சரி.

நம்ம உலக நாயகனை எங்கப்பா காணோம் அவரு இதுல எல்லாம் தலையிட மாட்டாரு கருத்து மட்டும் தான் சொல்லுவாரு அதும் பிரச்சனை எல்லாம் முடிஞ்ச பின்னாடி. நம்ம தங்கரு அவரு பொண்ணுங்க பிரச்சனை அப்படின்னா தான் செருப்பு, துடைப்பம் அப்படின்னு மொத்தமா ரெடி பண்ணுவாரு. அம்மாக்கு ஓட்டு போட சொன்ன நம்ம சிம்ரானு அவங்க புருஷன் கூட நடிக்க சான்ஸ் தேடிட்டு இருப்பாங்க.

நம்ம பாடிபில்டரு சரத்து எங்கடா காணோம் இது என்ன நாடார் பிரச்சனையா என்ன இல்ல பொண்டாட்டி சிங்கப்பூரில் ஆரம்பிக்க போற டி.வி கம்பெனிக்கு பிரச்சனையா, அப்படின்னா கட்சி மாறலாம்(பணம் வாங்கிட்டு தான் சும்மா மாற நான் என்ன சுப்பனா?) இது மாதிரி சப்பை மேட்டருக்கு எல்லாம் நாம எதுக்கு அலட்டிகணும்.

அப்பாவி தமிழன் 'அய்யையோ அப்ப எனக்காக குரலு குடுக்க தமிழ்நாட்டுல யாரும் இல்லையா?' அடடா தம்பி நீ முழிச்சிகிட்டியாடா இது தப்பாச்சே. தாய்குலமே அண்ணாமலை சீரியல்ல ராதிகாவை யாரோ அடிச்சிடாங்களாமே சித்த என்னானு போயி பாருங்க. திரும்பி பாத்தா யக்கா உன்னைய அடிச்சிடாங்களா உனக்கே இந்த நிலைமையா அப்படின்னு குரலு சரி சரி பொட்டி முன்னாடி போயி அழுங்க.

யப்பா ஒரு வழியா தாய்குலங்களை ஒட்டியாச்சி. தந்தை குலம் இருக்கா, அங்க என்னான்னு பாருங்க சிவாஜி பட பேனர் ஏதோ ஒட்டுறாங்க போல. திரும்பி பாத்தா பாதி தந்தை குலத்தை காணோம் பால் கேனோட பேனரை நோக்கி ஓடிட்டு இருக்காங்க.

மீதி பேருக்கு ஏய் அங்கட்டாரு டாஸ்மார்க் கடையை திறந்துட்டாங்க போல. சொல்லி முடிக்க கூட இல்ல கிரிடிட் கார்டுடன் மிச்ச மீதி இருந்த கும்பலும் காலி.

ஒரு நாலு அஞ்சி குட்டிஸ் நின்னுட்டு இருக்காங்க அய்யையோ இவங்களுக்கு உண்மை தெரிஞ்சா நம்ம கொள்ளுப் பேரன் ஆட்சிக்கு வரமுடியாதே என்ன பண்ணலாம். டேய் வீட்ல போயி வீட்டு பாடம் செய்யுங்கடா இல்லாட்டி நாளைக்கு முட்டி ஒடைஞ்சிடும். உடனே மம்மிமிமிமினுனு ஒரு குரலோட மொத்த இடமும் காலி. வாழ்க சனநாயகம்.

- *சந்தோஷ்*

## புலம்பெயர் புலம்பல்

எல்லாருக்கும் வணக்கம்! இந்த விசயத்தை கனதரம் எழுதியாச்சு இருந்தாலும் எழுதச் சொல்லி மனசு உலுப்புது. இதை எழுதின உடன என்னத் தேசத் துரோகி எண்டோ தமிழ்த் துரோகி எண்டோ சொல்லிப் போடாதேங்கோ, மற்றது அது உங்கட பிரச்சனை! என்ர பிரச்சனை என்னண்டா, ஏன்தான் இந்தப் புலம்பெயர் தொலைக்காட்சி எல்லாம் சீரியல் சீரியலா போட்டுத் துலைக்குது. எண்டு தெரியேல்ல, ஒருவேளை இங்க நிகழ்ச்சிகள் செய்யிறதுக்கு கலைஞர்கள் இல்லப் போல. அதுக்காக சீரியலப் போடுறதே.

எங்கட மனம் ஒரு கொம்பியூட்டர் மாதிரி, ஒண்டத் தூக்கிப் போட்டம் எண்டா பிறகு அது உள்ளுக்க பதிஞ்சு போடும். விளங்கேல்லையே, சரி இங்க ரில்லில (Tili) காசு அடிக்கிறது சாதாரண விசயம், பிழை இல்லாதது மாதிரி சாடையா வந்திட்டுது. ஏன்? எல்லாரும் செய்யிறாங்கள்தானே எண்டு மனசில விழுந்திட்டுது இனி அது சாதாரணம், ஏனெண்டா நாங்கள் வேற நாட்டிலதானே இருக்கிறம் எதுவும் செய்யலாம் எண்ட நினைப்பு,

அதாலதான் சொல்லுறன் ஒரு விசயம் பதிஞ்சு போட்டுதெண்டா அது பிறகு சாதாரணம். இப்பிடி கனக்க இஞ்ச ஏற்கனவே எங்களிட்டக் கிடக்குது இன்னும் சில விசயங்களில நாங்கள் மாறேல்ல. Bankகில போய் கியூவில நிண்டா ஒழுங்கா நிப்பம் அதே நாங்கள் போய் கோயிலுக்குள்ள அன்னதானம் எண்டா. . .? இதுக்குமேல நான் எழுதவும் வேணுமே. கறுமம் நாங்கள் காட்டுச் சனங்களாக் கன இடங்களில இன்னும் நடக்கிறம். இந்தச் சீத்துவத்துக்குள்ள சீரழிஞ்ச சீரியல் வேற! நம்பிக்கைத் துரோகம், களவு, கள்ளக் கலவி, வன்முறை எண்டு சொல்லக் கூடிய விசயத்தைத்தான் 99% சீரியலும் சொல்லுது. ஆனால் உதப் பற்றி ஆர் அக்கறைப்பட்டது? முன்னுக்கு இருந்து மூக்குச் சிந்திக் கொண்டு பாக்கிதுகள்.

நாசமாப் போனதுகள். அண்டைக்கு ஒரு கலியாண வீடு, சினேகிதனோட போறன் அவன் என்னட்ட முதல் சொன்ன வார்த்தை 'செமபிகர் மச்சி'. ஆரை? மணப்பொம்பிளைய. அவனுக்குத் தூசணத்தால ஏசி சாப்பிடத்தானே வந்தனாங்கள் அதை மட்டும் செய்வம் எண்டு போட்டு வந்தன். 'செமபிகர் மச்சி' எங்கட நாட்டில எந்தப் பிரதேசத்துக்கு உரிய வட்டார வழக்கு இது எண்டு ஆராவது சொல்ல முடியுமோ?

எங்க இருந்து இதெல்லாம் வருது நல்ல விசயத்தை விட நாகரீகம் இல்லாத விசயங்கள்தான் உடன உள்ளுக்க பதியுது, இந்தக் கொம்பியூட்டரில வைரஸ் பிடிக்கிற மாதிரி. இதுகளாலதான் கவனமா இருக்கோணும் எண்டு சொல்லுறது.

மக்கள் மாட்டு மந்தைகள், இதுகளை இப்பிடியே வைச்சிருப்பம் எண்டு நினைக்கிற மனிசர் கூடப் பரவாயில்லை. ஆனால் தங்கட சுயலாபத்திற்காக சனதின்ர தரத்தை வேணுமெண்டோ அல்லது அக்கறைப்படாமலோ இன்னும் கீழ இறக்க நினைக்கிற எல்லாருமே அந்தந்த சமூகத்தில இருக்கிற இனத் துரோகிகள். கனபேர் இங்க ஏறி விழுந்து கொண்டு வருவியள் இப்ப.

பத்தியெரியுது எனக்கு உள்ளுக்குள்ள. எங்கட சமூகத்தை சர்வதேசம் எப்பிடிப் பாக்குது தமிழர்கள் எண்டால் அவர்களுக்குள்ள எந்த விதமான கணிப்பு ஏண்டு வரும் எண்டு இங்க எத்தினை ஊடகம் அக்கறைப்படுது. சும்மா பாணும் பருப்புக்கறிக் கதையையும் கதைச்சுக் கொண்டு இருந்தா எப்பிடி? மேற்குலகில இருக்கிற எங்களுடைய சிந்தனை எப்படி இருக்கிறது.

மேற்குலகு எண்டு நான் சொல்லுறதுக்கான காரணம் ஊரில நாலு சனத்தோட பழகின நாங்கள் இங்க நாப்பது நாட்டுச் சனத்தோட பழகிறம் எங்களில வந்த மாற்றம் என்ன? சொல்லுங்கோ? வெள்ளையன் உதவி செய்தா தங்கமான மனிசன் எண்டுவம் அவனே அடுத்த நாள் ஏதாவது கூடாதது செய்தா அந்த நாய் றேசிஸ்ட்டா எண்டுவம். இதுக்கும் புலம்பெயர் ஊடகங்களுக்கும் என்ன சம்பந்தம் எண்டு கேப்பியள்.

அந்தக் காலத்தில ஒரு நாட்டை இன்னொரு நாடு பிடிச்சுதெண்டா முதலில என்ன செய்வாங்கள் தெரியுமே? ஓடிப்போய் இருக்கிற எழுத்தாளர்களை எல்லாம் பிடிச்சு அடைச்சுப் போடுவாங்கள். வெளியில விட்டால் இவங்கள் என்னத்தையாவது எழுதி சனத்தை விழிப்படையச் செய்து போடுவாங்களாம். அன்றைய எழுத்தாளர்களுடைய வேலையை 100% வீதம் செய்யா விட்டாலும் 50% இந்த ஊடகங்கள் செய்யலாம் தானே. ஆருக்கு? எங்கட சனத்துக்குத்தானே! சரி செய்யமாட்டியள் விடுங்கோ. ஏனப்பா மழுங்கடிக்கிறியள். இதுக்குப் பிறகும் என்ன இனத்துரோகி எண்டால் மயிரக் கவலைப்பட்டன் நான்.

- *முனியர்*

### இங்குள்ள பேச்சு ஆங்கிலத்தை அப்படியே தமிழில் மொழி பெயர்த்தால் எப்படி இருக்கும்?

Are you nut – நீங்கள் கொட்டையா?

What's up man -- மேலே என்ன உள்ளது மனிதா?

Hey cool man -- ஏய் குளிர் மனிதா !

Son of a gun -- துப்பாக்கியின் மகனே

Yo, baby, what's up? -- குழந்தை யோ, மேலே என்ன உள்ளது?

Don't mess up with me dude – என்னுடன் அசிங்கம் பண்ணாதே, ஏய் தம்பி.

Check out this man – இதை சோதனை செய்து பார், மனிதா.

Listen buddy, that chick's mine, okay – கேளு நண்பா, அந்த (கோழி) குஞ்சு என்னுடயது, சரியா !

Hey Good looking, What's cooking? – ஏய் நன்றாய் இருப்பவளே, என்ன சமயல்?

General Body meeting -- பொதுவான உடல் சந்திப்பு.

Keep in touch -- தொட்டபடி இருக்கவும்.

This food is heavy -- இந்த உணவு பாரமாக உள்ளது.

That song is sick -- அந்தப் பாடல் நோய் வாய்ப் பட்டுள்ளது

Have a nice day! -- ஒரு நல்ல நாளை எடுத்துக் கொள்ளவும்

- *வ.ஷங்கர்*

### மல்லாக்கப் படுத்து யோசிக்க வேண்டிய விசயம்

டீ கப்புக்குள்ள டீ இருக்கும்..ஆனா

World கப்புக்குள்ள World இருக்குமா?



# சினித்துளி

## குண்டுப்பையா



'காதலில் விழுந்தேன்' படத்தின் கதாநாயகனாக நடிக்கும் நகுலன் நடிகை தேவயானியின் தம்பி! ஏற்கனவே 'போய்ஸ்' படத்தில் நடித்திருக்கும் இவரை இப்போது பார்த்தால் எவராலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. காரணம், போய்ஸ் படத்தில் குண்டுப்பையனாக இருந்த நகுலன், இப்போது சுமார் இருபத்தைந்து கிலோ எடையைக் குறைத்து ஸ்மார்ட்டாகி விட்டதுதான். ஆறு மாதங்களுக்கு மேலாக கடுமையான உடற்பயிற்சி செய்ததோடு, உணவிலும் கடுமையான கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து உடல் எடையைக் குறைத்திருக்கிறார் நகுலன்! மட்டுமல்ல, படத்திற்காக தன்னை முழுமையாய் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்.

## போராட்டம்



ரஜினியின் சிவாஜி படம் பரபரப்பாக தயாராகி வரும் வேளையில்., ரஜினியை எதிர்த்து ரஜினி ரசிகர் மன்றத்தை சேர்ந்தவர்களே சமீபத்தில் குற்றாலம்-தென்காசி பகுதிகளில் ஆர்ப்பாட்டம் உண்ணாவிரதம் இப்படி போராட்டம் செய்துள்ளனர். இதற்குக் காரணம், ரஜினிக்குப்பின் ஃபீல்டுக்கு வந்த விஜயகாந்த், அரசியல் கட்சி ஆரம்பித்து, தமிழக சட்டமன்றத்திலும் ஒரு இடம் பெற்று, தன் பவரைக் காண்பித்து விட்டார். ஆனால், எப்பொழுதோ எதிர்பார்க்கப்பட்ட ரஜினி இன்னமும் முடிவெடுக்காமல் மவுனம் காத்து வருவதுதான் இப்படி அவரது ரசிகர்கள் போராட்டம் நடத்தக் காரணமாம். அடப் போங்கடா வீட்டில ஏதாவது வேலை இருக்கும், அதப் பாருங்கடா!

## திருமணம்



வருகிற டிசம்பர் ஒன்றாம் தேதி அருண்குமாருக்கு திருமணம். மணமகள் மதுரை மருத்துவரின் மகளான ஆர்த்தி. பி.எஸ்சி. சைக்காலஜி பட்டதாரி. வருகிற செப்டம்பர் பதினொன்றாம் தேதி (இதே தினம் தான் சூர்யா - ஜோதிகா திருமணமும்) சென்னையிலுள்ள நட்சத்திர ஹோட்டலில் அருண்குமார் - ஆர்த்தி திருமண நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது. திருமணம் எங்கு, வரவேற்பு நிகழ்ச்சி எப்போது என்று விரைவில் அறிவிப்பு வரும். சூர்யா - ஜோதிகா, செல்வராகவன் - சோனியா, அருண்குமார் - ஆர்த்தி என்று இந்த வருட இறுதியில் மூன்று நட்சத்திர ஜோடிகளுக்கு திருமணமாகிறது. இன்னும் வேறு யாராவது இந்த திருமண ஜோதியில் சேர இருக்கிறார்களோ?

## அரசியல்

த்ரிஷாவுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் ரசிகர் மன்றம் துவக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று திடீரென த்ரிஷா ரசிகர் மன்றத்தின் கொடியை அறிமுகப்படுத்தி உள்ளனர். சென்னையில் சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும் படம் திரையிடப்பட்டுள்ள தியேட்டர்களில் மன்றக்கொடியை ஏற்றி இனிப்பு வழங்கினார்கள் த்ரிஷா ரசிகர்கள். பிறகு, சென்னை மடிப்பக்கத்தில் உள்ள ஒரு மனவளர்ச்சி குன்றியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு விருந்து கொடுத்தனர். 10 ஏழை மாணவர்களுக்கு கல்லூரியில் படிக்க நிதி வழங்கினர். புதிய கொடி அறிமுகப்படுத்தி இருப்பது, அரசியல் பிரவேசத்துக்கு த்ரிஷா தயாராகிறாரோ என்ற சந்தேகத்தை கிளப்பி இருக்கிறது.

## சிறுதுளி!

தெலுங்கில் இருபது நாட்களுக்கு முன்பு பொம்மரிலு என்ற தெலுங்கு படம் வெளியாகி சக்கை போடு போடுகிறது. இப்படத்தின் தமிழ் உரிமைக்கு கடும் போட்டி நிலவியது. பெரிய கம்பெனிகள் இப்படத்தை வாங்க முயற்சித்தன. ஆனால் தமிழ் ரீமேக் உரிமையை விஜய் கைவசப் படுத்தி உள்ளாராம்.

❖ ❖ ❖

ஜோதிகா-சூர்யா நடித்த சில்லுன்னு ஒரு காதல் ரிலீசுக்கு தயாராக உள்ளது. செப்டம்பர் 11-ந் தேதி இவர்கள் திருமணம் நடக்க இருக்கிறது. எனவே திருமணத்தையொட்டி படத்தை வெளியிட்டால் பேசப்படும் என்று கருதி செப்டம்பர் 7-ல் ரிலீஸ் செய்கிறார்களாம்.

❖ ❖ ❖

புதுக்கோட்டை நாயகி அபர்ணா தற்போது நெஞ்சில் ஜில்ஜில் படத்தில் நடித்து வருகிறார். அடுத்து தனது சொந்த படக்கம்பெனி மூலம் ஜீவன், ரிச்சர்ட், பிரசன்னா ஆகியோருடன் ஜோடியாக நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார். பேச்சு வார்த்தை நடக்கிறது.

❖ ❖ ❖

திருமலை ஆர்ட்ஸ் என்ற பட நிறுவனம் பிரம்மாண்டமாகத் தயாரித்து வரும் படம் மகா. விக்ரம், ஹரிப்ரியா, விஜயா, ரம்யாஸ்ரீ, அல்போன்ஸா, ஜெகன், சீனிவாசன் மற்றும் பலர் நடிக்கிறார்கள். பாபிலோனா சிறப்பு நடனம் ஆடுகிறார். பல பாடல் களுக்கு கதை வசனம் எழுதிய கவுதம் படத்துக்கு வசனம் எழுதுகிறார்.

❖ ❖ ❖

ஜீவா நடித்த ஈ, பொறி ஆகிய இரு படங்களும் ரிலீசுக்கு தயாராக உள்ளன. இவற்றில் எந்த படத்தை முதலில் விடுவது என்று ஜீவா குழப்பத்தில் உள்ளாராம். அவர் நடித்து சமீபத்தில் வெளியான அரண் நன்றாக ஓடுகிறது. எனவே அடுத்த படமும் ஹிட்டாக வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறார். எனவே இரண்டில் நல்லதை முதலில் ரிலீஸ் செய்யும் திட்டத்தில் உள்ளாராம்.

❖ ❖ ❖

அஜீத் நடிக்கும் ஆழ்வார் படப் பிடிப்பு ஐதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் தொடங்கியுள்ளது. இங்கு ஆஸ்பத்திரி செட் அமைக்கப்பட்டுள்ளது. அதில் அஜீத், அசின், விவேக் நடிக்கும் காட்சிகளை படமாக்கினார் இயக்குனர் செல்வா. படத்தில் எதற்கும் அஞ்சாத தைரியசாலியாக வருகிறார் அஜீத், பயம் அறியான் என்று படத்துக்கு விளம்பரம்செய்துள்ளார் தயாரிப்பாளர் மோகன் நடராஜன்.



## "ஏ.ஆர்.ரஹ்மான்"

*தமிழ்நாட்டில் இருக்கிறீர்கள் திடீரென பம்பாயில் இருக்கிறீர்கள் மறுநாள் அமெரிக்கா எங்காவது இருக்கிறீர்கள் எப்படி இது உங்களால் முடிகிறது?*

ஒரே வார்த்தையில் சொல்வதானால் அர்ப்பணிப்பு. எடுக்கிற வேலைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும் அல்லவா அதனால் ஒரே இடத்தில் இருக்காமால் அங்கே இங்கே என்று சுற்ற வேண்டி இருக்கிறது

*சினிமாப் பாடலுக்கு இருக்கிற கேள்வி அல்பங்களுக்கு இல்லையே ஏன்?*

மக்களுக்கு அதன்மேல் நம்பிக்கை இல்லை. அது தரமானதா என்று கூடத்தெரியாது. ஒரு நிறுவனத்தினை உருவாக்கி அதன்மேல் நம்பிக்கை வரும்படி நல்ல படைப்புக்களை வெளியிடவேண்டும். பின்னர் அந்த நிறுவனம் மூலம் இலகுவாக அல்பங்களைப் பிரபல்யமாக்கலாம்.

*எந்தப் பாடல் ஆசிரியரை உங்களுக்குப் பிடிக்கும் யாருடன் வேலை செய்ய ஆசைப்படுகிறீர்கள்?*

அப்படி என்று யாரையும் சொல்ல முடியாது. வாலியுடன் வேலை செய்வது ஒருவிதம். சில்லுன்னு ஒரு காதல் ஒரு நாளிலேயே எழுதி முடிக்கப்பட்டது. வைரமுத்து தனக்கு திருப்தி தரவேண்டும் என்பதால் சில நாட்களுக்குப் பின், ஏன் சில வாரங்களுக்குப்பின் கூட எழுதித் தருவார். ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி.

*இளையராஜாவுடன் வேலை செய்த காலம் குறித்தது?*

ஒரே வரியில் சொன்னால் அது ஒரு இசைப் பட்டறை. அப்படி ஒரு உணர்வு அங்கு இருக்கும், குறிப்பாக ஒழுங்கு முறை.

*இப்பொழுது நீங்கள் இசையமைக்கும் படங்களில் ஏதாவது ஒரு பாடலாவது உங்கள் குரலில் வருகிறதே நீங்களே பாடலைத் தேர்ந்தெடுக்கிறீர்களா?*

இயலுமானவரைக்கும் ஒளிந்து பார்க்கிறேன் இயக்குனர்கள் என்னை விட்டபாடில்லை. எனக்கு புதிய பாடகர்களை அறிமுகப்படுத்தவே விருப்பம்.

*எப்படிப் பாடகர்களைத் தேர்ந்தெடுக்குறீர்கள்?*

பொதுவாக நான் புதிய பாடகர்களை ட்றக் பாடவே அழைக்கிறேன் அதாவது ஓர் உதாரணப் பாடல் போல, இயக்குனருக்கு அந்தக் குரல் பிடித்தால்? அவரே அப்பாடலை பாடுவார் இல்லையேல் வேறு ஒருவரைப் பிடிக்க வேண்டும்

*நீங்கள் இன்று சர்வதேச அளவில் பேசப்படுகிற ஒரு தமிழர். இன்ரநஷனல் பிகர் என்பார்களே அது. இன்னிலையில் இதை எப்படி உணருகிறீர்கள்?*

நானும் ஒரு சாதாரண மனிதன்தான் எனக்கும் உணர்வுகளும் என்னளவிலான பிரச்சனைகளும் இருக்கிறது. கிராமம், நகரம், சர்வதேசம் எல்லாம் ஒரு மனிதன்தான் நான்.

SATHY ESTATES LTD.
'To Buy or Sell your Home'
'To Rent or Let your Home'
Residential Sales and Lettings.
In London Boroughs of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham & Westminster.
We always have a large selection of houses & flats to choose from, to meet your needs!
www.sathy.com
Harlesden Office
220 High Street
Harlesden, London
NW10 4SY
Tel: 020 8961 9613
Fax: 020 8961 9614
Stanmore Office
306 Honeypot Lane
Stanmore, Middx.
HA7 1LY
Tel: 020 8204 9444
Fax: 020 8204 2666
Harrow Office
117 Headstone Road
Harrow, Middx.
HA1 1PG
Tel: 020 8861 1110
Fax: 020 8861 1011

# சினிமா

## Lady in the Water




நாம் கதை சொல்லும்போது சின்னப் பிள்ளைகள், நம்மோடு கூட வருவார்கள். ஈடுபாட்டோடு கேள்விகள் கேட்டு தம்மை புதிய அனுபவங்களுக்கு உட்படுத்திக் கொள்வார்கள். அதே சமயம், சமாளிக்க முடியாத இடக்குமடக்கான கேள்விகளையும் கேட்பார்களாயிருக்கும். Lady in the Water- இல் மனோஜ் சியாமளன், தன் பிள்ளைகளுக்குச் சொன்ன கதையைப் படமாக்கியிருக்கிறார்.

Finding Neverland- இல் ஜேம்ஸ் பாரீ, சிறுவர்களோடு கதைகளை உருவாக்கி விளையாடுவதுபோல, மனோஜ் சியாமளன் பார்வையாளர்களோடு விளையாடியிருக்கிறார் என்று சொல்லலாம். கதையென்று பார்த்தால், மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக வந்த ஒரு நார்ஃப்-ஐ பிலடெல்ஃபியாவில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் வாழும் மனிதர்கள் காப்பாற்றி அனுப்பி வைக்கிறார்கள். படத்தை நகர்த்திச் செல்லப் பயன்படுவது ஒரு கொரிய நாட்டுச் சிறுபிள்ளைகளுக்கான கதை. வழமையான மனோஜ் சியாமளன் பட விதயங்களைக் காணக்கிடைக்கவில்லை.

சந்தோஷமாகவிருந்தது. Wide Awake தொடங்கி எல்லாப் படங்களிலும் இருக்கும் திடீர் முடிவுத் திருப்பங்கள் இதில் இல்லை. திகில்க் காட்சிகள் இல்லையென்றே சொல்லலாம். ஓரிரு முறைகள் இருந்தாலும், அப்படியொன்றும் நன்றாக வரவில்லை. அடுக்குமாடிக்குடியிருப்பில் வாழும் மனிதர்களில் சில பாத்திரப்படைப்புகள் சுவாரசியமாக இருக்கின்றன. குறிப்பாக, கிராஸ்-வேர்ட் புதிர்களில் ஈடுபாடுள்ள அப்பாவும் பிள்ளையும். நார்ஃபாக நடித்திருக்கும் Bryce Dallas Howard நன்றாகச் செய்திருக்கிறார். அவரை மனதில் வைத்து உருவாக்கப்பட்ட பாத்திரமென்பதால் பெரிய கஷ்டமிருந்திருக்காது என்று நினைக்கிறேன். Sideways, Cindrella Man படங்களைப்போல இந்தப்படமும் Paul Giamattiக்கு நல்ல படம். ஆங்காங்கே Sideways படத்தை நினைவுபடுத்தினாலும் சாதாரணர் வேடத்துக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறார்.

படத்துக்கு என்ன நடந்தாலும், Cleveland Heepஆக நடித்த போல் கியாமட்டிக்கு நல்ல வேடம். நடிக்கக் கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தியிருக்கிறார். திரைப்பட விமர்சகர் வேடமொன்றும் படத்தில் இருக்கிறது. அந்தப் பாத்திரம் பேசும் வசனங்கள், விமர்சகர்களுக்குக் கோபமேற்படுத்தலாம். முக்கியமாகக் கடைசியில் அந்தப் பாத்திரம் பேசும் வசனங்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் விமர்சகர்களைக் கிண்டலடித்திருக்கிறார் சியாமளன். அந்தப் பாத்திரம் பேசும் போதெல்லாம், சிக்ஸ்த் சென்ஸ் படத்துக்கு விமர்சனம் எழுதிய N.Y.Times விமர்சகர் நினைவுக்கு வந்தது - என்னுடைய பக்கசார்பினால் இருக்கலாம்.

படத்தில் படுத்தியெடுக்கும் விதயங்கள் நிறைய இருக்கின்றன. மனிதர்களில் முக்கியமானவர் சரிதா சௌத்ரி. மனோஜ் சியாமளனும் படத்தில் முக்கிய வேடத்தில் வருகிறார். இவருக்கென்னத்துக்கு இந்த விஷப்பரிட்சை, நடிக்க ஆசையிருந்தால் ஏதாவது சிறுபாத்திரத்தில் வந்துபோவதுதானே என்று தோன்றுகிறது. பார்க்க அசப்பில் என் சகோதரனைப்போல இருந்ததால் ரொம்பவும் திட்ட முடியவில்லை. அவ்வப்போது தோன்றி, கதையை நகர்த்திச் செல்லும் கொரியப் பெண்மணி, ஒரு கொரிய (தெற்காசிய என்றும் வைத்துக் கொள்ளலாம்) ஸ்டீரியோடைப் பாத்திரமாக அமைத்திருந்தது ஏமாற்றமாக இருந்தது. அதுவும், கதையை சௌகரியமாக ஆங்காங்கே தொங்க விட்டுவிட்டு இந்தப் பெண்மணியிடம் வருகிறது திரைக்கதை.

ஒரு கட்டத்துக்கு மேல், படத்தில் அதன் குழறுபடிகளையும் தாண்டி ஆழ்ந்துபோனேன். அப்படிப் போகும் போதெல்லாம், அதிலிருந்து என்னை மீட்டு இரட்சித்தது மனோஜ் சியாமளன் உருவாக்கிய அன்னிய உருவங்கள்.

அடுக்குமாடிக் குடியிருப்புக்கு வெளியே இருக்கும் போதாவது கொஞ்சம் நம்ப முடிகிறது. படத்தின் கடைசிக் கட்டங்களில்.. - மன்னிக்கவும்! என்னால் நம்ப முடியவில்லை.

கடைசியாக: என்ன சொல்வது? மனோஜ் சியாமளன் புதியதொரு முயற்சியில் ஈடுபட்டிருக்கலாமோ என்று மனதைத் தேற்றிக் கொள்ளத் தோன்றுகிறது. அசலான விதயங்களை விட நம்பக்கூடியமாதிரி போலியான விதயங்களை உருவாகக்கூடிய தொழில்நுட்பம் இருக்கும்போது (உதா: டைனோசர் தொடங்கிப் பல விதயங்கள்.) எதற்கு ameturish ஆக அன்னிய உருவங்களை உருவாக்கினார் என்று தெரியவில்லை. Signs படத்து உருவங்களும் அப்படி இருந்தது நினைவிருக் கலாம்.

- *மதி கந்தசாமி*



விமர்சனம்

## வேட்டையாடு விளையாடு

கமல்ஹாசனுக்கு காக்கி சட்டையே பொருந்தாது ஆனாலும் காக்கி சட்டை சூரசம்ஹாரம் குருதிப்புனல் என்ற எல்லா படங்களிலுமே அவ்வளவாக காக்கி சட்டையே போடாமல் ஒப்பேத்தி விடுவார்.

அதை இந்த படத்திலும் கமல் அவ்வாறே சமாளித்திருக்கிறார். அதுவும் துப்பறியும் போலீஸ் அதிகாரியாக நடிப்பவருக்கு காக்கி உடுப்பு அதிகம் தேவையில்லைதானே? காவல் துறையைச் சேர்ந்த நேர்மையான அதிகாரி ராகவனாக கமல் தன்னுடன் வேலை பார்க்கும் பிரகாஷ்ராஜின் மகளின் கொலையில் ஆரம்பித்து நியூயோர்கில் ஆரோக்கிய ராஜாக வரும் பிரகாஷ்ராஜின் கொலை விசாரணையில் தொடர்ந்து வில்லன்களை துப்பறிந்து கண்டுபிடிப்பதில் முடிகிறது. நேர்மையில் வழக்கமான படம் போலவே மனைவி கயல்விழியாக வரும் கமலினி முகர்ஜியை இழந்து விடுகிறார். நியூயோர்கில் ஆராதனாவான ஜோதிகாவின் சந்திப்பு காதலில் முடிகிறது. தெனாலிக்குப்பிறகு மீண்டும் கமல் - ஜோதிகா இணைந்துள்ளனர். பாட்டைத் தவிர மற்ற எந்த இடங்களிலும் காதல் காட்சி இல்லை. கமல் முகம் அப்படியே இருந்தாலும் உடல் வயசைக் காட்டிக் கொடுக்கதான் செய்கிறது. இதில் குட்டியாக தொப்பை வேறு.

நன்றாகவே எழுதி இயக்கியிருக்கிறார் கௌதம் மேனன் அவருக்கு சரி ஜோடியாக அமைந்து விட்டனர் ஒளிப்பதிவாளர் ரவி வர்மனும் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜும்.

படத்தில் இரத்தக் காட்சிகள் அதிகம். காக்க காக்க படத்தில் சூர்யாவின் நெருங்கிய நண்பராக வரும் அந்த போலீஸ் அதிகாரி தான் இந்த படத்தின் வில்லன் அமுதன். அமுதன் மற்றும் இளா இரண்டு வில்லன்களின் நடிப்புத்தான் படத்தில் நச்சென்று நம் மனதில் பதிந்து நிமிர்ந்து உட்கார வைக்கிறது. வெறி கொண்ட பார்வை அவர்கள் வரும் போதெல்லாம் அடிமனதில் ஒரு திகில் ஏற்படுகிறது.

அது ஏனோ தெரியவில்லை அடிதடி படமென்றாலே ஒரு ஐட்டம் நம்பர் அவசியமாகிவிடுகிறது. அதுவும் கமல் படத்தில் ஒரு முத்த காட்சியாவது எதிர்பார்த்து வரும் அன்பர்கள் ஏமார்ந்து விடாதபடி "நெருப்பே சிக்கிமுக்கி" பாடல் அமைந்துள்ளது. கண்டிப்பாய் எதிர்பார்ப்பை ஏமாற்றாத பாடல்கள். ஆனால் பாடல்கள் எல்லாம் ஒரே மாதிரியாய் இருப்பது போல் தோன்றுகிறது.

பெரிய பெரிய கட்டிடங்கள் வண்ண மயமான வாகனங்கள் என்று கேமிரா நியூயார்க்கை ஒரு வலம் வந்தாலும் பெரிய பிரமிப்பாக ஏதும் தோன்றவில்லை எல்லாம் UKயிலும் இருப்பதாலோ என்னவோ. மேட்ரிக்ஸ் பிளேட் என்ற படங்களுக்காக உபயோகித்த அதே உபகரணங்கள் என்றெல்லாம் செய்தி வந்தமையாலும் மின்னலே காக்க காக்க என சாதனை படைத்த கௌதம் - ஹாரிஸ் ஜோடி மூன்றாவதாய் இணைந்த படம் என்பதாலும் அதிகமாக எதிர்பார்த்து ஏமாந்த உணர்வு.

படத்தின் டைட்டில்களைக் கவனித்தேன் ஏனோ எல்லாம் ஆங்கிலத்திலேயே வந்தது பெயர்கள் மட்டும்தான் ஆங்கிலத்தில் வந்து மறைந்த பிறகு ஒப்புக்காக தமிழிலும் காட்டப்பட்டது. நாள் கிழமைகளும் ஆங்கிலத்திலேயே காட்டினார்கள். ஒருவேளை எல்லா தமிழர் களுக்கும் ஆங்கிலம் தெரியாமல் இருப்பத் தில்லை என்று நினைத்ததாலோ என்னவோ.

படம் முடிந்து வெளியே வந்தவுடன் கேட்டது: நம் ஊரிலயே முடிச்சிருக்கலாம் (தமிழ் நாடு) நியூயார்க் வரைக்கும் போகவே அவசியமில்ல. இதை கேட்கும் போது குங்குமத்தில் படித்த சுமார் நான்கு கோடி ரூபாய் நஷ்டத்தில்தான் படத்தை வெளியிடப் போகிறாராம் நாராயணன் என்பதுதான் நினைவுக்கு வந்தது. உண்மையில் காசை கரியாக்கியிருக்கிறார்கள் நியூயார்க்கில்.

ஆங்கில பட சாயலில் ஒரு சாதரணமான படம். திரையரங்கில் பார்த்தால் படம் சுமார் வீட்டில் குறுந்தகட்டில் பார்த்தால் படம் போர். மற்றப்படி சொல்லும் அளவுக்கு ஒன்றும் இல்லை. மொத்தத்தில் ஒரு குறு நாவல் படித்து முடித்த திருப்தி மட்டுமே. கமலுக்காக ஒருமுறை பார்க்கலாம்.

- *ஜெசிலா*

PLASTERING
PLUMBING
TILING
PAINTING & DECORATING
GENERAL MAINTENANCE
ELECTRICAL WIRING
CENTRAL HEATING

Nathan Repairs & Maintenance

உங்கள் வீட்டின் எந்த
திருத்த வேலையானாலும்
உங்கள் மனதிற்கு பிடித்தபடி உத்தரவாதத்துடன்
செய்துகொள்வதற்கு உடன் நாடுங்கள் !!!



for a friendly service & free estimates call
Nathan 07944 689 567 07832 247 085

# e-TOURS LTD.



## A POWERFUL NEW BEGINNING
சின்னச் செலவில் சிறகடிக்கலாம்...

| | | |
|---|---|---|
| London - Colombo | Return from | £ 210.00 + tax |
| London - Madras | Return from | £ 210.00 + tax |
| London - Bangkok | Return from | £ 210.00 + tax |
| London - Hongkong | Return from | £ 210.00 + tax |
| London - Singapore | Return from | £ 210.00 + tax |
| London - Karachi | Return from | £ 210.00 + tax |
| London - Bombay/Delhi | Return from | £ 210.00 + tax |
| London - Dubai | Return from | £ 210.00 + tax |
| London - toronto | Return from | £ 210.00 + tax |





All Major Credit Cards Accepted

**Airport Transfer**
*London / Colombo*

**Package Holidays**
*to Sri Lanka, India, Maldives, Dubai*

*Canada from* **£199**

**Sri Lanka five star**
**7** *nights from* **£510**
*including flights*

TRAVEL INSURANCE, FLIGHTS TO JAFFNA INDIAN VISA ARRANGED HOTELS ARRANGED WORLDWIDE



**Talbot House**
*204 / 226 Imperial Drive,*
*.Rayners Lane*
*Harrow*

*Tel:* 020 8429 5200
020 8429 5201
*Fax:* 020 8429 5203
*Mobile no:* 0777 1788 598 - *Ragu*

Agent for ATDL holders
Email: info@e2ours.co.uk , Web: www.e2ours.co.uk

# Abilas Satellite



உங்களுக்கு விரும்பிய சகல தமிழ் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான Digital தொழில்நுட்பத்துடன் பொருத்திக் கொடுக்கப்படும்.

Special Offer

**Sun TV Full Insulation ~~£279~~ £249**
**(including 1 year card)**

- புதிய இணைப்புக்கள்
- திருத்த வேலை
- சகல அறைகளிலும் தொலைக்காட்சி இணைப்புக்கள்







P.Mathy
**07939 199 822**
abilassat@yahoo.co.uk

# MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors and Administrators for Oaths
M.Markandan LLB  A.Uddin LLB(Hons) MA. LLB Phd-RFL
Tamil House, 720 Romford Road, London E12 6BT



01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win No Fee அடிப்படையில்

We specialise in
For all your needs in immigration (All aspects upto house of lords).
Commercial & Residential Conveyancing, Employment, Civil Litigation
Consumer Problems, Last will, Power of Attorney, Sponsorship Declaration
HSMP, Workpermits

Tel: 020 8514 8300 / 07830 285 634
Fax: 0208 514 8381
Email: info@msssolicitors.com

Contact
Markandan: 07956 586 576
Uddin: 07957 455 670

# SINDU MAHAL
## EVENT PLANNERS LTD

274B Barking Road, East Ham, London, E6 3BA
Tel: 020 8477 1356 Mob: 07951 418 145




Specialist Event Planners
Fulfills the tastes, standards and cultural customs of our contemporary generation

**SINDU MAHAL**
**Party Services**
**020 8477 1356**



**SINDU MAHAL**
**Restaurant**
**020 8471 6226**



### DECORATION
(All types of functions)
DJ with club style lighting
Garlands
Boquets

### INVITATION CARDS
Sweet/Cake boxes
Marquee hire
Cutlery/chair hire

### FOOD CATERING
(All types of foods)
Cakes

Midland (North & South) மக்களுக்கான சேவையை இலகுபடுத்துமுகமாக
புதிய தொடர்புகளுக்கு:
திவா- 07852 385 449
01782 845 819
39 Hartshill Road, Stoke
Stoke on Trend, Hertfordshire ST4 7QT
வேண்டிய வடிவமைப்புகளை தெரிவு செய்ய வேண்டிய Catalogue மற்றும் அனைத்து வசதிகளும் இவ்விடம் செய்யப்பட்டுள்ளது.

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் அரங்கேற்றம் போன்ற அனைத்து விழாக்களுக்குமான அலங்காரங்களை புதிய வடிவில் செய்து தரப்படும்.

50 இருக்கைகள் கொண்ட Party Hall உங்கள் நிகழ்வுகளிற்கு தகுந்தாற்போல் சோடனை செய்து தயார்படுத்தி தரப்படும்
100 இடியாப்பம் £8 மட்டும்!

### ARRANGEMENT OF:
Venues , Priest
Servicemen
Merla Katcheries
Videography & Photography

தரமான பாகம்! தவறாத நேரம்! தரமோ நிரந்தரம்!